
கல்கி

KALKI 29-12-1974 60 காசு



யூகோபாங்கின் உதவிக் கரம்-



இப்பொழுது உங்கள் டெபாஸிட், 14% அதிகமாக பயனுடைய வட்டியைப் பெற முடியும்

உங்கள் சேமிப்புகளை வளர்க்க விரும்பினால் யூகோபாங்க், எல்லா வாய்ப்புகளையும் வழங்குகிறது. இப்பொழுது உங்கள் ஃபிக்ஸட் டெபாஸிட் வட்டியை, ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்துடன் இணைப்பது மூலம் 14%க்கும் அதிகமான பயனுடைய வட்டியைப் பெற முடியும். அல்லது உங்களது டெபாஸிட்டை எங்களது கேஷ் டெபாஸிட் ஸர்டிஃபிகேட் திட்டத்தின் மூலம் 15 வருடங்கள் பூர்த்தி ஆன பிறகு நான்குமடங்குக்கு மேல் அதிகப்படுத்திக் கொள்ளலாம். வட்டி வருமானமோ 28%க்கு மேல்!

இவை தவிர, எங்களது துரிதமான - நேரடியான சேவைகளுடன் சேமிப்புகள், ஃபிக்ஸட் டெபாஸிட் மற்றும் ரெக்கரிங் டெபாஸிட் திட்டங்களும் எல்லா யூகோ பாங்க் கிளைகளிலும் இயங்கிவருகிறது.

விவரங்களுக்கு அருகிலுள்ள யூகோ பாங்க் கிளையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யுனைடெட் கமர்ஷியல் பாங்க்
தாங்களே தங்களுக்கு உதவ மக்களுக்கு லாபகரமாக உதவுகிறது

UCOC-39 TAM

பொங்கல் திருநாள் சிறக்க... ராசி!



பட்டுப் புடவைகள்,
பட்டு வேஷ்டிகள்,
கைத்தறி நூல் சேலைகள்,
ரெடிமேட் ஆடைகள்!
புதிய டிசைன்கள்!
புதிய வண்ணங்கள்!



ராதா சில்க்கின்
ராசி உன்னத
வாழ்வுக்கு ஆசி

ராதா சில்க் எம்போரியம்
சென்னை-600004

சார்பு நிறுவனம்
ராதா சில்க்ஸ்
'தன்பில்டிங்ஸ்', மவுண்ட் ரோடு,
சென்னை-600002

பம்பாய் கிளை
ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹால்;
86-B, மரைன் டிரைவ், G. ரோடு
பம்பாய்-400002

இயல்பாகவே தூய நறுமணம் கொண்ட சோப்
மைசூர் சாண்டல்

MCA/MSIL/55/4




வயது 16 அனிதாவுக்கு — காண்பவர் கவனம் கவரும் எழில் தனக்குண்டென அறிகிறாள் அவள்.
அவள் உபயோகிப்பது: மைசூர் சாண்டல்

மகிழ்ச்சி மிக்க மணமகளாகும் எழில்மிகு மாலாவுக்கு வயது 22.
அவள் உபயோகிப்பது: மைசூர் சாண்டல்

துறுதுறு வென்ற இரண்டு குழந்தைகள் 30 வயது நளினிக்கு. மெருகூட்டி அழகு செய்துகொள்ள நேரமில்லை அவளுக்கு. அவள் உபயோகிப்பது: மைசூர் சாண்டல்

தூய தைலச் சத்துக்கள் இம் மூன்று அழகிகளின் சருமத்தையும் மிளிரச் செய்கிறது.



உங்கள் சருமம் மாசு மறுவற்று மிருது வாக மிளிர மைசூர் சாண்டல் சோப்

மைசூர் சாண்டல்

தயாரிப்பாளர்கள்: கவர்மெண்ட் சோப் பாக்டரி
பூரண விற்பனையாளர்கள்: மைசூர் சேல்ஸ் இன்டர்நேஷனல் லிமிடெட்
பெங்களூர், பம்பாய், புதுடில்லி, கல்கத்தா, சென்னை, செகந்திராபாத்.

கல்கி

ஆனந்த, மார்கழி, 14 ★ டிசம்பர் 29, 1974

○ ○ ○

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





நேயர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

75ம் ஆண்டு பிறக்கும்தறுவாயில் ஆங்காங்கே நிலவும் பஞ்சநிலைமை பற்றிய செய்திகள் வந்து மகிழ்ச்சியைக் குலைத்தபோதிலும் இறைவன் கருணையில் நம்பிக்கை இழக்காமல் மனமுருகிப் பிரார்த்திப்போம்.

கல்கி ஸ்தாபனத்தின் சார்பில் அட்டைப் படத்திலிருக்கும் சிறுமிகள் நேயர்களின் இல்லங்களில் மங்கள தீபங்கள் ஏற்றி வைக்க வருகிறார்கள். நம்பிக்கை ஒளி பரவட்டும். வறுமை, பஞ்சம், அறியாமை, அச்சம் முதலான இருட் பேய்கள் தமிழகத்தை விட்டு ஓடிமறையட்டும். வாழ்வு சிறக்கட்டும்.

வண்ணப்படம்—வித்யாஸ்ரதா






அடுத்த இதழில்....

- நகர்வலம்: கொச்சி
- மாணவர் சக்தி மீண்டால்....
- லீஸன் சிரிப்பு
- தலையில் அமர்ந்து கொண்டா...? சிறுகதை





உங்களுக்காக பிலிப்ஸ் வழங்கும் இந்த அபூர்வமான மியூஸிக் ஸிஸ்டம் பல அரிய சிறப்புகள் கொண்டது...



இந்த பிலிப்ஸ் ஜீஎ:ப் 533 செய்து காட்டுவதை வேறெந்த ரெகார்டு பிளேயரும் செய்யமுடியாது.

மெயின்ஸ்- பாட்டரி ஸிஸ்டம் ஜீஎ:ப் 533




இதில் மோனோ இசைத்தட்டு நுண் பிரமாதமாக இருக்கும்; ஸ்டீரியோ கூடத்தான். இது ஸ்டீரியோ கார்ட்ரிஜ் மற்றும் அவுட்புட் வசதி கொண்டது. இதை உங்கள் ரேடியோவுடன் இணைத்துப் பாருங்கள். என்ன ஆச்சரியம்! இதோ ஸ்டீரியோ நடசர்.



ஸ்டீரியோவாகவும் மாற்றிக்கொள்ளலாம்

இதை ரேடியோ மூலமாக டேப்-ரெகார்டிங் செய்யலாம், புதிய செய்ததைத் திருப்பிக் கேட்கவும் பயன்படுத்தலாம். மோனோ, ஸ்டீரியோ, இரண்டுமே!

மெயின்ஸில் இயக்குங்கள்; அல்லது பாட்டரிகளில். மின்விசை நின்று விட்டால், இது தானாகவே பாட்டரிகளில் இயங்குகிறது.



இது எப்பொழுதும் ஒரு நிலையான வேகத்தில் இயங்குகிறது என்பதை நம்பலாம். இதை உறுதிப்படுத்துகிறது 'பிரிசல' 'எலெக்ட்ரானிக் ஸ்பீட் 'கவர்னர்'

இசைத்தட்டின் ஒலி முடிந்ததும், இது தானாகவே நின்றுவிடுகிறது. இது மட்டுமா? இதில் வால்யூம் மற்றும் தொனிக் கட்டுப்பாடுகளும், வெவ்வேறு 3-ஸ்பீடுகளும் உள்ளன.

இதை வீட்டிலும், வெளியிலும் இயக்கலாம். (இன்பமாகப் பொழுது போக்க, வசதியாக வெளியில் எடுத்துச் செல்லலாம் என்பதை எண்ணிப் பாருங்கள்!)

இதன் அழகிய தோற்றமே உங்களைக் கவர்ந்துவிடுமே! மரம், பொலிஸ்டைரீன் மற்றும் அலங்கார அலுமினியத்தில் அழகான அமைப்பு கொண்டது.

இத்தனை சிறப்புகளும் கொண்ட பிலிப்ஸ் மெயின்ஸ்-பாட்டரி ஸிஸ்டம் ஜீஎ:ப் 533-ஐ, இவ்வளவு குறைந்த விலையில், பிலிப்ஸ் தொழில் நுட்பத் திறன் மட்டுமே உங்களுக்கு வழங்க முடியும்.

இன்றே உங்கள் பிலிப்ஸ் வியாபாரியைக் காண்க.

பிலிப்ஸ்

OBM 3464 TM

தமிழகத்தில் பஞ்சம்!

எழுதவே கை கூசுகிறது.

படிக்கவே மனம் பதைக்கிறது.

காவேரி, தென் பெண்ணை, பாலாறு, வைகை, பொருநை என்று கவிதை, கதை இலக்கியங்களில் சிறப்புப் பெற்ற ஜீவநதிகள் பாயும் தமிழகத்தில் பஞ்சம் !

நெற்களஞ்சியம், அமுதசுரபி என்றெல்லாம் போற்றப்பட்ட தஞ்சை மாவட்டத்தை யுடைய தமிழகத்தில் பற்றாக்குறை! நமக்குத் தேவையானதை எடுத்துக்கொண்டு மிகுதியை மற்ற மாநிலங்களுக்கும் வாரி வழங்கி வந்த தமிழ் நாட்டில் இன்று பட்டினிச் செய்தி!

கல்கி

மலர் 34

இதழ் 22

தமிழ்த்திரு நாட்டினைப் பெற்ற-எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா— பாரதியார்

கடந்த நூறு ஆண்டுகளில் யாரும் கண்டறியாத அளவில் பெரிய பஞ்சம் தமிழக மக்களைத் துன்புறுத்தத் தயாராக இருக்கிறது. ஏற்கெனவே மாநிலத்தின் பல பகுதிகளில் மக்கள் சப்பாத்திக் கள்ளியைப் பிடுங்கி அதன் கிழங்கைப் புசிக்கத் தொடங்கி விட்டார்கள். அரிசி, தானியம் கிடைத்தாலும் அவை விற்கிற விலையில் வாங்கச் சக்தியற்றவர்களாய் வாடுகிறார்கள்.


பருவ மழை பொய்த்ததுதான் இந்த நிலைமை தோன்றக் காரணம் என்றாலும் தி. மு. க. அரசும் பெருமளவு பொறுப்பேற்கவே வேண்டும். முக்கியமாக, சாமானியரின் சக்திக்கு எட்டாத அளவுக்கு அரிசி விலை ஏறிவிட்டதற்குத் தி.மு.க. அரசின் முன் யோசனையற்ற நடவடிக்கைகளே காரணம்.

தீர்க்க தரிசனமுள்ள தலைவர்கள் பருவ மழை பொய்க்கலாம் என்பதைச் சதா நினைவிலிருத்திக் கொண்டு முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவார்கள். ஆனால் இங்கு ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் விளைச்சல் சற்று மிகுதியாக இருந்த தருணத்தில் அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தித் தமிழகத்தின் கையிருப்பு கணிசமாகக் குறைந்துபோக அனுமதித்து விட்டார்கள். அரசாங்கம் போதிய அளவு தானியத்தைச் சேமித்து வைத்துக்கொள்ளவில்லை. அப்படிச் சேமித்துக்கொள்ளாமல் இப்போது ரேஷனை அமுல் படுத்தவும் தயங்குகிறது அரசு.

இவ்வளவிருந்தும் பொறுப்பைத் தட்டிக் கழிக்க மாட்டோம், கஷ்டங்களைத் துணிந்து ஏற்று நிலைமையைச் சமாளிக்க முழு மூச்சுடன் பாடுபடுவோம் என்று முதல்வர் கூறியிருப்பதை மெச்சவே வேண்டும்.

இந்தப் பஞ்சப் படையெடுப்பை அந்நியப் படையெடுப்பாகவே கருதி அத்துடன் போராட எதிர்க் கட்சிகளின் ஒத்துழைப்பையும் முதல்வர் கோரிப் பெறலாம். அத்துடன் அயல் நாடுகளிலிருந்து அதிக அளவில் அரிசி இறக்குமதி செய்து தமிழ்நாட்டுக்கு உதவும்படி மத்திய ஆட்சியைத் தமிழக அரசு வற்புறுத்த வேண்டும்.

பஞ்ச நிவாரணத்துக்குச் செலவு செய்வதும் மழையின்மையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குக் கடன் கொடுப்பதும் சரியே. இதுபோன்ற பலமுனை முயற்சிகளை முதல்வர் மேற்கொண்டுள்ளார். ஆனால் செலவாகும் பணத்தில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதமாவது ஏழைபாழைகளுக்குப் பயன்படுமாறு அவர்கள் கைக்குப் போய்ச் சேர வேண்டும். இல்லாதபோனால் இவ்வளவு பணம் செலவாயிற்று என்ற கணக்குத்தான் மிஞ்சும்; பஞ்சத்தை வென்றதாகாது !


பணபலமே
~~வாய்மையே~~
வெல்லும்
கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் நிதி அளிக்கலாம்
வாங்க, வாங்க நீங்களும் வாங்க!
தேர்தல்

என்ன சேதி?

தோல்வியில் லாபம்!

டில்லி டெஸ்ட் நமக்குப் படுதோல்வியாக முடிந்தாலும் நாட்டுக்கு ஒரு நன்மை கிட்டியது. ஒரு நாள் வேலை நேரம் மிச்சமாயிற்று! கடைசி நாள் ஆட்டம் இல்லாததால் டில்லியில் எல்லாரும் மைதானத்திலோ அல்லது டெலிவிஷன் எதிரிலோ உட்கார்ந்திராமல் ஃபைல்களைத் தொட்டுப் புரட்டிப் பார்த்தாவது இருப்பார்கள். அந்த மட்டும் லாபம்!

இந்த டெஸ்டின்போது வெங்கட் நடந்துகொண்டவிதம்தான் ரொம்ப விசித்திரம். முதல் இன்னிங்ஸ் முடிந்த கையோடு பத்திரிகை நிருபர்களிடம் பாட்ஸ்மன்கள் தங்களுக்கிருந்த நல்வாய்ப்பை நழுவ விட்டுவிட்டார்கள் என்பதாக ஒரு குரல் அழுதிருக்கிறார். நிஜமாகவே இருந்தாலும்கூட இப்படி பேசலாமா? ஆட்டம் முடிந்த பிறகு சாதக பாதகங்களை விளக்கிக் கூறியிருந்தால் யாரும் ஆட்சேபிக்கப் போவதில்லை. முதல் இன்னிங்ஸ் முடிந்ததுமே சக ஆட்டக்காரர்களைக் குறைகூறிப் பேசுவது காப்டனுக்கு அழகல்ல என்பதும் அது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தைப் பாதிக்கும் என்பதும் வெங்கடராகவனுக்குத் தெரியாமல் போனது அதிசயம்!

எதிர்பார்த்தோம்! ஏமாந்தோம்!

டி. ஏ. பாய் சூராதி சூரர் போல் பேசுகிறார். அரசாங்கத்தின் நோக்கங்கள் அடிப்படையிலேயே மாற வேண்டும். இப்போதே இதைச் செய்யாது போனால் எதிர்காலத்தில் மாற்றிக் கொள்ள முடியாமலேயே போய்விடும். கடந்த காலத்தில் நாம் எடுக்கத் தவறிய முடிவுகளை மனச்சாட்சிக்கு விரோதமின்றி இப்போதேனும் எடுத்தாக வேண்டும் என்றெல்லாம் சொல்கிறார்.

கேட்பதற்கு நன்றாயிருக்கிறது. ஆனால் காரிய ரீதியில் பார்க்கும்போது பாய் இதுவரை பிரமாதமாக எதையும் சாதித்துவிட்டதாகச் சொல்ல முடியாது. அவர் செய்ய விரும்பினாலும் அவர் சிக்கிக் கொண்டிருக்கும் சோஷலிஸ வலை அவரை இயங்க விடுமா என்பது சந்தேகமே.

இதற்கு முன்பும் மத்திய மந்திரி சபையில் சிலர் யதார்த்த நோக்கோடு பேசியிருக்கிறார்கள். ஆனால் காரியங்கள் என்னவோ 'பழைய குருடி, கதவைத் திறடி' என்ற ரீதியில்தான் நடக்கின்றன. டி. ஏ. பாய் அவர்களாவது துணிந்து செயலில் இறங்க மாட்டாரா என்று நாடு ஏங்குகிறது.

முதல்படியாகப் பர்மிட் லைசென்ஸ் கோட்டாக்களை வழங்கும் பொறுப்பை விஷய ஞானமுள்ள ஒரு சுதந்திரக் குழுவிடம் பாய் ஒப்படைக்கட்டும். இந்த ஒரு காரியமே பிரமிக்கத்தக்க மாறுதல்களைத் தார்மிகப் பொருளாதாரத் துறைகளில் ஏற்படுத்தும். அதைத் தொடர்ந்து பல முன்னேற்றகரமான முடிவுகளை எடுக்கப் பாய்க்குத் துணிவு பிறக்கும்.

நமது நிதி அமைச்சரைப் பற்றி என்ன சொல்ல! சி. எஸ். பொறுப்பேற்றதும் என்னென்னவோ எதிர்பார்த்தோம். இதுவரை பெரிய ஏமாற்றம்தான். அவர் தமது சரீரத்தைப் பாதுகாக்க யோகாசனங்கள் பழகி வருகிறார் என்ற ஒரு விஷயம்தான் புதிதாகத் தெரிய வந்திருக்கிறது. மற்றபடி நாட்டின் பொருளாதாரத்தைப் பலப்படுத்த எந்த ஒரு பயிற்சியையும் அவர் மேற்கொள்ளக் காணோம்.

மக்கள் பொறுமை இழந்து வருகிறார்கள் என்பதை மந்திரிகள் உணரட்டும்.

பிரேதத்துக்காக ஒரு போர்!

ஊதாண்டின் ஆத்மா சாந்தி அடைந்த பிறகும் அவர் உடலுக்குச் சாந்தி கிடைக்கவில்லை! சவ அடக்கத்துக்கு அவரது குடும்பம் செய்திருந்த ஏற்பாடுகள் போதாதென்று கருதி மாணவர்கள் வேறு ஏற்பாடு செய்து அவர் தேகத்தைப் பறித்துக் கொண்டு போனார்கள்.

மாணவர்களால் அடக்கம் செய்யப்பட்ட தேகத்தைப் பர்மிய அரசாங்கம் தோண்டி எடுத்து மீண்டும் ஊதாண்டின் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த இடத்துக்கே கொண்டு போயிற்று. இதைத் தொடர்ந்து ஏகப்பட்ட அமளி. ஊரடங்குச் சட்டம், ராணுவக் கெடுபிடி எல்லாம் ரங்கூனில் அமர்க்களப்பட்டது.

ஊதாண்ட் ஜெனரல் நீவின்னுடைய ராணுவ ஆட்சிக்குத் தமது எதிர்ப்பை வெளிப்படையாகவே தெரிவித்து வந்தவர். இதற்கு முன்பு ஆண்டு வந்த ஊனுவின் சர்வகட்சி ஜனநாயகத்துக்குத் தமது ஆதரவை அளித்து வந்தார்.

எனவே இன்று ஊதாண்டின் உடலை ஒட்டி நடைபெற்ற போராட்டத்தை ஜனநாயக உணர்வுக்கும் சர்வாதிகார ஆட்சிக்கும் இடையில் நடைபெற்ற போராட்டமாகவே கருதலாம்.

ரங்கூன் மாணவர்கள் ராணுவ ஆட்சியில் அதிருப்தி அடைந்த பர்மிய ஜனநாயக உணர்வின் பிரதிநிதியாக விளங்கிய ஊதாண்டுக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்த ஆவேசத்துடன் முன்வந்ததாகக் கொள்ளலாம்.

மாணவர்களின் ஜனநாயக உணர்வுகளுக்கு இடம் தராமல் ராணுவ பலத்தைப் பிரயோகித்து அவர்களிடமிருந்து ஊதாண்டின் உடலை எடுத்துச் சென்று தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டுவிட்டார் ஜெனரல் நீவின்.

ஆனால் ஊதாண்டின் மரணத்தோடு பர்மிய மக்களின் ஜனநாயக உணர்வும் மடிந்து விடாது.

சென்னைக்குப் புதிய ஷெரீப்



சென்னை நகரின் ஷெரீபாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் திரு எம். ஏ. எம். ராமசாமி. தொழில் வர்த்தகத் துறையில் திறமையாளும் விளையாட்டுத் துறையில் ஈகையாளும் மிகப் பிரபலமடைந்துள்ள திரு ராமசாமி அவர்களுக்கு நகர மக்கள் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சாக்கடையில் பால்!

அரசாங்கம் நடத்தும் தொழிலோ வியாபாரமோ ஒருநாளும் உருப்படாது என்பதற்கு மற்றொரு பிரத்தியட்ச உதாரணம் கிடைத்திருக்கிறது. எர்ணாகுளம் பால் திட்டத்தின் கீழ் கேரள அரசு நடத்தி வருகிற பால் பண்ணையில் சீசாக்கள் இல்லை என்பதால் பாலைச் சாக்கடையில் கொட்டினார்களாம்! ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல, விஷயம் வெளியே தெரிந்து, சமூக சேவைச் சங்கங்கள் பாலை ஏழைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்க முன் வரும் வரையில் பல நாட்களுக்குத் தொடர்ந்து சாக்கடையில் கொட்டியிருக்கிறார்கள்!

தனியார் துறையில் நிறுவனம் இயங்கினால் பாட்டில் இல்லாமல் பால் வீணாக அனுமதிப்பார்களா? அரசுத் துறையானதால்தான் நமக்கு என்ன நஷ்டம், கொட்டு சாக்கடையில் என்று உத்தரவு பிறக்கிறது!

புண்ணியவான்கள், இவர்கள் கண்களுக்கு ஒரு வேளை சோற்றுக்கு ஆலாய்ப் பறக்கும் ஏழைக் குழந்தைகள்கூடத் தென்படவில்லை! அதைச் சேவா சங்கங்கள் வந்து சுட்டிக்காட்டி விநியோகப் பொறுப்பையும் ஏற்க வேண்டியிருந்தது!

காணோம்! காணோம்!

மதுலிமாயி தாம் மாருதி கார் தொழிலகம் பற்றிக் கொடுத்த கேள்வியைப் பாராளுமன்றக் காரியாலயம் தொலைத்துவிட்டது என்கிறார். மற்றொரு கேள்வியை மாற்றி அமைத்து விட்டதாம். இவையெல்லாம் உண்மைகள் வெளிப்படாதிருக்கச் செய்யப்பட்ட திரிசமங்கள் என்று பாராளுமன்றத்தில் ஆத்திரத்துடன் பேசியுள்ளார்.

ஜனநாயகம் என்று பெயரளவில் வைத்துக் கொண்டு சர்வாதிகார ஆட்சி நடத்தும் இந்திரா அரசு மக்கள் பிரதிநிதிகளையே மதிப்பதில்லை என்பது இன்று ஜகத்பிரசித்தியாகிவிட்டது. ஸி. பி. ஐ. அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாக வாக்குறுதி தந்துவிட்டுப் பிறகு அதை மீறி அவசரம் அவசரமாக நீதிமன்றத்துக்கு வழக்கைக் கொண்டு போய் விட்டுக் கையை விரித்த போதே இந்த அரசு நம்பிக்கைக்குரியது அல்ல என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது. எனவே மதுலிமாயியின் குற்றச்சாட்டில் உண்மை இருந்தால் வியப்பதற்கு ஏதுமில்லை.

நமது தமிழக அரசோ இதற்கு ஒரு படி மேலேயே போய்விட்டது! ரெவின்யூ போர்டின் உணவுத் துறையில் பதினெட்டு ஃபைல்களைக் காணோமாம்! இது என்ன அநியாயம் என்று கேட்டால் ஃபைல்கள் காணாமல் போவதும் அவற்றை மீண்டும் தயாரிப்பதும் சகஜம் தான் என்று கூசாமல் சொல்கிறார் மாதவன். ஒரு ஃபைல் இரண்டு ஃபைல்கள் காணாமல் போனால் மீண்டும் தயாரிக்கலாம். பதினெட்டு ஃபைல்களா காணாமல் போகும் என்று ஹண்டேயும் பி. சீனிவாசனும் கேட்டதற்குப் பதில் கூறவில்லை; கூறவும் முடியாது.

ராஜாஜி சிந்தனை

அறிவுப்பாலூட்டும் தாய்

வஞ்சகமான முறையில் நிர்வாக உத்தரவுகளைப் பிறப்பித்தும் திட்டங்களை வகுத்தும் அரசுக் காரியாலயங்களில் ஹிந்தியைப் புகுத்துவது அங்கு பணியாற்றும் ஹிந்தி பேசாத ஊழியர்களைத் துன்புறுத்தி, காரணமின்றித் தண்டிப்பது போலாகும். அரசாங்க உத்தியோகத்தை மேற்கொள்ள விரும்பும் இந்தி பேசாத இளைஞர்கள் தலைமீதாக ஒரு பட்டாக் கத்தியை மெல்லிய நாளிழையில் கட்டித் தொங்க விட்டது போலாகும்.

ஆங்கிலம் அந்நிய மொழி என்பதாக முத்திரை குத்தி அதை ஒதுக்கிவிடக் கூடாது. சர்வதேச மொழியாகிய அது இந்தியாவில் உள்ள எல்லா இளைஞர்களுக்கும் மெய்யான தாய் போலவே பணியாற்றி நவீன அறிவு என்னும் உயிர்ப் பாலை ஊட்டுகிறது. உண்மையான அன்புடைய செவிலித் தாயாக ஆங்கிலத்தைக் கருத வேண்டுமேயன்றி ஒதுக்கப்பட வேண்டிய பாபாத்மாவாக அதனை எண்ணலாகாது.

ஹிந்தி தானாகவே பரவும். வியாபார வர்த்தக வளர்ச்சி அதனை நாலுதிசைகளிலும் பரப்பும். இதற்கு அரசாங்க அரசியல் கெடுபிடிகள் ஏதும் தேவையில்லை. அம்மொழிதான் உயர்ந்தது என்று நாடகமாட வேண்டிய அவசியம் இல்லை. ஹிந்தி இவ்விதம் பரவினாலும் அதன் பணி ஆங்கிலத்தின் பணியிலிருந்து மாறுபட்டதாகத்தான் இருக்கும். ஆங்கிலம் மட்டுமே செய்ய வேண்டிய, செய்யக்கூடிய காரியங்களை ஹிந்தியால் செய்யவே முடியாது.

சுயராஜ்யா, ஜூன் 9, 1962



SIGMA SIGMA
SIGMALAC
GENERAL PURPOSE
SYNTHETIC ENAMEL
SIGMA PAINTS LTD., BOMBAY 400 001.
CHATRA-SP-54 TAM

நட்சத்திரமும் நவநாகரீகமும்

லால்பாய் டெக்ஸ்டைல்ஸ்

உங்களுக்கென ஒரு பாக்ய
நட்சத்திரம்...ஒரு நாகரீகம்
உண்டு...இரண்டையும்
சிறப்புடன் இணைப்பது—
லால்பாய் டெக்ஸ்டைல்ஸ்.
பெருமைமிகு பிரிண்டுகள்,
அருமையான வண்ணங்கள்...
பலவிதத் துணிவகைகள்.

தேர்ந்தெடுக்க 7 மடங்கு
வகைகள் வேறு எங்குதான்
கிடைக்கும்?



விருச்சிகம்:
நீங்கள் துணிவு மிக்கவர்.
தன்னம்பிக்கையும் கட்டுப்பாடும்
நிறைந்தவர். தேவையேற்படும்போது
துணிந்து முன்னின்று செயலாற்றும்
திறமை மிக்கவர்.
உங்கள் அதிர்ஷ்ட வண்ணங்கள்—
பழுத்த சிவப்பு (மரூன்), அடர்சிவப்பு
(கிரிம்ஸன்). நாகரீகத்தையும்
வண்ணத்தையும் நயமாக
இணைக்கத் தெரிந்தவர்
நீங்கள்.

தனுர்:
நீங்கள் மகிழ்ச்சி
நிறைந்தவர், மலர்முகம் படைத்தவர்.
எப்போதும் சுறுசுறுப்புடன்
விளங்குவீர். ஆயின் ஒரு சமயத்தில்
ஒன்றே உமது குறிக்கோள். உங்கள்
அதிர்ஷ்ட வண்ணங்கள்—கரும் பச்சை,
ஊதா வண்ணம், பழுப்பு (ப்ரௌன்).
நீங்கள் நவநாகரீகமாக
உடுத்தத் தெரிந்தவர். ஆயின்
எப்போதும் அதையே
நாடுபவரல்ல.





துலா:
நீங்கள் பிறரைப் புரிந்து
கொள்பவர்; இரக்க
சிந்தனையுள்ளவர்.
நல்லுறவையும்
நட்பையும் எப்போதும்
நாடுபவர்.
உங்கள் அதிர்ஷ்ட
வண்ணங்கள்—
பச்சை, நீலம்,
வெளிர் சிவப்பு
(பிங்க்),
பழுப்பு (ப்ரௌன்).
தருணத்திற்கேற்ற
உடையைத்
தேர்ந்தெடுப்பவர் நீங்கள்.

லால்பாய்—
அதிர்ஷ்டப் பொருத்தும் அளிப்போர்

லால்பாய் கருப்
துணிகள்

அரவிந்த்
அசோகா
ராய்பூர்
சரஸ்பூர்
அருண்
நூதன்
நியூ காட்டன்

ஏழு மில்களின் ஏற்றமிகு துணிகள்

CHLB-37.183 TM.

சில்லறை விற்பனையாளர்கள் :
M/s. வெங்கடேஷ், 243, 244, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, சென்னை-1.
M/s. ஆனந்த் டெக்ஸ்டைல்ஸ், பெரிய கடை வீதி, திருச்சி-8.
M/s. ஜீஸ்வரீஸ், 26-பி, மேற்கு டவர் தெரு, மதுரை-1.



மகாலக்ஷ்மி

7

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி
சங்கராசாரிய சுவாமிகள்



"இதைத் தா, அதைத் தா" என்று நாம் பிரார்த்திக்க வேண்டியதே இல்லைதான். நம் யோக்கியதைக்கு என்ன தரவேண்டும் என்று அவனுக்கே தெரியும். இருந்தாலும் நடைமுறையில் இப்படி விவேகத்தோடு இருக்க முடிய மாட்டேன் என்கிறது. "இது வேண்டும், அது வேண்டும்" என்பதற்காகத்தான் பிரார்த்தனை செய்கிறோம்.

யோசித்துப் பார்த்தால் இதை அடியோடு தப்பு என்று சொல்ல முடியவில்லை. கீதையில் பகவான் நாலு தினுசாகப் பக்தர்களைப் பிரித்துச் சொல்கிறார். அதிலே மோக்ஷத்தை விரும்பி உபாசிக்கிற சாதகன், அந்த மோக்ஷ லட்சியத்தையே பிடித்து விட்ட ஞானி ஆகிற இரு சாராரைச் சொன்னதோடு பகவான் நின்றுவிடவில்லை. நோய் நொடி முதலான துன்பங்கள் நீங்குவதற்காகப் பிரார்த்திக்கிறவன், பொருளை வேண்டிப் பிரார்த்தனை பண்ணுகிறவன் ஆகிய இரு சாராரைக்கூடச் சேர்த்துக் கொள்கிறார். இம்மாதிரி லௌகிக சௌக்கியத்துக்காக வழிபடுகிறவர்கள்கூடத் தன்னை பஜிப்பதாக பகவான் ஒப்புக்கொள்கிறார். பகவானே ஒப்புக்கொண்ட விஷயத்தை நாம் ஆட்சேபிப்பதற்கில்லை.

ஆனால் கீதா சாஸ்திரம் முதலிய எந்த ஞான நூலாகட்டும், சமய ஸித்தமாகட்டும், இக லோக சௌக்கியங்களைத் தள்ளிவிட்டு சாசுவதமான பேரின்பத்தைத்தான் நாட வேண்டும் என்பதை லட்சியமாக வலியுறுத்துகின்றன. அப்படியானால் பகவானே முரண்படப் பேசுகிறாரா? அப்படி அர்த்தமில்லை. லௌகிக காரியங்களை எடுத்த எடுப்பில் யாராலும் விட்டுவிட முடிகிறதில்லை. ஆனாலும் இந்த நிலையில் இருக்கிறபோதுகூட, 'எல்லாம் நம்மாலேயே முடியும், நாம் நினைத்ததை எல்லாம் நாமே ராஜாவாக நடத்திக் கொள்ள முடியும்' என்று நினைத்துவிடாமல், 'நமக்கு மேலே ஒரு மகா சக்தி இருக்கிறது. அதற்குச் சக்தி இருப்பதோடு கருணையும் இருக்கிறது. நாம் தழைந்து வேண்டினால் அது அநுக்கிரகம் பண்ணும்' என்கிற நம்பிக்கை இருந்தால் அது விசேஷம்தானே? பணம் வேண்டும், வீடு வேண்டும், பதவி வேண்டும் என்றெல்லாம் பிரார்த்தனை செய்கிறபோதுகூட இப்படி ஒரு மகா சக்தியிடம் நம்பிக்கை வைத்து, அதனிடம் நம் அகங்காரத்தையெல்லாம் தாழ்த்திக்கொண்டு நிற்கிறோம் அல்லவா? அந்த மட்டில் இது நாஸ்திகத்தை விட எத்தனையோ சிலாக்கியம் தானே? முதலில் ஏதேதோ வஸ்துக்களுக்காகப் பகவானிடம் போகிறோம்; பூஜை, ஆலய தரிசனம், ஸ்தோத்திரம், ஜபம் என்று செய்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக இதுகளில் பிடிப்பு உண்டாக உண்டாக மற்ற வஸ்துக்களில் பிடிப்புக் குறைகிறது. கடைசியில் பகவானுக்காகவே பகவானைப் பக்தி பண்ண வேண்டும் என்கிற ருசி பிறக்கிறது.

அதனால்தான் லக்ஷ்மீகடாக்ஷத்தை விரும்பியே பக்தி செலுத்துகிறவர்களைக்கூட "அர்த்தார்த்தி" என்று தனியாகச் சொல்லி, தன்னை பஜிப்பவனாக பகவான் ஒப்புக்கொள்கிறார்.

"ஆசைக்கோர் அளவில்லை" என்றார்கள். முக்கியமாக செல்வம் வேண்டும் என்கிற ஆசைக்கு எல்லையே இல்லாமல் போய்விடுகிறது. இதனால்தான் அனர்த்தம் எல்லாம் வந்துவிடுகிறது. ஞானம் வேண்டும், குணம் வேண்டும் என்றெல்லாம் பிரார்த்திக்கிறவர்கள் எங்கேயாவது துர்லபமாக இருப்பார்களோ என்னவோ? லக்ஷ்மி கடாட்சத்துக்கு மட்டும் பிரார்த்திக்காதவர் இல்லை. இதிலே எந்தக் கோடீசுவரனுக்காவது திருப்தி வந்திருக்குமா என்றால் அதையும் காணோம்.

சௌக்கிய அநுபோகம் அதிகமாக ஆக, ஞானம் வேண்டும் என்ற எண்ணம் குறைந்து கொண்டே போகிறது. இதனால்தான் லக்ஷ்மி இருக்கிற இடத்தில் சரஸ்வதி இருப்பதில்லை என்று பொதுவில் வசனம் வந்துவிட்டது. இதற்கு வேடிக்கையாக ஒரு காரணம் சொல்லலாம். சாதாரணமாக மாமியாரும் மாட்டுப்பெண்ணும் ஒரே இடத்தில் ஒத்து இருக்க மாட்டார்கள். மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் தகப்பனாரும் பிள்ளையும் ஆகிறார்கள் என்றால், அப்போது மகாலக்ஷ்மியும் சரஸ்வதியும் மாமியார் — மாட்டுப் பெண் ஆகிறார்கள். இவர்கள் சேர்ந்து சௌஜன்யமாக இருக்க மாட்டார்களே! அதனால்தான் பொதுவில் லக்ஷ்மீ கடாட்சம் இருக்கிற இடத்தில் சரஸ்வதீ கடாக்ஷம் இருப்பதில்லை. அல்லது இதையே நல்லபடியாகச் சொல்லலாம். மாமியாரிடம் உள்ள மகா மரியாதை காரணமாகவே அவள் இருக்கிற இடத்தில் தான் முந்திரிக்கொட்டை மாதிரி தெரியக்கூடாது என்று சரஸ்வதி ஒதுங்கிப் போவதாகவும் சொல்லலாம்.





சொல்லி மாளாத டெல்லி டெஸ்ட்!

தில்லி டெஸ்டுக்குக் காப்டனாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வேங்கடராகவன்தான் இந்திய டெஸ்ட் கோஷ்டிக்குக் காப்டனான முதல் தமிழர் என்கிறார்கள்.

டெஸ்டுக்கு முன் தினம் இஞ்சினீயர்தான் காப்டனாக வருவார் என்று கிரிக்கெட் போர்டின் உப தலைவர் அறிவித்தார், ஒரு வரவேற்பு விழாவில். அத்துடன் அவரைப் பேசும்படியும் அழைத்து விட்டார்.

அதிகாரபூர்வமான அறிவிப்பு மறுநாள் காலைதான் வெளியிடப்படும் என்ற நிலைமையில், இஞ்சினீயருக்கு என்ன பேசுவது என்று தெரியவில்லை. ''இது உண்மையா? காலைவாரி விடும் ஜோக்கா என்று தெரியவில்லை. இருந்தாலும் என்னால் இயன்ற அளவு பணி புரிவேன்'' என்றார் இஞ்சினீயர்.

☐ தில்லி கிரிக்கெட் அசோசியேஷனுக்கு இந்த டெஸ்ட் பெரிய தலைவலியுடன் ஆரம்பமாயிற்று. டிக்கெட்டுகள் கறுப்பு மார்க்கெட்டில் விற்கப்பட்டதாகப் பத்திரிகைகள் போட்ட பலத்த கூக்குரல்; தமாஷா வரிவிலக்கு வாபஸ் பெறப்படும் எனும் அச்சுறுத்தல், ஃபிரோஷ்ஷா மைதானத்தை ஒட்டியுள்ள கார்ப்பொரேஷன் பூங்காவைச் சேதப் படுத்தியதாகவும் நஷ்டஈடாக ரூபாய் ஐம்பதாயிரம் தர வேண்டும் என்றும் கார்ப்பொரேஷனின் ஏகமனதான தீர்மானம் - போன்ற பலப்பல. ''இது என்னுடைய பதின்மூன்றாவது 'டெஸ்ட்' '' என்று அசோசியேஷன் தலைவர் கூறினார். அதனால்தான் இவ்வளவு தொல்லையோ, என்னவோ!

☐ பார்த்தசாரதி சர்மாவுக்கு இதுதான் முதல் டெஸ்ட். முதல் டெஸ்டிலேயே அதிக பட்ச ரன்கள் எடுத்துவிட்ட இவர், 'மதராஸி' அல்ல. ராஜஸ்தானிக்காரராம். 'என் அப்பாவுக்குப் பார்த்தசாரதி என்ற நண்பர் உண்டு.





- பிரதமர் இந்திரா காந்தியுடன் காப்டன் லாயிட்.
- காப்டன் லாயிட் பந்தை அடிக்கும் வேளையிலே விசுவநாத். இன்ஜினீயரின் பரவபூர்வமான பீல்டிங் நிலை!
- அபீத் அலி பந்தையடிக்கிறார்! சூழ இருப்பவர்கள் லாயிட், ஃபிரெட்ரிக்ஸ், முர்ரே.
- டெலிவிஷனுக்காக வெங்கட்டையும் லாயிட்டையும் பேட்டி காண்கிறார் லாலா அமர்நாத்.
- பெங்களூர் வீரர் விசுவநாத்தின் ஆட்டம்! புகைப்படங்கள்: தில்லி ராஜு

அவர் மேல் உள்ள மதிப்பால் எனக்குப் பார்த்தசாரதி என்ற பெயரை வைத்துவிட்டார்' என்கிறார் இவர்.

□ தில்லி டெஸ்டில் பார்வையாளராக உட்கார்ந்திருந்தார், பட்டோடி. இதற்கு முன்பும் ஒரு தில்லி டெஸ்டுக்குப் பார்வையாளராகப் பட்டோடி வந்திருந்தார். அச்சமயம், தினசரிப் பத்திரிகையின் விசேஷ நிருபராக வந்திருந்தார். இடம் இல்லாததால், தரையில் உட்கார்ந்து பார்த்தார்.

□ பிஷன் சிங் பேடி முதல் பந்திலேயே 'அவுட்' டாகிவிட்டதைப் பற்றி பெவிலியனில் பேசிக் கொண்டது:

"பேடி, மேற்கிந்தியர்களைத் திணற வைத்துவிட்டார், பார்த்தாயா?"

"என்னது, அவர்தான் முதல் பந்திலேயே கோட்டை விட்டுவிட்டாரே!"

"அதுதான் நான் சொல்கிறேன். இரண்டாம் பந்தில் அவுட்டாகிவிடுவார் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். பாவம், ஏமாந்தார்கள்."

□ மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் சோபர்ஸைக் கல்யாணம் செய்து கொள்வதாகப் பல வருடங்களுக்கு முன்பு சினிமா நடிகை அஞ்சு மகேந்துரு அறிவித்தது நினைவிருக்கும். அவரைக் கைவிட்டு ராஜேஷ்கன்னாவைப் பற்றிக் கொண்டார். ராஜேஷ்கன்னா இவரைக் கைவிட்டதும் தெரிந்த சேதி. தனியாக விடப்பட்ட அஞ்சுமகேந்துரு, தில்லி டெஸ்டுக்கு வந்திருந்தார். மேற்கிந்திய கிரிக்கெட் வீரர் எவருடனாவது 'நட்பு' ஏற்படுத்திக் கொள்ளவோ என்னவோ, தெரியவில்லை.

ஷர்மிலா டாகூர்கூட மேட்ச் பார்க்க வந்திருந்தார்.

□ இரண்டு பூரி சப்ஜி விலை ரூபாய் நான்கு. ஒரு கோகாகோலா இரண்டு ரூபாய்.-கிரவுண்டுக்குள் இப்படி விற்கப்பட்டன.

□ "பலத்த மழை பெய்து ஆட்டமே நிறுத்தப்பட்டால்தான் 'ட்ரா' ஆக வாய்ப்பு உண்டு" என்று லாலா அமர்நாத் சனிக்கிழமை மாலை டிவியில் கூறினார். அன்றிரவு மழை பெய்தது இலேசாகத்தான். அது மேற்கிந்திய கோஷ்டிக்குச் சாதகமாக அமைந்துவிட்டது.

□ "வேங்கடராகவன் வைஸ் காப்டனாக இருந்தவர். அவரைத்தான் காப்டனாகப் போட வேண்டும்" என்று டெஸ்டுக்கு முன்பு பஸ்ஸில் யாரோ ஒருவர் கூறினார். "அப்படி என்ன சட்டம்? வைஸ் பிரசிடெண்ட்டை ஜனாதிபதியாக ஆக்கும் மாமூலையே மாற்றி விட்ட தில்லியில் வைஸ் காப்டனைத் தலைவ



சங்கர குருவுக்கு சங்கீத அஞ்சலி

ஆதிசங்கரர் நிலைநாட்டிய தத்துவங்களைப் பரப்புவதற்காக பம்பாய் மாதுங்காவில் முப்பத்திநாலு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்டது ஸ்ரீ சங்கர மடம். நடமாடும் தெய்வமாம் காஞ்சிப் பெரியவர்கள் சிருங்கேரி பெரியவர்கள் ஆகிய இருவரின் அருட்துணையும் கொண்டு தொண்டு புரிந்து வருகிறது இம்மடம். மாணவர்களுக்கு வேத, கீதைப் பயிற்சி தருகிறது. வேதாந்தச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்கிறது. மக்கட்குல நலனுக்காக அகண்டமான பிரார்த்தனைகள் நடத்துகிறது. மாணவ மாணவியரை பாரதீய வித்யா பவனத்தின் சம்ஸ்கிருதப் பரீட்சைக்குப் பயிலுவிக்கிறது. இவ்வளவு நற்பணிகள் செய்து வரும் மாதுங்கா ஸ்ரீசங்கர மடம் 1954-லேயே சொந்தமாக ஒரு மனைக்கட்டு வாங்கிய போதிலும் இன்றளவும் அங்கு கட்டிடம் எழுப்ப இயலாததே ஒரு குறை. குறையை நிறை செய்வதில் இப்போது சங்க நிருவாகிகள் முழு முனைப்புடன் ஈடுபட்டிருக்கிறார்கள். சங்கரமடக் கட்டிடத்துக்காகப் பொருள் திரட்டி வருகிறார்கள். எந்த நல்ல காரியத்துக்கும் இதோ என்று உதவும் ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்களின் சங்கீத கைங்கரியம் ஆசாரியப் பெருமானுக்குச் சமர்ப்பணமாகாது இருக்குமா? மாதுங்கா ஸ்ரீசங்கர மடத்துக்காக ஸ்ரீமதி எம். எஸ். வருகிற ஜனவரி 15-ந் தேதி பம்பாய் ஷண்முகாநந்தா ஹாலில் உதவிக் கச்சேரி நல்குகிறார். இசை வழியே இறையின்பம் பெற்றுக் குருவுக்குக் காணிக்கை செலுத்த அரிய சந்தர்ப்பம்!



ராக நியமிக்க வேண்டிய கட்டாயமில்லை'' என்றார் வேறொருவர்.

□ மைதானத்தில் ஏதாவது கலவரம் ஏற்படுமோ என்று அஞ்சி ஏகப்பட்ட போலீஸ், எல்லை காவல் படை, ரிசர்வ் போலீஸ்— ஆயிரத்துக்கு மேல் இருக்கும் — டியூட்டியில் இருந்தனர்.

□ டெஸ்ட் தோல்வியில் முடிந்து விட்டது. பஸ் கியூவில் ஒருவர் அடித்த ஜோக், ''இந்த பிரோஸ்ஷா கோட்லா மைதானத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் இருக்கிறது சுப்ரீம் கோர்ட்; இருந்தும் நம்ப பிளேயர்களுக்கு 'ஜட்ஜ்மெண்ட்' போதவில்லை!''

□ ''பிரோஸ்ஷா கோட்லா மைதானம் என்பதை விட பிரோஸ்ஷா **கோட்டை** மைதானம் என்பது தான் பொருத்தமான பெயர்.'' — ஒருவர் வெறுப்புடன் கூறியது.

— நமது டில்லி நிருபர்

■

படித்துப் பாருங்கள்

West Indies Tour of India 1974 - 75

மேற்கிந்தியத் தீவு கோஷ்டியினர் அந் நாட்டிலேயே ஒருவரை ஒருவர் எதிர்த்து விளையாட வேண்டியிருக்கும். ஆனால் விமானமேறி வேறு நாட்டுக்கு எதிராக ஆடச் செல்லும்போது அவர்களது ஒரே எண்ணம்: ''மேற்கிந்தியத் தீவுகளுக்கு வெளியே நாம் ஒரே குழு!''

காப்டன் லாயிட் கூறியது இது. இன்று இந்தியக் கோஷ்டிக்கும் மேற்கிந்தியத் தீவுக் கோஷ்டிக்கும் நடைபெறும் கிரிக்கெட் பந்தயங்களில் நமது விருந்தினர்கள் எப்படி ஆடுகிறார்கள் என்று பார்க்கும் ஆர்வம் மட்டுமே நம்மிடம் காணப்படுகிறது என்றாலும் மேற்கிந்தியத் தீவு சாதனைகளுடன் பழங் கணக்குப் பார்த்து இந்திய ஆட்டக்காரர்கள் சாதனைகளையும் கூறுகிறது இந்தப் புத்தகம். ஏராளமான புகைப்படங்களும் பல ரிகார்டுகளும் இந்தப் புத்தகத்தில் அடங்கியுள்ளன. பிரன்னன் ஜோன்ஸ், பி. என். சுந்தரேசன் முதலிய கிரிக்கெட் விமர்சகர்களின் கட்டுரைகள் நூலை அலங்கரிக்கின்றன.

பிரசுரம்: ஹிந்து காரியாலயம், மவுண்ட் ரோடு, சென்னை — 2; விலை: ரூ. 3.

சோர்வா?
பலவீனமா?



சாப்பிடுங்கள்


வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் — விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுப்பொருட்களும் அடங்கிய பரிபூரண டானிக்



சில டானிக்குகளில் விட்டமின்கள் மட்டுமே உள்ளன. சிலவற்றில் தாதுச் சத்துக்களோ அல்லது இரும்புச் சத்தோதான் உள்ளன. வாட்டர்பரீஸ் விட்டமின் டானிக் பரிபூரணமானது. அதில் விட்டமின்களும், இரும்புச் சத்தும், தாதுச்சத்துக்களும் சமசீராக இணைந்துள்ளன—

தினமும் உற்சாகமும், சக்தியும், வலிமையும் கொடுக்கிறது.

விட்டமின்கள்
நிரம்பியது



வாட்டர்பரீஸ்
விட்டமின் டானிக்

சுறுசுறுப்பான ஆரோக்கியத்திற்கு
பரிபூரணமான டானிக்

Grant 9 TM

DEEDS....

not merely words...

PERFORMANCE....

not only promises...


For so long since two decades, we have been giving you all the Cement you wanted. . .

Our three kilns were working day and night, to meet your requirements. . .One of our giant kilns, for example, had, not long ago, set an all time record, perhaps a world record, for working non-stop for over 387 days, with perhaps a few hours stoppage, due to power failure. . .to give you more and more cement. . .

But things are not the same today. . .There is coal shortage, and there are power failures. . .And so, our performance has not been the same. . .for reasons beyond our control. . .

But we assure you that once again, when conditions are normal, our DEEDS and PERFORMANCE will be up to your expectations. . .

Because we believe in DEEDS. . .
not merely words. . .
and in PERFORMANCE. . .
not only promises. . .



Dalmia Cement (Bharat) Ltd.

Dalmiapuram (Tamil Nadu)

Manufacturers of famous ROCKFORT/BRAND Quality Cement



அமெரிக்காவில் இந்தியக் கலாசாரம்

ரங்கராமானுஜ அய்யங்கார்

அமெரிக்காவில் ஹிந்துமத ஆலயங்கள் எழ ஏற்பாடுகள் நடக்கின்றன. பஜனைக்கூடம், யோகப் பயிற்சி, உபந்நியாஸங்கள், எல்லாம் அமர்க்களப்படுகின்றன. ராமாயணம், மகாபாரதம், உபநிஷத்துக்கள் ஆகியவை மொழிபெயர்க்கப்பட்டு விரிவுரைகளுடன் பிரசுரமாகின்றன. ஸம்ஸ்கிருதம், தமிழ் முதலிய இந்திய மொழிகளைக் கற்கப் பல்கலைக் கழகங்களில் வசதிகள் இருக்கின்றன. புலால் மறுக்கும் பழக்கம் விரைந்து வளருகிறது. இளைஞர் பற்பலர் ஹிந்துப் பெயர்களைப் பெருமையுடன் சூடுகின்றனர். ராக்கிஃபெலர், ஃபோர்ட், ஃபுல்ப்ரைட் முதலிய ஸ்தாபனங்கள் சென்ற பதினைந்து ஆண்டுகளில் எண்ணிறந்த அமெரிக்க மாணவ மாணவிகளையும் கலைஞர்களையும் தாராளமான பொருள் உதவியுடன் இந்தியா, ஜப்பான், மலேஷியா, இந்தோனேஷியா முதலிய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பி, அவ்விடத்திய கலைகளையும் இலக்கியங்களையும் சமூக வரலாறுகளையும் ஆய்ந்து அறிந்து வர வழி வகை செய்துள்ளன. வெஸ்லியின், கலிஃபோர்னியா, மிஷிகன் முதலிய கல்வி ஸ்தாபனங்கள் இந்திய சங்கீதம் கற்பித்து வருகின்றன.

இவற்றுள் கடைசியில் கூறப்பட்ட மிஷிகன் ஸ்தாபனத்தில் அடங்கியது தாமஸ் ஜெஃபர்ஸன் கலாசாலை. ஆலன்டேல் என்னும் இடத்தில் உள்ளது. அதன் அமைப்பும் நிர்வாகமும் நூதனமானவை. மாணாக்கர்கள் விரும்பும் எந்தக் கலையையும் அதிகாரிகள் பரிசீலித்து வரவேற்கின்றனர். போதிய ஊக்கமும் பயன் அளிக்கும் அறிகுறியும் இருந்தால் அந்தத் திட்டம் நீடிக்கிறது. இந்தியப் பள்ளிகளில் நிலவும் ஒழுங்கு முறையும் கண்டிப்பும் கிடையாது. மணி அடித்தல், அடெண்டன்ஸ் எடுத்தல், உடை நிர்ப்பந்தம், தண்டனை விதிகள் முதலிய எதுவும் இல்லை. பொறுப்பு உணர்ச்சியும் லட்சியப் போக்குமே தூண்டுகோல்கள்.

முப்பத்து நான்கு ஆண்டுகள் கல்வித் துறையில் ஈடுபட்டு ஓய்வுபெற்ற எனக்கு எதிர்பாராதபடி இசைத் தொண்டாற்ற மிஷிகனிலிருந்து அழைப்பு வந்தது. உற்றார், உறவினர் நண்பர் யாருமே நான் 12000 மைல்கள் தாண்டி உலகின் மறுபுறம் போவதை விரும்பவில்லை. வயது, உடல் நலிவு ஆகிய காரணங்களைக் கூறினர். ஆயினும் இறைவன் இட்ட பணியாகக் கருதித் துணிந்து, 1973 ஆண்டும் பிப்ரவரி மாதம் ஆலன்டேல் வந்து சேர்ந்தேன். மன அமைதியுடன் பணியாற்றத் தகுந்த சூழ்நிலை. தங்குமிடம், தமிழ் நாட்டுப் பாணி உணவு எல்லாம் திருப்திகரம். ஆனால் அமெரிக்க சமூக வாழ்வை தற்கால நிலை மட்டும் திருப்தி அளிப்பதாக இல்லை. அபரிமிதமான செல்வச்செழிப்பே ஒரு தார்மிகச் சீர் குலைவைப் பரவலாக ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளது இளைஞர் சமுதாயம். ஆத்மீக உணர்வைத் தட்டி எழுப்பினாலல்லாது ஆக்க வேலை நடவாது என்பதை 1962ல் இந்நாட்டுச் சர்வ கலாசாலைகளைச் சுற்றி வந்த போதே அறிந்திருந்தேன்.

அந்தஅனுபவத்தின் துணை கொண்டு, இப்பொழுது தியாகராஜ ஸ்வாமியின் சாஹித்தியங்களின் பெருமையை விளக்கி, ஹிந்து மதக் கோட்பாடுடன் கர்நாடக சங்கீதத்தின் நெருங்கிய தொடர்பை எடுத்துக் காட்டி வருகிறேன். ஆரம்பத்தில் இருந்த அயர்வும் குழப்பமும் மாணவ மாணவிகளை விட்டகன்றன. ஒரு நூதன உத்வேகம் அவர்களைப் பற்றியது. ஆண்டவனுக்கு நன்றி செலுத்தி, தீவிர முயற்சியினால் ஆறு மாதங்களில் வியக்கத்தக்க முன்னேற்றம்கண்டு மகிழ்ந்தேன்.

இளைஞர்கள் கோஷ்டி ஒன்று ஸிம்பூரன்ஹால் என்ற மண்டபத்தில் திரளானகூட்டத்தின் முன் தன் திறமையைக் காட்டியது. ஐந்து வீணைகள், இரு குரல்கள், ஒரு செல்லோ, ஒரு கிளாரினெட், ஒரு புல்லாங்குழல், இரு கொன்னக்கோல் இவை அடங்கிய கர்நாடக சங்கீத ப்ருந்த கானம் அரங்கேறியது. இது சுற்று வட்டத்தில் ஒரு பரபரப்பை உண்டு பண்ணியது. பல இடங்களிலிருந்து அழைப்பு வந்தது; டெலிவிஷன் திட்டங்களிலும் இடம் பெற்றது. கேட்டோர் அனைவரும் ஆரவாரத்துடன் வரவேற்று ஆதரித்தனர்.

சாஹித்திய விளக்கத்தின் போது மாணவருக்குப் புராண இதிஹாசக் கருத்துக்களைக் கூற நேர்ந்தது மற்றொரு பலனை ஈந்தது. இந்த வருஷம் ஸ்ரீமத் ராமாயணம், மகாபாரதம் இரண்டையும் முறையாகப் படிப்பிக்கும்படி அதிகாரிகள் பணித்தனர். திட்டம் ஆரம்பித்துப் பக்தி சிரத்தையுடன் நடந்து வருகிறது.

படம்: அமெரிக்க மாணவ மாணவிகளுடன் ஸ்ரீ ரங்கராமானுஜ அய்யங்கார்

குவாலியர் ரேயானின் மகத்தான 26 ஆண்டு காலப் பணி

Sobhagya GR 74-2-Tam.



தன்வலிமை பெறும் கனவை நனவாக்கி வரும் பணி.

ரேயான் துணிகள், ஸ்டேபிள் இழை, ரேயான்-கிரேடு பல்ப் (கூழ்), ரேயான் ஸ்டேபிள் நூலிழைத் தொழிற்சாலைகளுக்கான எந்திர சாதனங்கள் ஆகிய எல்லாவற்றையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதற்கென குவாலியர் ரேயான் செய்துவரும் முயற்சிகள், நாடு சுதந்திரம் எய்திய நாளிலேயே தொடங்கிவிட்டன.

மூங்கில் மற்றும் இதர கெட்டி மரங்களிலிருந்து கலா திறனுள்ள ரேயான்-ரகக் கூழ் தயாரிப்பு, மற்றும் ரேயான், பல்ப், இவை சார்ந்த தொழிற்சாலைகள் ஆகியவற்றுக்கான நுட்பவினமான எந்திர சாதனங்களின் உற்பத்தி முதலியவற்றிலே குவாலியர் ரேயான்முன்னோடியாக விளங்குவதாலும், ரேயான் தொழிலிலே நம் நாடு தன்வலிமை பெற வழியமைத்துள்ளது.


இன்று, குவாலியர் ரேயானின் ஸ்டேபிள் நூலிழை உற்பத்தியளவு, 520 லட்சம் பேருக்கு ஆடை வழங்கப் போதுமானதாக உள்ளது. மரக் கூழ் உற்பத்தியோ, ஆண்டு தோறும் ஒரு லட்சம் டன்களுக்கு மேல்; இது செல்லுலோஸ் இழையளவிலே கணக்கிட்டால், 5.2 லட்சம் பருத்தி பேல்களுக்கு ஈடாகும்.

கடந்த பத்தாண்டுகளில், குவாலியர் ரேயான் நம் நாட்டின் பொக்கிஷத்திற்கு, வரிகளும் தீர்வைகளுமாக ரூ. 90 கோடி செலுத்தியுள்ளதோடு, அதே காலத்தில் ரூ. 360 கோடி அந்நியச் செலாவணியை மிச்சப்படுத்தியுள்ளது; இதை நோக்கும்போது, தன்வலிமை வாய்ந்த பொருளாதார அமைப்புக்கு குவாலியர் ரேயான் செலுத்திவரும் மகத்தான பணியின் பெருமை தெளிவாக விளங்கும்.

குவாலியர் ரேயான்—

தேச முன்னேற்றமே முதன்மை எனக் கருதுவோர்.

தி குவாலியர் ரேயான் ஸில்க் மானுபாக் (வீவிங்.) கோ. லிட்., பிர்லாகிராம், நாக்தா (ம.பி.)



சிவகாமியின் சபதம்

அமரர் **கல்கி**

முப்பத்தாறும் அத்தியாயம்
சத்ருக்னன் வரலாறு

வாசற்படியில் மாமல்லர் வந்து நின்றதைச் சத்ருக்னனும் ஆயனரும் கவனிக்கவில்லை; அவ்வளவுக்குத் தங்களுடைய பேச்சில் அவர்கள் ஆழ்ந்திருந்தார்கள்.

மண்டபத்துக்குள்ளே மாமல்லர் பிரவேசித்ததும் இருவரும் ஏககாலத்தில் நிமிர்ந்து பார்த்தார்கள். சத்ருக்னன் சட்டென்று எழுந்து நின்று, ''பிரபு!'' என்றான். மேலே ஒன்றும் சொல்ல முடியாமல் அவன் திகைத்தான்.

ஆயனரோ முகத்தில் உற்சாகமும் குதூகலமும் ததும்ப, சாய்ந்து படுத்திருந்தவர் நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து, ''பிரபு! வாருங்கள் !... வாருங்கள்! தங்களைத்தான் இப்போது நினைத்துக் கொண்டிருந்தேன். சத்ருக்னன் நல்ல சேதி கொண்டு வந்திருக்கிறான். குழந்தை சிவகாமி உயிரோடு சௌக்கியமாய் இருக்கிறாளாம் !'' என்றார்.

இதைக் கேட்ட மாமல்லரின் தலை சுழல்வதுபோல் இருந்தது.

ஆயனருக்கு அருகில் வந்து நின்று சத்ருக்னனை ஏறிட்டுப் பார்த்த வண்ணம், ''சத்ருக்னா! இது உண்மைதானா?'' என்று கேட்டார்.

''ஆம், பிரபு! உண்மைதான்!'' என்று சத்ருக்னன் சொல்லிவிட்டுக் கைகூப்பியவண்ணம், 'பல்லவ குமாரா! சற்று முன்பு காட்டுப் பாதையில் தங்களைக் கண்ட போது பேசாமல் வந்துவிட்டேன். அதற்காக மன்னிக்க வேண்டும். திடீரென்று தங்களைப் பார்த்ததும் பேசக் கூச்சமாயிருந்தது!'' என்று பணிந்த குரலில் கூறினான்.

''அந்தப் பெண் நீதானா? நல்ல வேஷம்!'' என்றார் மாமல்லர்.

''ஆமாம்; நானும்கூடச் சற்று முன்பு திகைத்துப் போய்விட்டேன். பெண் பிள்ளை வேஷம் எவ்வளவு நன்றாய் இவனுக்குப் பலித்திருந்தது? சக்கரவர்த்தி ஒவ்வொரு வேலைக்கும் எவ்வளவு பொருத்தமாய் ஆட்களைத் தேர்ந்தெடுக்கிறார்?'' என்றார் ஆயனர்.

மாமல்லர் மெல்லிய குரலில், ''சக்கரவர்த்தியின் சாமர்த்தியத்தை நீங்கள்தான்






மெச்சிக் கொள்ள வேண்டும்!'' என்று முணுமுணுத்துக் கொண்டார். பிறகு, சத்ருக்னனைப் பார்த்து, ''எதற்காக ஸ்திரீ வேஷம் போட்டாய்?'' என்று கேட்டார்.

''சத்ருக்னன் அந்த வேஷம் போட்டதனால்தான் சிவகாமியைப் பற்றித் தெரிந்து கொள்ள முடிந்தது. தயவு செய்து உட்காருங்கள். சத்ருக்னன் எல்லாம் விவரமாய்ச் சொல்லட்டும். நானும் இன்னொரு முறை கேட்டுக் கொள்கிறேன்'' என்றார் ஆயனர்.

மாமல்லர் உட்கார்ந்தார். சத்ருக்னனும் உட்கார்ந்து தன் வரலாற்றைக் கூறத் தொடங்கினான். அந்த வரலாறு இதுதான்:

''ஆயனரும் சிவகாமியும் காஞ்சிக் கோட்டையிலிருந்து சுரங்க வழியாக வெளியே போய்விட்டார்கள் என்று தெரிந்ததும் சக்கரவர்த்திக்கு இடி விழுந்தது போலாகிவிட்டது. உடனே தாமும் கோட்டைக்கு வெளியே போகத் தீர்மானித்துப் படைகளை ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டார். பிறகு என்னைத் தனியாகக் கூப்பிட்டு, 'சத்ருக்னா! நீ இதுவரையில் பல்லவ சாம்ராஜ்யத்துக்கு எத்தனையோ சேவைகள் செய்திருக்கிறாய். ஆனால், அவை எல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமான சேவை இப்போது செய்ய வேண்டும். மாமல்லன் மட்டும் இப்போது இங்கிருந்தால் நானே அந்த வேலையை மேற்கொள்வேன். பல்லவ குலத்தின் மானத்தைக் காப்பதற்காக நான் இப்போது போருக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது. சிவகாமியைக் கண்டுபிடித்து அவளைத் திருப்பிக்



கொண்டு வரும் வேலையை உன்னிடம் ஒப்படைக்கிறேன். சிவகாமியை மீட்டுக் கொண்டுவர முடியாவிட்டால் அவளைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். இதைக் கேட்டு நான் திகைத்துப் போனேன். 'பிரபு! சிவகாமி அம்மை சளுக்கரிடம் சிறைப்பட்டிருந்தால் தன்னந் தனியாக நான் என்ன செய்வேன்?' என்றேன். 'கஷ்டமான காரியமானபடியால்தான் உன்னிடம் ஒப்படைக்கிறேன். சத்ருக்னா! நீ இதுவரை எத்தனையோ வேஷங்கள் போட்டிருக்கிறாய். அவை எல்லாவற்றையும்விட உனக்கு நன்றாய்ப் பலிக்கக் கூடிய வேஷம் ஒன்று இருக்கிறது. அது பெண் வேஷம்தான்!'' என்றார். சக்கரவர்த்தியின் கருத்தை



நான் உடனே தெரிந்து கொண்டேன். சற்று முன் பார்த்தீர்களே. அம்மாதிரி வேஷம் தரித்துக் கொண்டு காஞ்சியை விட்டுக் கிளம்பி முதலில் இந்த வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

''நான் வரும் சமயத்திலேதான் இவரை ஸ்மரணையற்ற நிலையில் இந்த வீட்டுக்குள்ளே கொண்டு வந்தார்கள். இவரோடு சிவகாமி தேவி வரவில்லை. எனவே, தேவி சளுக்கரிடம் சிறைப்பட்டுத்தான் இருக்க வேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டு புறப்பட்டேன். காஞ்சிக் கோட்டையைச் சுற்றிச் சென்றேன். சளுக்க ராட்சதர்களின் கூக்குரல் கேட்ட இடங்களிலெல்லாம் மறைந்திருந்து கவனித்தேன். கடைசியில் காஞ்சிக்கு வடமேற்கே ஒரு பெரிய சளுக்கர் படை வட திசையை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அந்தப் பெருங் கும்பலுக்கு மத்தியிலிருந்து ஸ்திரீகள் புலம்பி அழும் சத்தம் வந்து கொண்டிருந்தது. இன்னும் அருகில் சென்று பார்த்தபோது அவ்வாறு ஓலமிட்ட ஸ்திரீகள் நம் கிராமங்களில் சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் என்று தெரிந்தது. அந்தப் பெண்களுக்கு நடுவே பல்லக்கு ஒன்றும் காணப்பட்டது. அதில் இருந்தவர் சிவகாமி தேவிதான் என்று தெரிந்து கொண்டேன்.

''சற்று நேரத்துக்கெல்லாம் நான் தலைவிரிகோலமாய் 'ஓ' என்று ஓலமிட்டுக் கொண்டு அந்தப் படையை நோக்கி ஓடினேன். பின்னால் என்னை யாரோ துரத்தி வருவது போலப் பாசாங்கு செய்து திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு ஓடினேன். சளுக்கர்கள் 'வந்தாயா? வா!' என்று பரிகாசக் குரலில் கூறிக் கொண்டு என்னை அழைத்துப் போய் மற்றச் சிறைப்பிடிக்கப்பட்ட பெண்களுடனே சேர்த்து விட்டார்கள். சற்று நேரம் மற்றப் பெண்களைப் போல் நானும் ஓலமிட்டுக் கொண்டிருந்தேன். பிறகு மெள்ள, மெள்ளப் பல்லக்கை நெருங்கிச் சென்று அதிலிருப்பது சிவகாமி அம்மைதான் என்று உறுதிப்படுத்திக் கொண்டேன். சிவகாமியை அவ்வளவு மரியாதையுடன் அழைத்துப் போன காரணத்தையும் ஊகித்தறிந்தேன். அந்தச் சளுக்கர் படையின் தலைவனாகிய தளபதி சசாங்கன், சிவகாமி அம்மையைப் பத்திரமாய்க் கொண்டு போய் வாதாபிச் சக்கரவர்த்தியிடம் ஒப்புவித்துப் பல்லவ நாட்டின் சிறந்த கலைச் செல்வத்தைக் கொள்ளை கொண்டு வந்ததற்காகப் பரிசு கேட்கப் போகிறான்! இந்த எண்ணத்தினால் எனக்கு ஒருவாறு மன நிம்மதி ஏற்பட்டது. சிவகாமி அம்மைக்கு உடனே தீங்கு எதுவும் நேராது என்று தைரியம் அடைந்தேன். ஆனால், சளுக்க ராட்சதப் படையால் சூழப்பட்ட சிவகாமியை அங்கிருந்து அப்புறப்படுத்தி அழைத்துச் செல்வது சாத்தியமான காரியமாகவே தோன்றவில்லை. எத்தனையோ உபாயங்கள் யோசித்து யோசித்துப் பயன்படாது என்று கை விட்டேன்.

''இதற்கிடையில் எல்லோரும் வட திசை நோக்கிப் போய்க் கொண்டேயிருந்தோம். வெள்ளாறு என்று வழங்கும் பொன்முகலியாற்றங் கரைக்குப் போய்த் தங்கினோம். இவ்விடத்தில் தளபதி சசாங்கன் பெரும் மனக் குழப்பத்தை அடைந்தவனாகக் காணப்பட்டான். அதன் காரணமும் சளுக்க வீரர்களின் சம்பாஷணைகளிலிருந்து தெரிந்து



இலவசம்
ஒவ்வொரு
175 கிராம் டின்னுடனும்
300 கிராம் சர்க்கரை
Ricory
INSTANT
FREE
300 gms.
SUGAR
with this tin
HI-STRENGTH
FREE
ஒவ்வொரு 50 கிராம்
ஜாடியுடனும்
ஒரு 95 கிராம்
பார்லே குளுகோ
பிஸ்கட் பாக்கெட்
Ricory
INSTANT
FREE
PARLE GLUCO
Biscuits
HI-STRENGTH
PARLE
Gluco
ரிக்கரி.
இன்ஸ்டன்ட்
-விசேஷச் சுவை கொண்டஸ்பெஷல் காப்பி
இச்சலுகை,
சரக்குகள்
உள்ளவரை
மட்டுமே!

HI:CH-3 TAM



கம்ப்யூட்டரை மிஞ்சும் ஸிஸிஎம்
நியூ
மிர்ராபோ
சித்திரக்
கோலத்திலே
சிங்காரப் புதுமை!
இன்று கம்ப்யூட்டர் அளிக்கும் சித்திரக் கோலங்கள். வியப்பூட்டும் புதுமைகள். கற்பனையைக் கடக்கும் எழில் படைப்புகள். ஸிஸிஎம் நியூ மிர்ராபோ ஃபுல் வாயில் புடவைகளும் அப்படியே. மெல்லிடையாள் மனங்கவரும் புதையல்கள். உயர்தர எகிப்திய பருத்தியில் தயாரிக்கப்பட்டவை. 'ஆன்டிகிரஸ்' செய்யப்பட்டவை. இதற்கு ஏற்ற ஃபுல் வாயில் சோளித்துணிகள்.
இதர படைப்புகள்:
எலிகன்ஸா சூட்டிங் • லவ்லின் ஷர்ட்டிங்
• ஸ்ட்ரேஞ்சர் ஷர்ட்டிங்
• ஸில்வர் கிங் வேஷ்டி • மல்
• கேஸ்மெண்ட் துணிகள்.
ஸிஸிஎம் அளிப்பது வண்ணப் புதையல்கள்
தி கோயம்புத்தூர்
காட்டன் மில்ஸ் லிமிடெட்
ADWAVE-CCM-185

கொண்டேன். மணிமங்கலத்தில் வாதாபிச் சக்கரவர்த்திக்கும் மகேந்திர பல்லவருக்கும் நடந்த பெரும் போரைப்பற்றித் தூதர்கள் கொண்டுவந்த செய்திதான் காரணம். இந்தச் செய்தி தளபதி சசாங்கனுக்கு அவ்வளவு குழப்பம் ஏன் அளித்தது என்பதை நான் ஊகித்தறிந்தேன். வாதாபிச் சைனியத்தில் பெரும் பகுதியுடன் புலிகேசி முன்னால் சென்றுவிட்டதாகவும், இதற்குள்ளாக அவர் வடபெண்ணைக் கரையை அடைந்திருக்க வேண்டும் என்றும் சசாங்கன் எண்ணிக் கொண்டிருந்தான். இப்போது புலிகேசி தனக்குப் பின்னால் தங்கி மாமல்லபுரத்துக்குப் பக்கத்தில் மணிமங்கலத்தில் சண்டையிட்டதாகச்செய்தி வந்ததும் . சசாங்கன் திகைத்தது இயற்கைதானே? சக்கரவர்த்தியைப் பின்னால் விட்டு விட்டுத் தான் முன்னால் ஓடிவந்தது பற்றி அவருக்குக் கோபமோ என்னவோ என்று சசாங்கன் ரொம்பவும் தவித்துக் கொண்டிருந்ததாகத் தெரிந்தது. பொன்முகலி ஆற்றங் கரைக்கு நாங்கள் வந்து சேர்ந்த மறுநாள் சசாங்கன் தன் சளுக்கப் படைகளுடன் தென்கரையில் இருந்து கொண்டு சிறைப்பிடித்த ஸ்திரீகளாகிய எங்களை மட்டும் அக்கரைக்கு அனுப்பினான். எங்களைக் காவல் புரிவதற்குச் சில சளுக்க வீரர்களை உடன்அனுப்பி வைத்தான்.

''அக்கரை சென்றதும், 'இது ஒரு நல்ல சந்தர்ப்பம்; சிவகாமி அம்மையைஅழைத்துக் கொண்டு போய்ப் பக்கத்தில் காணப்படும் குன்றுகளிலே ஒளிந்து கொள்ளலாம். காவலர்கள் சிலர் தான் இருப்பதால் அவர்களுக்குத் தெரியாமல் இரவு நேரத்தில் தப்பிச் செல்லலாம்' என்று தீர்மானித்தேன். அன்றிரவு எல்லோரும் தூங்க யத்தனம் செய்த சமயத்தில் நான் சிவகாமி அம்மையின் அருகில் இருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டேன். மற்றப் பெண்கள் எல்லாரும் தூங்கிய பிறகு பிராகிருத பாஷையில் என்னை இன்னாரென்று தெரிவித்துக் கொண்டேன். சிவகாமி முதலில் பெரிதும் ஆச்சரியமடைந்தார். பிறகு, ஆயனரைப் பற்றிக் கேட்டார். தங்களைப் பற்றியும் விசாரித்தார். ஆனால் தங்களைப் பற்றி எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. தாங்கள் தெற்கேயிருந்து திரும்பி வந்த விவரமே தெரியாது. ஆகையால் ஆயனர் உயிர் பிழைத்திருக்கிறார் என்ற விவரத்தை மட்டும் சொன்னேன். பிறகு மெள்ள மெள்ள என் யோசனையையும் தெரிவித்தேன். பிரபு! என்னுடைய ஏமாற்றத்தை என்னவென்று சொல்வேன்?....'' இவ்வாறு கூறி நிறுத்தினான் சத்ருக்னன். (தொடரும்)

பிம்பம்

லலிதாபரமேசுவரன்

ஆனந்தனுக்குத் தன் தந்தையின் முகம் கூடத் தெரியாது. பச்சிளம் பாலகனாக இருந்த போதே அவன் தந்தையை இழந்துவிட்டவன். அவன் தந்தை இறந்த போது அவனுக்கு ஒரு வயதுகூட இராது. தாய் சொல்லி அவன் கேட்டிருக்கிறான்.

அவனது தாய்தான் அவனுக்குச் சகலமும்—மாதா, பிதா, குரு, தெய்வம், நண்பன் எல்லாம். அந்தத் தாயிடம் அப்படி ஒரு பக்தி, ஈடுபாடு, நட்பு, பாசம் அவனுக்கு. அவளைக் காணாமல் ஒரு கணம்கூட அவனால் இருக்க முடியாது. அப்படி ஓர் ஒட்டுதல் அவளிடம்.

ஆனந்தனின் தாயும் 'மகனை அரும்பாடு பட்டு வளர்த்துப் பெரியவனாக்கினாள். அவளது உலகமே அவள் பெற்ற அருமந்தக் குமாரன்தான். உலகத்தில் தாயும் மகனும் ஒருவரையொருவர் அன்புடன் நேசிப்பது சகஜம்தான். எனினும் ஆனந்தனும் அவன் தாயும் பழகியதைப் பலர் இரகசியமாகக் கேலியும் செய்தனர். ஏனெனில், வாலிப வயது வந்து பட்டப் படிப்பு முடிந்து ஆனந்தன் நல்லதொரு வேலையில் ஈடுபட்ட பின்னரும் அவன் தாய் அவன் உடைகளைச் சீராக வைப்பது, காலணிகளுக்குப் பூச்சுப் போடுவது முதலிய பணிகளில் மட்டும் இன்றித் தன் கையால் அவன் முன்னுச்சிக் கேசத்தை ஒதுக்குவது போன்ற செய்கைகளிலும் மாளாத ஆர்வம் காட்டுவாள்.

உழைப்பினாலும் திறமையினாலும் கை நிறைய ஊதியம் பெறும் ஆனந்தனுக்குப் பெண் கொடுக்கப் பலர் முன்வந்தனர். அவனது திருமணத்தில் அவன் தாயும் ஆர்வம் காட்டினாள். திருமணத்துக்குப் பெண்ணும் நிச்சயித்து விட்டார்கள், முகூர்த்தத் தேதியும் குறித்தாகிவிட்டது.

அப்போதுதான் யாரும் எதிர்பாராமல் ஒரு விசித்திர சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு காரணமுமின்றி ஆனந்தனின் தாயின் மனநிலை மாறுதல் அடைந்தது. சம்பந்திகளாக வருகிறவர்களிடம் ஏனோ வெறுப்பை உமிழ்ந்தாள். ஆனந்தன் தன் வருங்கால மனைவி விஜயாவைப் பற்றிப் பேசினாலே சீறலானாள். முதலில் நிதானமாகத் தன் ஆட்சேபத்தைச் சொல்லி வந்தவள் பின்னர் பகிரங்கமாகவே ஆனந்தனைச் சாடலானாள்.

ஒரு நாள் தன் அலுவலகத்தில் ஆனந்தன் இதைப் பற்றித் தன் நண்பரிடம் பேசிக் கொண்டிருக்கையில் அவர், ''இது மனத் தத்துவப் பிரச்னையாக இருக்கலாம்'' என்று கூறி அச்சமயம் பாரத நாட்டில் ஒரு பிரபல மனத் தத்துவ ஆஸ்பத்திரியில் பணியாற்றி வந்த வெளிநாட்டு நிபுணர் டாக்டர் மாஸைப் பார்த்து ஆலோசனை கேட்கச் சொன்னார்.

டாக்டர் மாஸ் ஆனந்தனின் குடும்பத்தைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொண்ட பின் நிதானமாகச் சொன்னார்:

''மிஸ்டர் ஆனந்தன்! உங்கள் தாய்க்கு ஒரு நோயுமில்லை. இது ஒரு மனோதத்துவப் பிரச்னைதான். இதைத் தீர்க்க முடியும் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அதற்கு மருந்துகளைக் காட்டிலும் பிரச்னை உருவான விதத்திலேயே பிரச்னையைத் தீர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. அதற்கு உங்கள் பூரண ஒத்துழைப்புத் தேவை.

''இந்தப் பாசம், அன்பு, பிரேமை இருக்கிறதே, இவை விசித்திரமான சக்தி வாய்ந்த பண்புகள். இவை மனிதனை ஆகாயத்துக்கும் உயர்த்தும், அதள பாதாளத்துக்கும் தள்ளும். அதிசயப்படாதீர்கள்; இது மறுக்க முடியாத உண்மை, ஆனந்தன்.

''ஒரு பண்பே உருவான பெண் மாமியார் ஆகிவிட்டவுடனேயே கொடூரமானவளாக மாறிவிடுவதை நாம் கண்டிருக்கிறோம். ஏன், தெரியுமா? அதை ஒரு வகையில் அன்பின் சக்தி என்று சொல்லலாம். தன் மைந்தன் மீதுள்ள அன்பினால், அந்த அன்பை மற்றொருத்தி பகிர்ந்து கொண்டு போய் விடுகிறாளே என்ற பொறாமையால் தூண்டப்பட்டு அவள் கொடுமைக்காரியாகிவிடுகிறாள். பெரும்பாலும் கணவனை இழந்த மனைவிகள்தான் இந்த நிலைக்கு ஆளாகிறார்கள் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதிலும் அவர்கள் பெரும்பாலும் ஒரே மைந்தனைப் பெற்றவர்களாகத்தான் இருக்கிறார்கள்.

''இப்போது உங்கள் தாயாரின் நிலைக்கு வருவோம். நான் சொல்பவை உங்களுக்குக் கசப்பாக இருக்கலாம். ஆனால் நான் ஒரு மனோவைத்தியன் என்று எண்ணாமல் ஒரு நண்பன் என்ற முறையில் சொல்லுகிறேன்.

''உங்கள் தாயார் ஒரு பால்ய விதவை. பதினேழு வயதில் திருமணமாகிப் பத்தொன்பது வயதிலேயே விதவையாகிவிட்ட துர்ப்பாக்கியவதி. உங்கள் தகப்பனாருக்கு அப்பொழுது வயது இருபத்தைந்து என்கிறீர்கள். அதாவது இப்போது உங்களுக்கு ஆகும் அதே வயது. நினைவு வைத்துக் கொள்ளுங்கள். இதே இருபத்தைந்து வயது.

''உங்கள் தாய் உங்கள் தந்தையை மிக மிக நேசித்திருக்கிறாள். உள்ளத்தாலும், உடலாலும் அவள் உங்கள் தந்தையை விட்டுப் பிரியவே ஒருபோதும் பிரியப்பட்டிருக்க மாட்டாள். விதியின் திருவிளையாடலால் அவள் கணவனை இழந்து விட்டாள். வருடங்கள் ஓடினாலும் அவள் நெஞ்சில் கணவன் இறந்த போது நின்ற தோற்றம் நிலைத்து விட்டது. இன்னும் அவள் நெஞ்சில் அவள் கணவன் ''இருபத்தைந்து வயது'' கட்டிளங் காளை

யாகவேதான் தோன்றுகிறான். ஆனந்தன்! அதாவது தற்போதைய உங்கள் வயது! கேட்கிறீர்களா?''

''மேலே சொல்லுங்கள், டாக்டர்!''

''பாசத்தையும், அன்பையும் குழைத்து உங்களை உங்கள் தாய் வளர்த்தாள். நீங்கள் வளர்ந்தீர்கள். அவள் தாயானாலும் மனத்தளவில் நிறைவேறாத, பூரணத்வம் எய்தாத தன் கணவனின் காதல், அன்பு அவள் உள் மனத்தினூடே இலை மறைவு காய் மறைவாக சதா இருந்திருக்கிறது. அவள் கணவனிடம் கொண்ட அதீத காதலாலும், இந்தியப் பெண்களுக்கே உண்டான பண்பாலும் அவள் மறுமணமின்றிப் பல்லாண்டு கழித்தாலும் மனத்தில் அமைதி யில்லாமலேயே இருந்



திருக்கிறாள். அந்தக் குறைபாட்டை அவளே அறிந்திராத ஒரு விசித்திரமான நிலை இது. ஆனந்தன், அதற்கு ஒரு வடிகால் இருந்திருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிராது. ஆனால் துரதிர்ஷ்டவசத்தால் அவளே அறிந்திராத அந்தக் குறை மேலும் வளர உங்கள் தோற்றம், நடை உடை பாவனை தூபமிட்டுள்ளன!''

''டாக்டர்! நீங்களென்னசொல்கிறீர்கள்?''

''பதறுகிறீர்கள், ஆனந்தன். நான்தான் சொன்னேனே, இது ஒரு கசப்பான மறுக்க முடியாத உண்மை என்று! கேளுங்கள். நீங்கள் வளர்ந்தீர்கள். அப்படியே உங்கள் தந்தையின் மறு பதிப்பாக இருக்கிறீர்கள் என்று புகைப்படமே சான்று கூறுகிறது. தாயை மகிழ்விப்பதாக எண்ணித் தந்தையைப் போலவே இயற்கையாக உங்களுக்கு அமைந்த பழக்க வழக்கங்கள் தவிர உடைகளிலும் அவரது பாணியைக் கடைப்பிடித்தீர்கள். தெரிந்தோ, தெரியாமலோ நீங்கள் உங்கள் தாய்க்கு இந்நிலை உண்டாகக் காரணகர்த்தா ஆகிவிட்டீர்கள்.''

''டாக்டர்!''

''பதறுகிறீர்கள், சொல்லுங்கள் ஆனந்தன்! இதில் தவறு ஏதுமில்லை. உடலுக்கு வியாதி வருவதில்லையா? அதைப் போல் உள்ளத்துக்கும் ஒரு வியாதி வரும் என்ற கோணத்தில் நோக்குங்கள்....

''உங்கள் இருபத்தைந்தாவது பிறந்த தினத்தன்று முதல் நான் உங்கள் தாயின் குணத்தில் பலத்த மாறுதல் என்றீர்கள். அந்தத் தினம் அவள் விசித்து விசித்து அழுததாகச் சொன்னீர்கள். அன்றைய தினம் அவளுக்குத் தன் கணவரின் நினைவு வந்து சோகம் எல்லை கடந்து விட்டது. உங்களைத் தன் மகன் என்று அறிந்தும் அவள் உள் மனம் உங்களைக் கணவனாகவே பாவிக்கிறது.''

''இந்தப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது, டாக்டர்?''

''அதற்குத்தான் வருகிறேன். உங்கள் தாயை இங்கு விடுதியில் சேர்த்து விடுங்கள். ஒரு ஆறு மாத காலம் அவளைக் காணாதீர்கள். உங்கள் நடை உடை பாவனைகளை முற்றிலும் மாற்றிக் கொண்டு புதிய நபராகத் தோற்றம்

அளிக்க வேண்டும். ஆனால் தாய்ப்பாசத்தை ஒவ்வொரு சொல்லும் கொட்ட வேண்டும். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

ஆறு மாதங்களுக்குப் பின்னர்...

''டாக்டர்! வெளியூரிலிருந்து இன்று என் மகன் வருவதாகச் சொன்னீர்களே, வந்து விட்டானா?''

''இதோ இவன்தானம்மா உங்கள் ஆனந்தன். அடையாளம் தெரியவில்லையா?''

''அம்மா! அம்மா! என்னைத் தெரியவில்லே? உன் கை அவியல் சாப்பிடாமல் என் நாக்குச் செத்துப் போச்சு அம்மா!''

''ஆனந்தா! வாப்பா, வா!... மீசை தாடியைப் பார்த்து யாரோன்னு நினைச்சேன். அவியல்னதும்தான் தெரிஞ்சுது! எப்படியப்பா என்னை விட்டு விட்டு இருந்தே?''

ஆறு மாதங்கள் மேலும் ஓடின.

''உங்கள் தாயார் எப்படி இருக்கிறார்கள், ஆனந்தன்?''

''உங்கள் நல்வாழ்த்துக்களால் நன்றாகவே இருக்கிறார்கள். எங்கள் தமிழ் வருடத்துக்கேற்ப அடுத்த மாசி மாதம் விஜயா ஒரு குழந்தையைப் பெறுவாள். பெண் பிறந்தாலும் பொதுவாக நிலவும் ''மாசிலாமணி'' என்று பெயர் சூடி ''மாசி'' என்று அழைக்கப் போகிறோம்.''

''அப்படியா! காட் பிளஸ் மாசி!''

வட்ட மேஜை

சண்டிகர் பற்றிய கட்டுரையைப் படித்தேன். கல்கி பிரதிநிதி இவ்வளவு தூரம் பயணப்பட்டு வந்து எங்கள் நகரைப்பற்றி எழுதிய தற்கு மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கிறேன். என்றாலும் சில விஷயங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியத்தையும் உணர்கிறேன்.

மத்திய அரசுக்கு உட்பட்ட சண்டிகரில் நகரமும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் அடங்கும். இதனை ஒரு மாவட்டம் என்று கூறுவதே பொருந்தும். இந்த மாவட்டத்தின் துணை ஆணையாளர் நான். இது தமிழகத்தின் கலெக்டர் பதவிக்கு இணையானது.

இங்கே பஞ்சாபி பேசும் மக்கள் தொகைக்கு இணையாக ஹிந்தி பேசும் மக்களும் உண்டு.

சண்டிகரில் புகை கக்கும் தொழிலகங்களைத் தடை செய்திருந்தாலும் 775 ஏக்கர் பரப்பளவுள்ள பெரிய தொழிற்பேட்டை உள்ளது. ஆண்டுதோறும் அயல்நாடுகளுக்கு ஒரு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள் ஏற்றுமதியாகின்றன.

நகரில் சில கட்டிடங்களைச் சரிவரக் கவனிக்க முடியாமல் போனதால் அவை ரொம்பவும் பழையனபோல் தோற்றமளிக்கலாம். ஆனால் பொருளாதார ரீதியான நெருக்கடி மிகுதியாயிருந்தும் நகரை மிகவும் சுத்தமாக வைத்திருக்கிறோம். உலகின் மிக அழகிய நகரங்களுள் ஒன்று என்று பெயர் எடுத்திருக்கிறது சண்டிகர்.


சண்டிகர்,
5–12–74 எம்.ஜி. தேவசகாயம்

காதல் ஆசிரியர், ராஜ ராஜ சோழன் நாடக ஆசிரியர் அரு. ராமநாதன் அவர்கள் மறைவு பற்றிக் கல்கியில் ஒன்றுமே எழுதாது விட்டுவிட்டீர்களே? அரு. ராமநாதன் சிறந்த சரித்திரக் கதாசிரியர். 'வீரபாண்டியன் மனைவி' சரித்திர நவீனத்தை எழுதியவர். கல்கியில் அவரது குண்டுமல்லிகை மணம் பரப்பி வருகிறது. மறக்கலாமா அவரை?



மதுரை
10–12–74 மாவலி இர. தங்கபாண்டியன்

இன்னிசைச் சிறப்பிதழில் டி. எஸ். பார்த்தசாரதி அளித்த எதிர்காலச் செல்வங்கள் மிகவும் பொருத்தமானது. ''ஜூனியர் ஆர்டிஸ்ட் கச்சேரியா? நான் போகப் போவதில்லே'' என்று சபா டிக்கட்டுகளை வீணாக்குபவர் எத்தனையோ பேர். அவர்கள் எல்லோருக்கும் சூடுகொடுத்தது போலிருந்தது.



க்விஸ் முறைப்படி தற்கால வித்துவான்களின் பால்ய வயதுப் படத்தைப் பிரசுரித்துஅரங்கேற்றமான முறையை விவரித்து விமர்சித்தது வெகு அழகாக இருந்தது.

சென்னை - 4 கௌரி
13–12–74 ராமமூர்த்தி

இன்னிசைச் சிறப்பிதழ் குறித்துக் கடிதம் எழுதி, பாராட்டிய அனைவருக்கும் நன்றி கூறுகையில், அவ்விதழ் அட்டைப் படத்தை எடுத்தளித்த உத்தராவுக்கும் நம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறோம். - ஆசிரியர்.

உண்மையே, உன் விலை என்ன?

சோ

எழுதும் நாடகம்

கல்கி

12.1.1975

பொங்கல் சிறப்பிதழில்

ஆரம்பமாகிறது



THERE ARE ONLY TWO KINDS OF WOMEN-



THOSE WHO READ *femina* AND THOSE WHO DON'T

WHICH KIND ARE YOU?

If you are not already one among our 16 lakh readers*, do yourself a favour.....start ordering your copies of Femina today.

Twice every month, Femina will speak on issues that need to be talked about. We will take you from the metros to the suburbs, from the small towns to the villages, to show you the new Indian woman at work and in the home. We will bring you her ideas on health, politics, the economy, clothes, furniture, films and books—the whole business of living—right up to your doorstep. Maybe you will want to give Femina to your husband, your children, your friends. So that they can understand you better. Don't wait another day !

BUY YOUR COPY TODAY !!

*Source : ORG Survey

femina

INDIA'S FASTEST GROWING FORTNIGHTLY



ரெட்ஹில்ஸ் தேவியின் கவலை

நான் இல்லா விட்டால் சென்னை வாசிகள் என்பவர்களும் இருக்க மாட்டார்கள். ஆம், புழலேரி என்ற நான், இல்லாவிட்டால் சென்னை நகரம் என்பது ஒன்று இருக்கவே முடியாது. சொல்லப் போனல் பட்டினத்து ஆசாமிகள் என்னையும் காவிரி—கங்கை முதலிய ஆறுகளை வணங்குவதைப் போல் வணங்கி வந்திருக்க வேண்டும்.

ரெட்ஹில்ஸ் தேவியான நான் இன்று சுமார் 47 அடி உயரம் உள்ளவளா யிருக்க வேண்டும். ஆனால் தரைமட்ட அளவிலிருந்து இந்தா றடி உயரம் உள்ளவளாகக் குன்றி விட்டிருக்கிறேன்.

இரண்டு மாதங்கள் முன்னர் என்னில் பல பகுதிகளில் சப்பாத்திக் கள்ளி வளரத் தொடங்கியது. சில பகுதிகள் சேறும் சகதியுமாக இருந்தன.

ஏதேதோ ஒரு மருந்தைப் போட்டு வடிகட்டி அனுப்பிய அந்தச் சகதித் தண்ணீரையும் சாப்பிட்டு வந்தீர்கள். உங்களுக்குக் குழாயில் தண்ணீர் என்று வந்தால் போதுமே.

இப்படித் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருந்தும் நீங்கள் அதைச் சிக்கனமாக உபயோகிப்பதில்லை. செவ்வாய் கிரகவாசிகள் சொட்டு என்னுல் சொட்டுத் தண்ணீரை வீணுக்க மாட்டார்கள். அந்தக் கிரகத்தில் மழை என்று மாதிரிக்குத்தான் பெய்யும். சின்னஞ் சிறு கால்வாய்களை இராணுவ வீரர்கள் காவல் காத்து வருவார்கள். தண்ணீர் ஒரு பாட்டில், அரை பாட்டில் என்று ரேஷன் செய்யப்பட்டிருக்கும். செவ்வாய் கிரகவாசிகள், பேனுவில் மசி போட உபயோகிக்கப்படும் ஃபில்லர் போன்ற ஒன்றை உபயோகித்துத் தண்ணீரை நிரப்பிக் கொண்டு செல்வார்கள் — ஒரு சமயம் செவ்வாய்க் கிரக வாசிகளுக்கும் பூலோக வாசிகளுக்கு மிடையே தொடர்பு ஏற்பட்டது. கலாசாரப் பரிமாறல்



களும் ஏற்பட்டன. செவ்வாய்க் கிரக சர்வகலாசாலைப் பேராசிரியர் ஒருவர் பூலோக சர்வகலாசாலை ஒன்றில் செவ்வாய்க் கிரக மொழியைப் போதிக்க வந்திருந்தார். அவர் உடல் ஒல்லியாய், குச்சியாய் அமைந்தது. போதிய தண்ணீர் உபயோகிக்கா விட்டால் உடல் வளர்ச்சி அப்படித்தான் இருக்கும்.

அவரை விரும்பாத ஒரு மாணவன் அவரைச் 'சித்ரவதை' செய்ய ஒரு யுக்தி கண்டு பிடித்தான். அவர் எதிரில் ஒரு குடம் தண்ணீரைக் கீழே கொட்டுவான். அதைக் கண்டு ஆசிரியர் சோகம் மேலிட்டு மயங்கிக் கீழே விழுவார். தண்ணீர் வீணுவதைக் கண்டால் செவ்வாய்க்கிரகவாசிகளுக்கு மன அதிர்ச்சியும், உடல் அதிர்ச்சியும் ஏற்படுமாம். இப்படி ஒரு விண்வெளிக் கதையில் எழுதப் பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.

என் உயரம் அதிகமாய்க் குறையாமல் இருப்பதற்கு இந்தப் பகுதியில் பருவமழை சமத்தியாய்ப் பெய்ய வேண்டும். ஆனல் இந்தப் பருவ மழை இருக்கிறதே, அது ஒழுங்காக நடந்து கொள்வதில்லை. பெய்யவோ, பெய்யாதிருக்கவோ, ஒரேயடியாய்ப் பெய்து வெள்ளக் காடாய் அடிக்கவோ எனக்கு ஜீவாதார உரிமை உண்டு என்கிறது. அது வானிலை நிபுணர்களை ஏமாற்றுவதையே தன் தொழிலாகக் கொண்டிருக்கிறது.

பருவ மழையின் தயவின்றியும், என் தயவின்றியும் சென்னைக்கு வீராணத்து ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டு வரப் போகிறார்களாம். கொண்டு வரட்டும். ஆனல் வீராணத்து ஏரிக்குத் தண்ணீர் எங்கிருந்து வரும்? காவிரியிலிருந்துதானே?

காவிரிக்கு எங்கிருந்து வரும்? மேட்டூர் அணைத் தேக்கத்திலிருந்து! மேட்டூருக்கு எங்கிருந்து வரும்?

கர்நாடக ராஜ்யத்தில் உள்ள கிருஷ்ணராஜ சாகரத்திலிருந்து! நினைவிருக்கட்டும்!

தமிழ் நாடு அட்டானமி என்பதை மத்திய அரசாங்கத்திலிடமிருந்து பிடுங்கிக் கொண்டு விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது தமிழ்நாடு வெற்றிக் கோஷத்துடன்,

'அட்' என்றதும் கர்நாடகத்தில் காவிரிக்குக் குறுக்கே வழி மறைத்து நிற்கும் கிருஷ்ணராஜ சாகர் திட்டத்தில் தமிழ் நாட்டுக்குத் தண்ணீர் விடாமல் அடைக்கும் எட்டு ஷட்டர்கள் கீழே விழும்.

'டான' என்றதும் பத்து ஷட்டர்கள். 'மி' என்றதும் மிகுதியுள்ள ஷட்டர்கள் இறங்கும்! — அனுமதேயம்



"என்னக்கானது ஏமாற்றம்!"

ருக்மிணி பார்த்தசாரதி

சிவராமன் ஒரு மாத லீவில் சென்னைக்கு வந்திருந்தார், மனைவி கமலாவோடு. அரசாங்கச் சேவகரான அவர், பாரதத்தின் பல வேறு நகரங்களில் பணி புரிந்திருக்கிறார். கை நிறைய சம்பாத்தியம். மனம் நிறைந்த வாழ்க்கை. ஒரு பையன், இரண்டு பெண்கள் என்று மூன்று மக்கள். மணம் முடித்து வைத்துவிட்டார் மூவருக்கும். இப்போது, இந்த ஐம்பத்தைந்து வயதில் அவரும், ஐம்பதைக் கடந்துவிட்ட கமலாவும், பிக்குப் பிடுங்கலற்ற சுதந்திரப் பறவைகள், புது மணத் தம்பதியரைப் போல் !

சிவராமன் இரண்டு மூன்று வருடங்களுக்கு ஒரு முறை கட்டாயம் சென்னைக்கு வருவார். தம் தமையன் வீட்டில் இறங்குவார். மறு நாளே கமலா தன் பிறந்த வீட்டு மனிதர்களோடு சீராடத் தன் தமையனின் இல்லத்துக்குச் சென்றுவிடுவாள். சென்னையிலுள்ள அத்தனை உறவினர்களையும் நண்பர்களையும் கண்டு குசலப்பிரச்னம் செய்து, ஆசை தீரத் தமிழ்ப் படங்கள் பார்த்து, வாரந்தோறும் கோயிலுக்குச் சென்று நிறைவு கண்டபின், கணவன் மனைவி இருவரும் சென்னையை விட்டுப் பயணமாவார்கள்.

ஆயிற்று. இருபத்தெட்டு நாட்கள் கழிந்துவிட்டன. ஊருக்குக் கிளம்பும் படலத்தின் முதல் அத்தியாயமாக, கமலா தன் தமையனிடம் விடைபெற்றுக் கொண்டு, மைத்துனர் வீட்டுக்கு வந்துவிட்டாள். இரண்டு நாட்கள் ஓய்வோடு கழித்துவிட்டுப் புறப்பட வேண்டியதுதான்.

சட்டென்று நினைவு வந்தவராய்ச் சிவராமன் மனைவியிடம், "என் நண்பர்கள் கோபாலனையும் மூர்த்தியையும் போன தடவையே பார்க்க முடியலே..... இந்தத் தடவையாவது போய்ப் பார்க்கணும் !" என்றார்.

கமலாவும் ஆமோதித்தாள்.

சிவராமன் தம்பதி கோபாலனின் வீட்டுக்குள் நுழைந்தபோது, ஓர் அழகான காட்சி அவர்களை வரவேற்றது. ஒரு வயது ஆண் குழந்தை ஒன்றை மார்பின் மீது உட்கார வைத்துக் கொண்டு, சோபாவில் சாய்ந்தவாறு பேரானந்தத்தில் மூழ்கியிருந்தார் கோபாலன். சிவராமனைக் கண்டதும், குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டு "வாடா சிவா, வா!" என்று வரவேற்றார்.

"யார் இந்த ராஜாப் பயல்? உன் பேரனா?" என்றார் சிவராமன்.

"ஆமாம்!" கோபாலனின் குரலில் பெருமை வழிந்தது.

உள்ளேயிருந்து எட்டிப் பார்த்த கோபாலனின் மனைவி, கமலாவைக் கண்டதும் முகம் மலர, "வாருங்கள்!" என்று வரவேற்றாள்.

"பிள்ளையும் நாட்டுப் பெண்ணும் எங்கே?" என்று சம்பாஷணையைத் தொடங்கினாள் கமலா.

"கிளம்பிடறேன்" ஏதோ சினிமாவுக்குப் போகணுமாம். ட்ரெஸ்ஸிங் நடக்கிறது!" என்று பெருமிதத்தோடு சொன்னாள் கோபாலனின் மனைவி. சற்று நேரத்தில் கோபாலனின் பிள்ளையும் மருமகளும் அங்கு வந்து சிவராமன் தம்பதிக்கு வணக்கம் தெரிவித்தார்கள். "ஸாரி, மாமா! டிக்கெட் ரிஸர்வ் பண்ணி விட்டேன். அவசரமாகக் கிளம்ப வேண்டியிருக்கு!" என்று கோபாலனின் மகன் வந்தவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு மனைவியோடு வாசலை நோக்கி நகர்ந்தான்.

கமலா குழம்பிப் போனாள். கோபாலனின் மருமகள், தான் போட்டோவில் பார்த்து நினைவில் வைத்துக் கொண்ட பேரழகி; நிச்சயமாக இவள் அல்ல...

கமலா தயங்கியவாறே, "உங்கள் பிள்ளை நாட்டுப் பெண்ணின் கல்யாணப் போட்டோவை நான் பத்திரிகையில் பார்த்தேன்" என்றாள்.

"ஓ, அவளா ? அவளை என் பிள்ளை டைவர்ஸ் பண்ணி விட்டானே!" என்று சர்வ சாதாரணமாகச் சொன்னாள் கோபாலனின் மனைவி.

"என்ன? டைவர்ஸா?"

"ஆமாம். எங்களுக்கோ ஒரே பிள்ளை. அவனுக்குக் குழந்தை பிறந்து பார்க்க நாங்கள் எத்தனை ஆசைப்பட்டோம் தெரியுமா? இரண்டு வருஷங்கள் பொறுத்துப் பார்த்தோம். பின், பிள்ளை, மருமகள் இரண்டு பேரையும் வைத்தியரிடம் அழைத்துப் போனோம். பிள்ளை நார்மல். மருமகளுக்கோ குழந்தையே பிறக்க முடியாது. அதற்குமேல் தயங்க என்ன இருக்கிறது? அவளை டைவர்ஸ் பண்ணிவிட்டு இவளை மணம் முடித்தோம். மறு வருஷம் எங்கள் வீட்டில் கிருஷ்ண விக்கிரகம் மாதிரி பேரன் பிறந்தான்!"

சிவராமன் தம்பதி விடைபெற்றுக் கொண்டனர். டாக்ஸி பிடித்து மூர்த்தியின் வீட்டுக்குச் செல்லும்போது கமலா, "கோபாலனின் பிள்ளை..." என்று ஆரம்பித்தாள். தொடர்ந்து, "எனக்கென்னவோ பரிதாபமாக இருக்கு" என்றாள்.

''யாரை நினைத்துப் பரிதாபம்?''

''டைவர்ஸ் பண்ணினார்களே அந்தப் பெண்ணை நினைத்து. குழந்தை இல்லேன்னு அதுக்காக இப்படி ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பலி வாங்கலாமா?''

''கமலா! குழந்தை வேணும்னு ஆசைப்படறது ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் பொதுவான ஆசை... இதில் பரிதாபப்பட ஒன்றுமில்லே.''

கமலா பதில் சொல்லவில்லை.

மூர்த்தியின் வீட்டுக்குள் சிவராமன் தம்பதி நுழைந்தபோது ஆனந்தமயமான சிரிப்பு அவர்களை வரவேற்றது.

மூர்த்தி தம் குடும்பத்தினரை அறிமுகப்படுத்தினார். ''உங்களுக்குத்தான் என் மிஸஸைத் தெரியுமே. இது என் ஒரே மகள் கலா. நினைவிருக்கிறதா? இது மாப்பிள்ளை சேகர்!''

சிவராமன் சேகரைப் பார்த்துக் குழம்பி விழித்தார். பாட்னாவில் தமிழ்ச் சங்கத்துக்கு வருவானே, அவனில்லேலே இந்த வாலிபன்?

''கலா டெலிவரிக்காக வந்திருக்கிறாள். சேகர் அவளைக் கொண்டு விட வந்தான். நாளைக்கு டெல்லிக்குத் திரும்பிப் போகிறான்!'' என்றார் மூர்த்தி.

சிவராமன் தம்பதி விடைபெற்று பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்தபோது சிவராமன் அதிர்ந்து காணப்பட்டார். கமலாவின் முகத்தில் அதிர்ச்சியோடு சிந்தனையும் இழைந்திருந்தது.

அவர்கள் அதிர்ச்சிக்குக் காரணம் இந்தச் செய்திதான். மூர்த்தியின் மகள் கலா அந்தப் பாட்னா பையனைத்தான் மணந்தாள். வருடங்கள் கழிந்தன. மக்கட் பேறு இல்லை. வைத்தியரிடம் இருவரையும் அழைத்துச் சென்றபோது கிடைத்த தீர்ப்பு — கலா நார்மல், அந்தப் பாட்னா பையன் தந்தையாகவே முடியாது. பிறகென்ன? டைவர்ஸ் தான். சேகர் முற்போக்கு எண்ணங்கள் கொண்டவன். கலாவை மணக்கத் தயங்கவில்லை.

சட்டென்று சிவராமன் ''உலகம் தலைகீழாப் போயிண்டிருக்கு!'' என்றார், ஆத்திரத்துடன்.

''இதையே கோபாலனின் பிள்ளை செய்தபோது உங்களுக்கு ஏன் அருவருப்பாக இல்லே? குழந்தை வேணும் என்கிற ஆசை எல்லா மனிதப் பிறவிக்கும் பொதுவான ஆசை என்று சொன்னது நீங்கள்தானே? கலாவுக்கும் அந்த ஆசை இருந்தால் அதில் என்ன தவறு?''

சிவராமன் சட்டென்று தம் மனைவியைப் பார்த்தார். அது ஒரு கணவன் தன் மனைவியைப் பார்க்கும் பார்வை. ''நீ என் அடிமை!'' என்று சொல்லாமல் சொல்லும் பார்வை.

''நான் சொல்லட்டுமா? தன் கணவனுக்கு அடங்க வேண்டிய மனைவியாகத்தான் எந்தப் பெண்ணையும் உங்களால் பார்க்க முடியறது. அவளை ஆசாபாசங்களும் விருப்பு வெறுப்புக்களும் கொண்ட மனிதப் பிறவியாய்ப் பார்க்க முடியலே. உங்களைச் சொல்வானேன்? கலா செய்த துணிகரமான காரியம் என்னையே அதிகமாக அதிர வைத்துவிட்டது. பெண்ணாய்ப் பிறந்த நானே ஒரு பெண்ணை மனிதப் பிறவியாய்ப் பார்க்க முடியாமல்தானே இருக்கிறேன்! பெண்களின் அடிமை நிலைக்கும் பெண்களின் மனப்போக்கே ஓரளவு காரணமா யிருக்கிறதோ?'' என்று கலங்கிப் போய்க் கூறினாள் கமலா.

சகாயமாதா



நாகர்கோவிலிலிருந்து தென் கிழக்கே ஐந்து மைல் தொலைவில் செந்நெல் கழனிகளும், தென்னந் தோப்புகளும் சூழ்ந்து எழில் கொழிக்கும் சகாயபுரம் என்னும் ஊர் காணப்படுகிறது. இங்கு சகாயமாதா கோவில் ஒன்று உள்ளது. இவ்வாலயம் 1964ம் ஆண்டு கட்டப்பட்டது. இத்தலத்தில் கன்னி மரியாள் மக்களுக்குப் பல வழிகளில் அருள் அளிப்பதால் 'சகாய மாதா' என்னும் திருநாமம் பெற்றாள் என்பர். இவ்வாலயம் சக்தி வாய்ந்த கிறிஸ்துவ ஆலயங்களில் ஒன்றாகப் போற்றிப் புகழப்படுகிறது.

இவ்வாலயத்துக்குக் கிறிஸ்தவர்கள் மட்டுமின்றி எல்லா மதத்தினரும் வந்து பிரார்த்தனை செய்து தங்கள் துன்பங்களைக் கடிதங்களில் எழுதி அதற்காக வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் இடுகிறார்கள். அப் பெட்டி மதகுருவால் புதன்கிழமைதோறும் திறக்கப்படுகிறது. அருள் வேண்டிப் பக்தர்களால் எழுதப்படும் அக்கடிதங்களை ஆலய மதகுரு மாதாவின் சன்னதியில் ஒவ்வொன்றாகப் படித்துக் கடிதம் எழுதியவர்களுக்காகப் பிரார்த்தனை செய்கிறார். இவ்வழிப் பிரார்த்தனை மூலம் பலருக்கும் சகாய மாதாவின் அருள் கிடைக்கிறது.

பிரார்த்தனை கைகூடிய பக்தர்கள் மாதாவுக்கு நன்றி தெரிவிக்கும் கடிதங்களையும் எழுதி அப் பெட்டியில் சேர்க்கிறார்கள். பக்தர்கள் தங்கள் பிரார்த்தனைகளைக் கடிதம் மூலம் மாதாவுக்குத் தெரிவிக்கும் வழக்கம் சகாயமாதா ஆலயத்தில்தான் உண்டு.


—உ. ராமநாதன்



திருச்சி ஸ்ரீ K. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி K. S. ஜெயராமன் B.Com.,க்கும், புதுவை அரியாங்குப்பம் ஸ்ரீ V. P. ஜெயராம செட்டியார் அவர்கள் குமாரத்தி சௌ. மாலதிக்கும் திருச்சியில் 1-12-74 அன்று திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்


ஒற்றர் ஜாக்கிரதை — சென்ற இதழ் தொடர்ச்சி
கான்ஸ்டன்டைன் கண்ணில் படாமல் எய்த்து விட்ட ஏஜெண்டின் ஒரே ஒரு ப்ரா அவனை ஷேடி டாக்டரிடம் காட்டிக் கொடுத்து விட்டது!
உண்மையைச் சொல். அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?
தன் தாயாருடன் வசிக்கிறாள்.
தவறு! நான் சொல்கிறேன். ரீம்ஸ் நகருக்குப் போவதாக நீ பொய் சொன்னதாகவும் ஷேடி டாக்டர் என்பவனை நீ சந்திக்கப் போவதாகவும் பிரெஞ்சு அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருப்பாள்!
காதலிகள் ஜாக்கிரதை என்ற எங்கள் எச்சரிக்கையை நீ அலட்சியம் செய்ததால் இன்னும் சற்று நேரத்தில் நம்மைக் கைது செய்ய இங்கு பிரெஞ்சு போலிஸ் வரும்!
ஐயோ! தப்ப வழி?
இந்தக் கடிதத்துடன் மயான பூமிக்குச் செல். மஞ்சள் கோடு போட்ட நீலச்சட்டை அணிந்திருப்பவனிடம் கொடு. உன்னை அவன் தப்புவிப்பான். நான் வேறு மார்க்கமாய் ஜெர்மனியை அடைகிறேன்.
உயிர் மீதுள்ள ஆசையால் ஷேடி டாக்டர் கூறியபடி நடந்து கொண்டான் கான்ஸ்டன்டைன்.
இரண்டே நாளில் நான் ஜெர்மனியை அடைய வேண்டும். ஷேடி டாக்டர் உத்தரவு!
ஆனால் கான்ஸ்டன்டைன் மயான பூமியை விட்டு வெளியே வரவேயில்லை!
ஷேடி டாக்டர் ஒருவனுக்கு உதவுமாறு கடிதம் எழுதித் தந்தால் அதற்கு அர்த்தம் நேர் மாறானது என்பது உனக்குத் தெரிய நியாயமில்லை, கான்ஸ்டன்டைன்! கட்டளையை நிறைவேற்றினேன். உன் ஆத்மா சாந்தி அடையட்டும்!


ஒற்றர் ஜாக்கிரதை 6
தொகுப்பு: நாடோடி சித்திரம்: ராஜு
இத்தாலியில் உருவான ஒரு விமான தளத்தின் வரைபடம் பிரெஞ்சு தளபதி பேனியருக்குத் தேவைப்பட்டது. காசுக்காக ஒற்றாடல் புரியும் பலருள் ரோஸா என்பவள் மூலம் சில தினங்களில் அது கிடைக்கவும் செய்தது. ரொம்ப சுலபமாய்க் கிடைத்ததாலேயே பேனியருக்குச் சந்தேகம்!
நம் எதிரிகள் வேண்டுமென்றே தவறான வரைபடத்தை நம் தலையில் கட்டியிருப்பார்கள்!
அப்படியென்றால் இதை நம்மிடம் விற்ற ரோஸா மறு தரப்பிலும் பணம் பெற்றுக் கொண்டிருப்பாள்!
இருக்கலாம். உண்மையை அறிந்து வரும் பொறுப்பை சான்-பியரி ஏற்கட்டும். இருவரும் மகா சாமர்த்திய சாலிகள்!
சான்-பியரி என்ற காதலர்களுக்கு ஒற்றாடலே தொழில். பணத்துக்காக யார் தரப்பிலும் வேலை பார்ப்பார்கள்! தளபதி பேனியரின் வேண்டுகோளை ஃபோன் மூலம் அறிந்ததும்....
...அன்றிரவு ரோஸா கொடுத்த ஒரு பார்ட்டிக்கு ஒரு கனவான் போல் நடித்துச் சென்றான் பியரி.
சீயர்ஸ்!
சற்று நேரத்தில் ரோஸாவை வான் பீடன் என்பவன் தனியே அழைத்துப் போவதை கண்டு பியரி பின் தொடர்ந்த போது...
மரியாதையாக அசல் பிளானை என்னிடமே திருப்பித் தந்து விடு!
பணம் கொடுத்தால் தருகிறேன்!


அடி பாவி! முதலில் அசல் பிளானில் சில மாறுதல்களைச் செய்து மேஜர் பேனியரிடம் சேர்ப்பிப்பதாகச் சொல்லி என்னிடம் பணம் வாங்கிக் கொண்டாய். பிறகு சாமர்த்தியமாய் அதை நகல் எடுத்து நகலில் சில மாறுதல்களைச் செய்து பேனியரிடம் தந்து அவனிடம் பணம் பெற்றுக் கொண்டாய்!...
...இப்போது அசல் பிளானைத் திருப்பித் தா என்று நான் கேட்டால் அதற்கும் பணம் கேட்கிறாய்!
அசல் வரைபடம் இதுதான் என்று பேனியரிடம் தந்து நான் மீண்டும் பணம் பண்ண முடியுமே!
பணப் பேயே! துரோகி! நாளை மாலைக்குள் பிளான் என்னிடம் திரும்பி வரா விட்டால்...! ஜாக்கிரதை!
பார்ட்டிக்குப் பிறகு காதலர்கள் பியரி–சான் சந்திப்பு. பியரி அசல் வரைபடத்தைத் திரும்பப் பெற திட்டம் வகுத்தான்.
நீ இப்படி செய்...
பியரியின் யோசனைப்படி காலை ரோஸாவின் வீட்டை அடைந்தாள் சான்.
யார் நீ?
உங்கள் டெய்லரின் உதவியாள். அளவுகளைத் தொலைத்து விட்டாராம். மீண்டும் அளவெடுத்து வர அனுப்பினார்.
யுக்தி பலித்தது. அளவெடுப்பது போல் நடித்த சான்...
இந்தக் கூரிய கத்திரிக்கோல் உன் அழகான முதுகில் குத்திக் கிழிக்கக் கூடாதென்றால் அசல் பிளான் எங்கிருக்கிறது கூறிவிடு!

தொடரும்



போட்டிக் கதை-17

கிடைக்காத பாக்கியம்

எஸ்.வி.ஐக

குலந்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயராயினவெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலமளிக்கும்
வலந்தரும் மற்றும் தந்திடும்
பெற்றதாயினுமாயின செய்யும்
நலந்தரும் சொல்லைநான் கண்டு
கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

ஆராவமுத ஐயங்கார் கிணற்றடியில் வாளியில் தண்ணீரை இழுத்துத் தப தப வென்று தலை மேல் கொட்டிக் கொண்டார். ''நாராயணா என்னும் நாமம்'' என்று வாய் முணுமுணுத்துக் கொண்டே வாளியைக் கிணற்றில் இறக்கி அது நிரம்பியவுடன் மேலுக்கு இழுத்து மறுபடியும் தலையில் கொட்டிக் கொண்டார். வாய் ஆழ்வார் பாசுரங்களை இசைத்துக் கொண்டிருந்தது; திருமஞ்சனம் ஆர அமர நடந்து கொண்டிருந்தது.

பழுத்த வயது. எழுபது இருக்கும். உடல் தளர்ந்து கைகால்கள் அசையும்பொழுது சுருங்கிய சதை தளதளவென்று ஆடிற்று. சிவந்த மேனி. நாராயணன் நாமம் இடை விடாது சொல்லிச் சொல்லி மெருகேறிய முகக் காந்தி. நெற்றியில் திருமண் இட்ட இடம் வடு விழுந்து திருமண் இருப்பது போலவே வெளுத்திருந்தது. தண்ணீர்த்துளிகள் உடலில் சூரிய கிரணத்தில் பளபளவென்றது. முக க்ஷவரம் செய்யாதிருந்ததால் பத்துப் பதினைந்து நாட்கள் வளர்ந்த வெள்ளை மயிர் தாடையிலும் முக வாயிலும் வளர்ந்து நரசிம்ம அவதாரம் போல் கம்பீரமாய் முகம் தேஜஸுடன் மிளிர்ந்தது. துவைத்துப் போட்டிருந்த தலைவத்தால் உடம்பைத் துடைத்து விட்டுக் கொண்டார்.

''நாராயணா! உடம்பு தள்ளவில்லையே! இன்னும் பூமிக்குப் பாரமாய் என்னை எவ்வளவு நாட்கள் இருக்க வைத்து வேடிக்கை பார்க்க உன் திருவுள்ளமோ!'' என்று காஞ்சீபுரம் வேஷ்டியை இடுப்பில் பஞ்சகச்சம் வைத்துக் கட்டிக் கொண்டு திருமண் காப்புக்கு உட்கார்ந்தார். அப்போது கருட சேவையில் கருடாழ்வார் அலங்கரிக்கப்பட்டு ஸ்ரீமன் நாராயணனைத் தாங்கக் காத்திருப்பது போல் ஆராவமுத ஐயங்கார் திகழ்ந்தார்.

''சீதம்மா!'' என்று குரல் கொடுத்தார்.

''இதோ, வந்துவிட்டேன்'' என்று துளசிச் செடிகள் மத்தியிலிருந்து குரல் கொடுத்தாள் சீதம்மா.

''இன்னும் திருத்துழாய் சேகரித்துக் கொண்டிருக்கிறாயா? ஆராதனைக்குச் சந்தனம் அரைத்தாகி விட்டதா?'' என்று கேட்டார்.

வெள்ளித் தட்டில் துளசி நிரம்பி வழிந்தது. சீதம்மாள் ஆராவமுத ஐயங்காரின் தேஜஸுக்கு எள்ளளவும் குறைந்தவள் இல்லை. நெற்றியில் ஆண்டாளைப் போல் திலகமிட்டிருந்தாள். ஈரத் தலைமயிரைத் துடைத்து அப்படியே பின்புறம் முடித்திருந்தாள். அதன் மேல் ஒரு கொத்து மல்லிகை மலர். முகம் மஞ்சள் பூசிக் குளித்ததால் தங்கம் போல் தகதகத்தது. இரண்டு காதுகளிலும் ஜ்வலிக்கும் வைர ஓலைகள். அதேபோல் மூக்குத்தி. ஆராவமுத ஐயங்கார் நரஸிம்ம அவதாரம் போல் கம்பீரமாய் இருந்தால் சீதம்மாள் அலர்மேல்மங்கைத் தாயார்போல் புன்னகை பூத்துக் கருணையின் வடிவமாய்த் திகழ்ந்தாள்.

ஆராவமுத ஐயங்கார் கேட்ட கேள்விக்குப் பதில் சொன்னாள். ''நீங்கள் திருமண் காப்பு முடித்துக் கொண்டு வருவதற்குள் சந்தனம் மற்றும் ஆராதனைக்கு வேண்டிய சகலமும் தயாராய் இருக்கும்.''

''சீதம்மா! உனக்கு வயதாகிப் போச்சு. முன் மாதிரி வேகமாய் ஓடி ஆடி எனக்கு சிசுருஷை செய்ய முடியவில்லை. நான் விட்டேனா? உன்னை விரட்டறேன்'' என்று மனைவியைப் பார்த்துச் சொன்னார்.

''எனக்கு வயதானால் உங்களுக்கு மாத்திரம் ஆகவில்லையான்னா? உங்களைவிட நான் எட்டு வயது சின்னவள். அதை மறந்துவிட்டீர்கள்'' என்று பதிலுக்குச் சொன்னாள்.

வயதானவர்களின் அன்புப் பிணைப்பே தனிரகம். இன்றைய நாகரிக வாழ்க்கையின் கொஞ்சல்கள் இல்லை என்றாலும் பகவத் கைங்கரியத்தில் கணவனுக்கு மனைவி



இளைத்தவன் இல்லை என்ற போட்டா போட்டி.

''ஒத்துக்கறேன் அம்மா. என்னை விட எட்டு வயது சின்னவன்தான். எனக்கு உடம்பு வர வரத் தள்ளலே. திருமண் இட்டுக் கொள்ளக் கூட முடியாமல் கைவிரல்கள் எப்படி நடுங்குகின்றன பார்த்தாயா ?''

''நான் இட்டுவிடறேனே!'' என்று சீதம்மாள் முன்வந்தாள்.

''பதி சிசுருஷையில் அதையும் சேர்க்க வேண்டிய நாள் தூரத்தில் இல்லை என்று தோன்றுகிறது. நாராயணன் திருவுள்ளப்படிதானே எல்லாமே நடக்கப் போகிறது? இவ்வளவு நாட்கள் பண்ணிய ஆராதனையோடு அவன் திருப்திப்பட்டுத் திருவடியில் சேர்த்துக் கொள்கிறானோ, அல்லது கை தளர்ந்து, கண் போய், பிறத்தியார் கையை எதிர்பார்க்குமாறு என்னை அலைக்கழிக்கப் போகிறானோ, தெரியலே... நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன், நாராயணா என்னும் நாமம்''' என்று முணுமுணுத்துக் கொண்டே மணையிலிருந்து எழுந்தார்.

''ஆமாம்! நீங்கள் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது ராமானுஜம் ஏதோ சொன்னானே, என்ன சொன்னான்?'' என்றாள் சீதம்மாள்.

''ராமானுஜம் வந்தானா? என்ன சொன்னான்? அவனைப் பார்க்கவும் இல்லை, என்ன சொன்னான்னு கேட்கவும் இல்லையே!'' என்றார் ஆராவமுத ஐயங்கார்.


''உங்களுக்கு வர வர உலகமே மறந்து போயிடறது. அதிலும் கையிலே வாளியை எடுத்துண்டு கிணற்றடிக்குக் குளிக்கப் போயிட்டா வைகுந்தத்திலே நாராயணனையே சேவிக்கப் போகிறவர்மாதிரி பிள்ளை, பெண், பெண்டாட்டி ஒண்ணும் கண்ணுலே படறதில்லை. குழந்தை என்ன சொன்னானோ... வந்து கேட்டால் என்ன பதில் சொல்லுவீர்கள்?'' என்று கணவனைக் கடிந்து கொண்டாள். தாய் உள்ளத்தில் முதல் இடம் புத்திர வாத்ஸல்யம்.

இவை ஒன்றும் அவர் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. ஆராதனை மும்முரமாய் நடந்து கொண்டிருந்தது. பெரிய வெண்கல மணி கண, கணவென்று ஒலி எழுப்பியது.

''இன்று என்ன சர்க்கரைப் பொங்கல் ?'' என்றார் ஆராவமுத ஐயங்கார், நிவேதனத்தைப் பார்த்து விட்டு.

''ராமானுஜம் ஏதோ பிஸினஸ் விஷயமாய் யாரையோ பார்க்கப் போகணும்னு நேற்று சொல்லிக் கொண்டிருந்தான். அது ஒரு சிக்கலும் இல்லாமல் முடியணுமேன்னு ஸ்வாமிக்குச் சர்க்கரைப் பொங்கல் பண்ணினேன்'' என்று பிள்ளையின் சிரேயஸ்ஸை மனத்தில் வைத்துப் பகவத் கிருபையைக் கோரினாள்.

''என்ன! இப்ப இருக்கிற பணம் போறலையாமா ? நானும் இவ்வளவு நாட்களாகத் தினம் ஆராதனம் செய்து கொண்டு வருகிறேன். ஒரு நாள் கை நீட்டிப் பெருமான் தீர்த்தம் வாங்கிக் கொள்ள வீட்டில் இருக்கிறானா ? பணம், பணம்னு அப்படி ஒரு பைத்தியமா ? உன் பிள்ளையின் போக்கு உனக்குத்தான் பெருமையாகப் படறது'' என்று பிள்ளையின் மேல் குறை கூறிக் கொண்டே சீதம்மாளின் உள்ளங் கையில் வெள்ளி வட்டிலிருந்து ஆராதனைத் தீர்த்தத்தை விட்டார்.



ஈ.வெ.ரா.வும் இறைவனும்!

கோவை பீளமேட்டில் உள்ளது சர்வஜன உயர்நிலைப்பள்ளி. 1932ல் இப்பள்ளிக்கு வருகை தந்த ஈ.வெ.ரா. பள்ளி பார்வையாளர் புத்தகத்தில், "இப் பள்ளியும் அதனை நிறுவிய பி.எஸ்.ஜி. ரங்கசாமி நாயுடுவும் எல்லா நலனும் பெற இறைவனை இறைஞ்சுகிறேன்" என்று தமது கைப்பட எழுதியுள்ளார். இந்த வாரம் பொன்விழா கொண்டாடும் இப்பள்ளி ஈ. வெ. ரா.வின் இந்த வாசகங்களைக் காட்சிக்கு வைத்துள்ளது. (தினமணி—9-12-74)

"தலையிருக்கச்சே, வாலாடுமா? நீங்கள் தான் செய்கிறீர்களே. அது பிள்ளையைச் சேராதா?" என்று பிள்ளைக்கு வக்காலத்து வாங்கினாள் சீதம்மாள்.

"அப்படின்னா நீ என்ன சொல்வறே? நான் உயிரோடு இருக்கச்சே, அவன் ஸ்வாமிக்குத் தண்டன் இடறதை நான் பார்த்துச் சந்தோஷப்படக் கூடாது. அதுதானே!" என்று தம் உள்ளத்தில் ஆழ்ந்து புதைந்து கிடக்கும் அபிலாஷையை வாய்விட்டுச் சொன்னார். தம் பின்னே தாம் ஆராதனம் செய்தபின் ஸ்வாமியைச் சேவித்து, தம் கையால் கொடுக்கும் பெருமாள் தீர்த்தத்தை உள்ளங் கையில் வாங்கி உறிஞ்சித் தலையில் தெளித்துக் கொண்டு, நைவேத்தியத்தை வாயில் போட்டுக் கொள்ளும் காட்சியைக் காண ஆசைப்பட்டார். அது நிறைவேறாமலே வாழ்க்கையில் ஒரு குறையுடனேயே பரம பதம் அடைந்து விடப் போகிறோமே என்ற குறை.

ராமானுஜம் இன்ஜினியரிங் படிப்பு முடித்து ஒரு சிறு தொழிலை ஐந்தாண்டுகளுக்குமுன் ஆரம்பித்தான். அவன் ஜாதகத்தின் விசேஷமோ, அல்லது தகப்பனார் பல்லாண்டு இசைத்ததின் பலனோ தொழில் நல்ல வருவாயைத் தேடித் தந்தது. முதலில் ஒரு ஸ்கூட்டரில் நடமாடத் தொடங்கியவன், பணம் சேரச் சேர அது தொழில் கௌரவத்துக்குப் போதாது என்று பெரிய காராகவாங்கி அதில் பறந்தான். பெரிய பணக்காரர்களுடன் பழகித் தொழில் முறைகள் பற்றித் தெரிந்து கொண்டான். எந்தெந்த நிறுவன அதிகாரிகளுடன் யார் யார் சாதுர்யமாய்ப் பேசி ஒவ்வொரு காண்ட்ராக்டும் பெற்றார்கள் என்று அளவளாவி அறிந்தான். ஒரு நிறுவனத்தை முதலில் தொடங்கிய ராமானுஜம், ஓரிரண்டு வருடங்களில் அவன் வீடு தேடி வரும் சிலருடன் கூட்டுத் தொழில்கள் ஆரம்பித்துப் பணம் திரட்டும் வழிகளை விரிவுசெய்துகொண்டிருந்தான். அவன் பேச்சில் ஓர் அலட்சியம் தொனித்தது. நடையில் தனக்கு நிகர் யாரும் இல்லை என்ற மிடுக்கு ஏறிற்று. பணம் செலவழிப்பதிலும் ஒரு நிதானம் இல்லை.

அன்று ஆராதனத்தை முடித்துக் கொண்டு, பிள்ளை தம் ஆசையைப் பூர்த்தி செய்யாத குறையுடன் வாசல் ஹாலில் ஈஸிசேரில் உட்கார்ந்தார் ஆராவமுத ஐயங்கார். வாசலில் கார்க் கதவு சாத்தும் சப்தம் கேட்டது.

"ராமானுஜம் வந்து விட்டான் போல் இருக்கிறது. உங்களுக்குக் குறை ஏன்? அவனிடம் உங்கள் ஆசையைச் சொல்கிறேன்" என்று சீதம்மாள் சொன்னாள். அவன் வீட்டினுள் நுழையும்பொழுதே முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருப்பதைத் தாய், தகப்பன் பார்த்தார்கள். நேரே ஹாலுக்கு வந்தான்.

"ஏன் அப்பா! நான் என்ன சொல்லி விட்டுப் போனேன். உன்னால் எனக்கு ஐம்பதாயிரம் பிஸினஸ் போயிற்று" என்று இரைந்தான்.

"என்னடா, சொன்னே ராமு?" என்று தாயார் சமாதானப்படுத்தும் நோக்கத்துடன் பேசினாள். ஒரு நூறு ரூபாய் பிஸினஸில் நஷ்டம் என்றாலும் ராமானுஜத்தின் பேச்சு, வார்த்தை, நடத்தை எல்லாமே அப்பா இல்லை, அம்மா இல்லை எல்லோரையும் தூக்கி எறிந்தது போலவே யிருக்கும்.

"சொன்னேன், சுரைக்காய்க்கு உப்பு இல்லேன்னு. அப்பா குளித்துக் கொண்டிருக்கச்சே, 'என்னைத் தேடிண்டு வரவனை உட்கார்த்திருக்கச் சொல்லு. வந்துவிடுகிறேன்' என்று சொல்லச் சொன்னேன். அவன் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறான். அப்பாதான் கேட்க வேண்டாம். 'நாராயணு'ன்னு ஆரம்பிச்சுட்டார்னு பூகம்பமே வந்தாலும் தெரியாது.


"ஏன், அப்பா, ஆராதனையை ஐந்து நிமிஷங்கள் கழித்துப் பண்ணினால் ஸ்வாமி வேண்டாம் என்கிறாரா?" என்று தகப்பனாரை நையாண்டி செய்வது போல் கேட்டான். அவர் அப்படியே குன்றிவிட்டார்.

"ஏண்டா, ராமு! என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போகக் கூடாதா?"

"நீதான் துளசி பறித்துக் கொண்டிருந்தே..... உங்களையெல்லாம் நம்பறதை விட ஒரு காரியதரிசியை நியமிக்க வேண்டியது தான்" என்று கோபம் அடங்காதவனாய்ப் பேசினான். எதற்கும் தகப்பனார் ஒரு வார்த்தை பேசவில்லை. அவர் மனம் கொந்தளித்தது. ராமானுஜம் கத்திவிட்டு மறுபடியும் தன் காரில் போய் விட்டான்.

ஆராவமுத ஐயங்கார் அப்புறம் ஒரு வார்த்தை யாருடனும் பேசவில்லை. கடைசியாகப் 'பல்லாண்டு' பாடி மனைவிக்குத் தீர்த்தம் வழங்கியதோடு சரி. சாப்பிட உட்கார்ந்தார். ஆகாரம் இறங்கவில்லை. பையன் பிஸினஸ் பெருகக் கோரிச் செய்த சர்க்கரைப்

அருமையான காபி ப்ரூ, அறிவில் சிறந்தவள் என் மனைவி



சுமார் நான்கு ரூபாய்க்கு 30 கப்புக்கு மேல் ஸ்ட்ராங் காபி தயாரிக்கலாம் என்கிறாள் என் மனைவி பத்மா. ப்ரூ மிகச்சிறந்தது. ஒவ்வொரு கப்பும் நல்ல ருசியுள்ளது.

ஒவ்வொரு கப் ப்ரூவுக்கும் வறுத்து அரைத்த காபியின் விலையைவிட அதிகமில்லை


எனக்கு நினைவு தெரிந்த நாளாக நான் காபித் தூளையே உபயோகித்து வருகிறேன்.

இப்பொழுது இன்ஸ்டண்ட் காபிகளில் ப்ரூ ஒன்றையே விரும்பி சாப்பிடுகிறேன். ஏனென்றால் ப்ரூவின் ருசி சிறந்த காபியின் ருசியேதான்.

ப்ரூ ஸ்ட்ராங்கானது, திடமானது, சிறந்த மணம் கொண்டது. அவசரத் தேவையின் போதோ எதிர்பாரா விருந்தினர் வரும் போதோ ப்ரூ ரொம்ப சௌகரியமாய் இருக்கிறது.

ப்ரூ—ஓர் அபாரமான கண்டுபிடிப்பு.

ப்ரூ ருசி சிறந்த காபியின் ருசி



முதலில் தோன்றியது எது?

சாதாரணமாக உபயோகப்படுத்தப்படும் முற்றுப்புள்ளி (.) கமா (,) செமிகோலன் (;) கோலன் (:) இவைகளில் முதலில் வந்தது எது? தெரிந்து கொள்ளுங்கள்: முற்றுப்புள்ளி தான்! இது 14ம் நூற்றாண்டில் வந்தது. அடுத்தது கோலன் (1485) பிறகு கமா (1520) கடைசியாக செமி-கோலன் (1570).

ஆதாரம்: க்யூரியஸ் ஃபாக்ட்ஸ் தகவல்: பாலி

பொங்கல் பிரயோசனப்படவில்லை. நஷ்டம் வந்ததாகத் தாய், தகப்பன் மேல் குற்றம் கண்டுபிடித்தது தான் கண்டது.

மனச் சோர்வுடன் ஆராவமுத ஐயங்கார் படுத்துக் கொண்டார். மத்தியானம் மணி இரண்டு அடித்தது. சீதம்மாள் கையில் காப்பியுடன் ஆராவமுத ஐயங்காரை எழுப்பினாள். பதில் ஒன்றுமில்லை. அசைத்துப் பார்த்தாள். பலனில்லை. திகில் பிடித்துக் கொண்டது. டெலிபோனை எடுத்துப் பிள்ளையின் தொழிற்சாலைக்குப் போன் செய்தாள். "ராமு! அப்பா பிரக்ஞை இல்லாமல் இருக்கிறார். உடனே டாக்டரை அழைத்துக் கொண்டு வா."

கொஞ்ச நேரத்தில் வாசலில் கார் வந்து நின்றது. டாக்டரும் வந்திருந்தார். தகப்பனார் படுத்திருந்த கட்டிலின் அருகில் நின்று கொண்டு, "அப்பா!" என்றான். மல்லாந்து இருக்கும் நிலைக்குக் கொண்டு வர டாக்டரும், அவனுமாக அவரைத் திருப்பினார்கள். தலையணையில் ராமானுஜம் கை வைத்துப் பார்த்தான். நனைந்திருந்தது. எழுபது வயதுத் தகப்பனார் அழுததைத் தலையணைதான் பார்த்தது. டாக்டர் பரிசோதித்தார். கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீர்க் கறையை விரலினால் தடவிப் பார்த்தார்.

"இவருக்கு ஏதோ அதிர்ச்சி என்று தோன்றுகிறது. மனத்தைவிட்டுச் சொல்லாமல் அழுதிருக்கிறார் போலிருக்கிறது. ஏதாவது அதிர்ச்சி தரும் சம்பவம் நிகழ்ந்ததா?" என்று கேட்டார்.

"இல்லை, காலையிலே நான் சற்றுக் கோபமாய்ப் பேசினேன். வேறு ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை."

சீதம்மாள் விக்கினாள். அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. "'இன்றைய ஆராதனையுடன் ஸ்ரீமத் நாராயணன் திருப்திப்பட்டுத் திருவடியில் சேர்த்துக் கொள்வானா' என்று காலையிலேதாண்டா சொன்னார். அதற்குள் இப்படிப் போய்விட்டாரே" என்று அழுதாள்.

துக்கம் விசாரிக்க வந்து போனவர்களின் எண்ணிக்கை அநேகம். செய்ய வேண்டிய கருமங்கள் ஒரு குறைவும் இல்லாமல் நடந்தன. எல்லாம் முடிந்து ராமானுஜம் வீட்டு ஹாலில் உட்கார்ந்திருந்தான். தாயார் வீட்டில் மற்றோர் அறையில் நிலைகுலைந்து சோகத்தில் படுத்துக் கிடந்தாள்.

தகப்பனார் போன சூன்யம் கொஞ்சம் கொஞ்சமாக ராமானுஜத்தை வேதனையில் ஆழ்த்தியது. அவர் ஸ்தூல சரீரம் போன சூனியம் பெரிதாகப் படவில்லை. அவர் சூக்ஷ்ம சான்னித்தியம் போனதுதான் பெரிய சூன்யமாய் அவன் உள்ளத்தைக் கடைந்தது. கிணற்றின் மர ராட்டினத்தில் ஒலி இல்லை; வாளியில் தண்ணீரைத் தலைக்குமேல் தூக்கிக் கொட்டும் நீர்வீழ்ச்சியின் சலசலப்பு ஒலி இல்லை; பளபளவென்று துலங்கும் வெண்கல மணியின் கணகணவென்ற மங்கள ஒலி இல்லை; "நலம் தரும் சொல்லை நான் கண்டுகொண்டேன்" என்று தகப்பனார் இசைத்த பக்தி ஒலி இல்லை. ஏன்? வீட்டில் ஒருவித ஒலியும் இல்லை.

ராமானுஜம் எழுந்தான். தகப்பனார் உபயோகித்த அறைக்குப் போனான். மறு நாளுக்கு மடியாய்த் துவைத்துப் போட்டிருந்த காஞ்சீபுரம் வேஷ்டி கொடியில் உலர்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. பூஜை அறைக்குப் போனான். கடைசி நாள் ஆராதனை செய்த திருத்துழாய் பதினைந்து நாட்களாக அப்புறப்படுத்தப்படாமல் சருகாய்ப் போய் வெள்ளித் தட்டில் கிடந்தது. புளி போட்டுத் துலக்கச் செய்யாத வெங்கல மணி அழுக்கேறித் துக்கம் காப்பது போல் இருந்தது. அன்று சீதம்மாள் போட்ட கோலம் மட்டும் அழியாமல் இருந்தது. அங்கிருந்து கிணற்றடிக்குப் போனான். கயிற்றில் கட்டப்பட்டிருந்த வாளி அப்படியே இருந்தது.

ராமானுஜம் சட்டையைக் கழற்றி எறிந்தான். மங்கள ஒலிகள் இல்லாத வீட்டின் பயங்கர நிசப்தம் அவனைப் பீதி அடையச் செய்தது. வாளியைக் கிணற்றில் இறக்கினான். ராட்டினம் கடகடவென்று சப்தித்தது. அவன் உடலை ஏதோ ஒரு வேகம் ஆட்கொண்டது. இருபது வாளித் தண்ணீரை இழுத்துத் தகப்பனார் போல் கொட்டிக் கொண்டான். நீர் வீழ்ச்சியின் சத்தம் சலசலவென்றது. தகப்பனார் உபயோகித்த காஞ்சீபுரம் வேஷ்டியை இடுப்பில் கட்டிக் கொண்டான். அவர் உட்கார்ந்து உபயோகித்த மணையில் உட்கார்ந்து திருமண் இட்டுக் கொண்டான். வெள்ளித் தட்டில் வாடி வதங்கியிருந்த துளசியை எறிந்து புதிதாகச் சேகரித்துக் கொண்டான். பூஜை அறைக்கு வந்தான். தகப்பனார் நடத்திய ஆராதனை கிரமம் ஒன்றும் தெரியவில்லை. அவன் சின்னவயதில் மனப்பாடம் செய்த ஒரே ஒரு பாசுரம் நினைவில் இருந்தது. வெண்கல மணியைப் பலக்கச் சப்தித்தான். "குலம் தரும், செல்வம் தந்திடும்" என்று பாசுரத்தை உரக்கச் சொன்னான். பூஜை அறையில் தகப்பனார் குரல் எதிரொலித்தது போல் ஓர் உணர்வு.

துக்கத்தில் படுத்திருந்த சீதம்மாளுக்கு ஒரு பிரமை. எங்கிருந்து இந்த ஒலிகள் வருகின்றன. பர்த்தா போய்விட்டாரே..... பிரமையா? என்று கண் விழித்தாள். பிரமை இல்லை என்று நிச்சயித்தாள். தள்ளாடி நடந்தாள். ராமானுஜம் பாசுரத்தின் முடிவை அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னான்.

"நலம்தரும் சொல்லைக் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று முடித்துக் கொண்டே சாஷ்டாங்கமாய்த் தண்டனிட்டான்.

எழுந்தவனை, அப்படியே தழுவி, "ராமானுஜம் இந்தப் பாக்கியத்தைக் காணத்தான் வேடா, உன் தகப்பனார் ஏங்கினார். இந்தப் பாக்கியம் கிடைக்காமலே போய் விட்டாரே!" என்று சீதம்மாள் விம்மினாள்.

தாய்ப் பாசம்

ஹாஸ்யப் படமாக ஆரம்பித்துச் சோகப் படமாக மாறி, கடைசியில் சந்தோஷமாக முடிகிறது.


பிரமீளாவின் துடிப்பான நடிப்பு 'டீன் ஏஜ்'காரர்களைச் சுலபமாகக் கவர்ந்துவிடும். இந்தத் துடிப்புக்கு ஈடு கொடுத்து, சிவகுமார் சக்கைப் போடு போடுகிறார். தாய்ப்பாசத்தினால் துடிக்கும் சந்தர்ப்பங்களில் பிரமீளாவின் நடிப்பு மிக நன்றாயிருந்தது. தங்கவேலுவின் நடிப்பு நகைச்சுவையின் கருவூலம்.

எம். ஆர். ஆர். வாசு மாறுதலுக்குக் கண் கலங்கி நடிக்கிறார். பேபி ஸ்ரீ லக்ஷ்மி டாக்சி டிரைவர் மகளாகவும், பணக்கார மூர்த்தியின் மகளாகவும் இரட்டை வேடங்களில் தோன்றுகிறாள். அத்தனை நடிகர்களும் அந்தக் குழந்தையை என்னென்னவோ கேட்டும் அந்தக் குழந்தை உன்மத்தம் பிடித்தமாதிரி எப்படித்தான் நடித்தாளோ!

பி. வி. சினிவாசன் டைரக்ஷனில் உருவான படத்தின் திரைக்கதை சற்றுப் புதுமையானதுதான். இப்படியெல்லாம்கூட நடக்குமா என்று மட்டும் கேட்காமல் இருந்தால் பார்த்து ரசிக்கலாம்! விபத்தில் இறந்து போன பையனின் பிணத்தைப் 'பீரோ'வில் ஒளித்து வைப்பதும் பிறகு நடுநிசியில் யாருக்கும் தெரியாமல் அடக்கம் செய்வதும்.... என்னவோ போங்கள்! பெற்றவள் தாங்க மாட்டாள் என்பதற்காக, குழந்தையின் தந்தையே இப்படிச் செய்வானா?

இயல்பாகப் போக வேண்டிய தாய்ப் பாசத்தை வெளிப்படுத்த அரும்பாடுபட்டிருக்கிறார்கள்!





தேவி கருமாரி அம்மன்

தேவரின் 'தெய்வம்'தான் இதற்கும் அடிப்படை என்றாலும் நெஞ்சைத் தொடும் பல சம்பவங்களைக் கோத்து அலுப்பில்லாமல் பார்க்கச் செய்திருக்கிறார்கள். திரைக் கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய பொறுப்புக்களை ஏற்றிருக்கும் வியட்நாம் வீடு சுந்தரத்துக்கு மூன்று அம்சங்களிலும் வெற்றி.

கே. ஆர். விஜயா, தேவி கருமாரி அம்மன். அநுபவம் பேசுகிறது. நடிப்பாற்றலினால் மன நிறைவைத் தருகிறார்.

பூசாரியாக வரும் மேஜர் சுந்தரராஜன், நீசனாக வந்து தேவியால் ஆட்கொள்ளப்படும் ஸ்ரீகாந்த், எம். ஆர். ஆர். வாசு ஆகியோர் சிறப்பாய் நடித்திருக்கின்றனர்.

குறி சொல்லும் பெண்மணியாக வந்து ஆர்ப்பாட்டமாக நடிக்கும் மனோரமா படத்தின் சிரிப்பு விருந்து!

நடிகர்களின் நாயகமாக விளங்குபவர் எஸ். வி. சுப்பையா. லக்ஷாதிபதியாக இருந்து வாரி வாரி வழங்கி நொடித்துப் போய் நடுத் தெருவுக்கு வந்துவிட்ட நிலையிலும் பக்தி நெறியில் வழுவாமல் நிற்கிறார்.

'சோ'வும், தங்கவேலுவும் நகைச்சுவை விருந்தளிக்கின்றனர். பேபி இந்திரா, தேவியுடன் நேருக்கு நேர் பேசும் பாக்கியவதி. குழந்தையின் நடிப்பு அருமையாயிருக்கிறது. பி. என். சுந்தரத்தின் வண்ண ஒளிப்பதிவுக்கு ஒரு சபாஷ்!

தாய்மார்களின் தனிப் பாராட்டைப் பெறக் கூடிய படம் ''தேவி கருமாரி அம்மன்''.

— காந்தன்



பொன்னியின் புதல்வர்



சுந்தா

22. தேனீ திரட்டியவை

மொட்டு விடுதல் மலர்வதற்கே!

திருமணம் முடிந்து சென்னைக்கும் வேலைக்கும் திரும்பிய கிருஷ்ணமூர்த்தி, நவசக்தியின் அன்றாட அலுவல்களுடன் மொழிபெயர்ப்பாளராய்க் காந்தியின் சுய வரலாற்றைத் தமிழாக்குவதிலும், அகஸ்தியராய்ச் சிறுகதை எழுதுவதிலும், தமிழ்த் தேனீயாய்ப் பல வேறு பத்திரிகைகளிலிருந்து செய்திகளைத் திரட்டிச் சுவையாக உருட்டிக் கொடுப்பதிலும் தொடர்ந்து ஈடுபட்டார்.

'' தன்னம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் நவசக்தியின் சேவையில் கல்கி ஈடுபட்டார். அவை இரண்டுமே, அவரைப் பிற்காலத்தில் புகழ் ஏணியில் ஏற்றுவித்தன'' என்று, அவருடைய மூத்த சகா, சாமிநாத சர்மா, இந்தக் கட்டுரை ஆசிரியனிடம் கூறினார். தேனீ என்று அவர் கொண்ட புனைபெயருக்கு ஏற்ப, எப்போதும் கல்கி சுறுசுறுப்பாய் இருப்பார் என்றும் அவர் சொன்னார்.

''ஊர் வம்பு'' என்ற தலைப்பின் கீழ் தமிழ்த் தேனீ அளித்த நகைச்சுவைத் துணுக்குகளும், விசித்திரச் செய்திக் குறிப்புக்களும், கேலி கலந்த கருத்துக்களும், இப்போது சாமானிய பணியாகத் தோன்றலாம். ஆனால் அக்காலத்தில், அதுவும் நவசக்தியின் பக்கங்களில், நூதனமாய் இருந்தன. பழைய நவசக்தி இதழ்களை இந்த நூலாசிரியன் புரட்டிப் பார்த்தபோது, தேசியம், சமயம், இலக்கியம், தொழிலாளர் இயக்கம் முதலியவை பற்றி, அவற்றில் நிறைந்திருந்த கனமான கட்டுரைகளுக்கு, தேனீயின் ரீங்காரக் குறிப்புக்கள், நல்ல சுவை மாற்றம் கொடுத்ததைக் கண்டான். அவை பெரிய விஷயங்களாக இல்லாவிட்டாலும் பின்னர் கல்கி எழுதப் போகும் சிறப்பான தலையங்கங்களுக்கும் நயமான நகைச்சுவைக் கட்டுரைகளுக்கும், ஆதாரமுனைகளாய், ஆரம்ப முயற்சிகளாய், அடையாள அறிகுறிகளாய் இருந்தன.

செய்த காரியம் சின்னதுதான் என்றாலும் அதில் ரொம்ப சிரத்தை எடுத்துக் கொண்டிருந்தார் என்பது புலனாகியது.

அவற்றில் சிலவற்றை இங்கே பார்ப்போம் :

''இங்கிலாந்துக்கும் எமனுக்கும் இடையே இருக்கும் விரோதத்தின் காரணம் என்ன?'' என்று ஒரு பத்திரிகைத் தலைப்பு வினவுகிறது.

காரணமென்ன? இங்கிலாந்து பழைய எமனுக்குப் போட்டியாக, மோட்டார் எமன், பீரங்கி எமன் முதலிய புதிய எமன்களை உற்பத்தி செய்து வருவதுதான் காரணம்! வேறு என்னவாய் இருக்கக் கூடும்?

ஆனால் கீழே படித்துப் பார்த்ததில் 'எமன்' என்பது ஒரு தேசத்தின் பெயர் என்று தெரிய வந்தது. எனவே மேற்கண்ட நமது பதிலை ரத்து செய்து கொள்ளுமாறு நேயர்களை வேண்டிக்கொள்கிறோம். (22–8–28)

***

தமிழ் நாட்டில் இதுகாலை சில தேசபக்தக் கூட்டங்கள் சுற்றுப் பிரயாணம் செய்து வருகின்றன. பத்துப் பன்னிரண்டு பேர்களாகப் புறப்பட்டுத் தெருக்களில் தேசிய பஜனை செய்து செல்வதும், அவ்வாறு செல்லும் காலையில் பணம் வசூல் செய்துகொண்டு வந்து தளிகை செய்து புசிப்பதுமே இவர்கள் செய்யும் தொண்டு. தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பி வரும் இவர்களுடைய ஊழியத்தை நான் குறை கூறுவதாக எவரும் கருத வேண்டாம். இவர்கள் செய்யும் தொண்டுடன் இராட்டினத் தொண்டையும் சேர்த்து நடத்தினால் நலமாயிருக்கும் என்றே கூறுகிறேன்.

(6–6–24)

***

நன்றியறிதல் குணத்துக்கு ஒரு சிறந்த உதாரணமாக, பம்பாயின் மாஜி கவர்னர் ஸர் ஜார்ஜ் லாயிட்டின் பின்வரும் மொழிகள் இலங்குகின்றன:

''பொருளாதார நிலைமைக்குச் சம்பந்தமில்லாத காரணங்களினாலேயே, இந்தியாவுடன் லங்காஷயர் நடத்தி வரும் வியாபாரம் படுத்து விட்டது. இராஜத் துவேஷப் பிரசாரம் செய்யும் வாயை அடைத்துப் போட வேண்டும் என்று லங்காஷயர் ஜனங்கள் வற்புறுத்த வேண்டும்.''

இந்தியாவின் உப்பில் ஒரு விசேஷ மகிமை இருத்தல் வேண்டும் என ஊகிக்கிறேன். இன்றேல், இந்தியாவின் உப்பைத் தின்ற ஸர் ஜார்ஜ் லாயிட், ஏன் லங்காஷயருக்கு இவ்வளவு நன்றி காட்டுகிறார்?

ஸர் ஜார்ஜ் லாய்ட்டின் அறியாமை இரங்கற்பாலதாகும். அடக்குமுறையினால் ஒரு தேசத்தின் விடுதலை முயற்சியைத் தடுத்து விடலாமென்று அவர் மருட்சி கொண்டிருப்பது எனக்கு ஆச்சரியத்தையே விளைவிக்கிறது. வாயைத்தான் அடைத்து விடலாம். எண்ணத்தை ஏது செய்துவிட முடியும்?

(17-10-1924)

***

இந்தியாவில் போல்ஷ்விக்கர்களின் சதியாலோசனைகளைக் குறித்து, ஸர் பர்ஸிவல் பிலிப் என்பவர் லண்டன் "டெய்லி மெயில்" பத்திரிகையில் தொடர்ச்சியாகக் கட்டுரைகள் வரையத் தொடங்கி யிருக்கிறார். "அவற்றிலுள்ள விஷயங்கள் பிரிட்டிஷ் ஜனங்களுக்கு முற்றும் புதுமையா யிருக்கும்" என்று "டெயிலி மெயில்" முன்னுரை கூறுகிறது.

பிரிட்டிஷ் ஜனங்களுக்கு மட்டுமா? இந்தியர்களுக்கும் அவை புதுமையாகவே இருக்கும். எல்லாரையும்விட அதிகமாக போல்ஷ்விக்களுக்கு அவை பெரிதும் புதுமையா யிருக்கும். (8–2–28)

***

இந்நாட்டில் பிரிட்டனுடைய மதிப்பு தற்போது அடைந்துள்ள உச்ச நிலையை இதற்கு முன் எப்போதும் அடைந்ததில்லை என்று லார்ட் அல்லன்பி கூறுகிறார்.

பிரிட்டனுடைய மதிப்புக்காக நாம் அநுதாபப் படுகிறோம். அந்த மதிப்பு உச்ச நிலையை அடைந்து விட்டதென்றால், இனி கீழே இறங்குவதைத் தவிர வேறு வழியில்லையே? (8–2–28)

***

"இந்தியா ஒரு தேசமன்று; எப்போதும் ஒரு தேசமா யிருந்ததில்லை" என்று மாஜி முதன் மந்திரி லாயிட் ஜார்ஜ் அழுத்தமாய்க் கூறினார்.

அவர் அதை அவ்வளவு அழுத்தவேண்டிய அவசியமே யில்லை. இந்தியா ஒரு தேசமென்று யார் சொன்னார்கள்? இந்தியா பிரிட்டிஷ் சாமான்களுக்கு ஒரு மார்க்கெட்! பிரிட்டிஷ் இளைஞர்களுக்கு ஒரு சுகவாச ஸ்தலம்! அவ்வளவுதான்! (2–5–28)

***

"இந்தியாவின் நன்மைக்காக பிரிட்டிஷார் இந்தியாவில் இருக்க வேண்டும்" என்று ஸர் லெஸ்லி ஸ்காட் சொல்கிறார்.

சமீபத்தில் அவர் இந்திய சுதேச மன்னர்களின் வக்கீலாக ஆறு லட்சம் ரூபாய் கூலி பெற்று இந்தியாவுக்கு வந்து சென்றதும் இந்தியாவின் நன்மைக்காகவேதான்! சந்தேகமில்லை.

"பழைய வழக்க பழக்கங்களுள்ள பழைய நாடாகிய இந்தியாவில் மேனாட்டு ஜனநாயக முறையைப் புகுத்த முடியுமா என்பது பெரிதும் ஐயத்துக்கிடமான விஷயம்" என்பதாகவும் மேற்படி பிரபு கூறுகின்றார்.

அத்தகைய பழைய இந்தியாவில் புதிய மேனாட்டு ஆட்சியைப் புகுத்தலாமா என்னும் ஐயம் 150 வருஷங்களுக்கு முன்னிருந்த ஸர் லெஸ்லி ஸ்காட்டின் மூதாதையர்களுக்குத் தோன்றியிருந்தால் எவ்வளவு நலமாயிருந்திருக்கும்? (23–5–28)

***

தென்னமெரிக்காவில் உள்ள பல சிறு நாடுகளுள் ஒன்றின் சர்வாதிகாரிக்குக் கல்யாணம் நடக்கப் போகிறதென்று செய்தி வந்திருக்கிறது.

எத்தகைய சர்வாதிகாரத்துக்கும் ஒரு முடிவு இல்லாமல் போகுமா? (23–5–28)

***

இங்கிலாந்தில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் ஒரு கணவன் சாட்சியம் கூறுகையில் தனக்குக் கல்யாணம் ஆகி ஆறு வருஷங்கள் ஆயின வென்றும், ஆனால் அந்த ஆறு வருஷங்களில் தன் மனைவியுடன் ஒரே ஒரு விவாதந்தான் நிகழ்ந்ததென்றும் கூறிக்கொண்டார்.

இதைக்கேட்டுக் கிரகஸ்தர் யாரும் ஏமாந்து விடக் கூடாது. அந்த ஒரே ஒரு விவாதம் கல்யாணத்தன்று தொடங்கி நாளதுவரை நிகழ்ந்து வந்திருக்கலாமென நாம் ஐயுறுகிறோம். அப்போது வேறு புதிய விவாதம் தொடங்குவதற்கு நேரமிராதல்லவா?

(23–5–28)

***

"பாபுலர் சினிமாவுக்கு வந்து மகாத்மா காந்தியைத் தரிசியுங்கள்" என்று சென்னை

நவசக்தியில் "ஊர்வம்பு" பகுதி.

புகைப்படம்: இரா. முத்துக்குமாரசாமி



எங்கும் கவர் விளம்பரங்கள் காணப்படு கின்றன.

''சினிமாவுக்குப் போக வேண்டாம்'' என்று இவ்வாரம் ''யங் இந்தியா''வில் மகாத்மா காந்தி எழுதியிருப்பதற்கு இது விடை போதும்! (30—3—27)

***

சென்னை கவர்னர் கோஷன் பிரபுவின் குமாரி ஸ்ரீமதி கோஷனுக்கும் காப்டன் போர்டல் என்பாருக்கும் சென்ற சனிக்கிழமை திருமணம் நடைபெற்றது.

மேற்படி வைபவத்தை முன்னிட்டு அன்று நகர் ஜனங்களுக்கெல்லாம் அவரவர் வீட்டில் சாப்பாடு நடந்தது. ஹோட்டல்களிலும் அன்று பணம் கொடுத்தவர்களுக்கு இல்லையென்னாமல் விருந்தளித்தார்கள். மற்றும், கோஷன் — போர்டல் கல்யாணத்தை முன்னிட்டு சினிமாக் கம்பெனிகள் அன்று விசேஷ ஆட்டங்கள் நடத்தின. ஆனால் டிக்கெட் விகிதம் வழக்கம் போல்தான்! அதிகம் செய்யப்படவில்லை. எல்லாம் கவர்னர் பிரபுவின் தயவுஎன்றுஜனங்கள் பேசிக்கொண்டார்கள்.

அன்று மாலை சுமார் மூன்று மணி நேரம் மலைச் சாலையில் இருபுறமும் நின்று காத்துக் கொண்டிருக்கும் பெருமை நகரவாசிகளுக்கு அளிக்கப்பட்டது. ஜனங்கள் இது குறித்து அடைந்த மகிழ்ச்சிப் பெருக்கை வருணிக்க ஆயிரம் நாப்படைத்த ஆதிசேஷனாலும் முடியாதென்றால் — எக்ஸெட்ரா, எக்ஸெட்ரா.

எல்லாவற்றுக்கும் மேலாகக் கல்யாணப் பட்சணத்தைச் சில தினசரிப் பத்திரிகைகளின் மூலம் கண்டானந்திக்கும் பாக்கியத்தையும் பொதுஜனங்கள் பெற்றார்கள். ஆகா, எவ்வளவு நேர்த்தியாக, அழகாக, அப்பட்சணம் செய்யப்பட்டிருந்தது! பத்திரிகையில், படத்தில் அந்தப் பட்சணத்தைப் பார்க்கும்போதே நாவில் ஜலம் ஊறிற்றென்றால் அதிகம் கூற வேண்டுமா? அதைப் பார்த்தபோது, இந் நாட்டுக்கு வரும் கவர்னர்கள் எல்லோரும் தங்கள் புதல்விகளுக்கு இங்கேயே கல்யாணம் செய்யக் கூடாதா என்று எண்ணாதவர்கள் கிடையாது.

தம்பதிகளுக்குப் பரிசில்கள் அளிப்பதில் ஆங்கிலேயருக்கு இந்தியர் பின்வாங்கவில்லை என்பதைக் கண்டு எல்லாரும் இறும்பூதெய்தினர். ஸர்கள், திவான் பகதூர்கள், ராவ் பகதூர்கள் , ராவ் சாகிப்கள், இனி வரப் போகும் ஸர்கள், திவான்பகதூர்கள் முதலியோர், மந்திரிகள், மாஜி மந்திரிகள், இனி வரப்போகும் மந்திரிகள் (டாக்டர் சுப்பராயன் உட்பட) அப்படியே முன்னால் சென்ற பின்னால் வரப்போகிற அட்வகேட் ஜெனரல்கள், நிர்வாக சபை அங்கத்தினர்கள், ஜாதி, மத பேதமின்றி ஐயர், பிள்ளை, முதலியார், செட்டியார், நாயுடு, சாகிபு முதலிய எல்லோரும் புதுத் தம்பதிகளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு பரிசில்கள் அளித்தார்கள் என்றால், வெள்ளி, தங்க, வைர வியாபாரிகள் ஏன் மகிழ்ச்சி யடைய மாட்டார்கள்?

இவ்வளவு மகிழ்ச்சிக்கும் உவகைக்கும், இறும்பூதுக்கும், ஆனந்தத்துக்கும் காரணர்களான மணமகனும், மணமகளும் நீடூழி காலம் இன்ப வாழ்க்கை நடத்துவார்களாக. வருங்காலத்தில் தங்கள் சொந்த நாட்டிலோ பிற நாட்டிலோ அவர்கள் மேலும் மேலும் உயர்ந்த நிலை யெய்தி இன்புற்றிருக்கும்போது, இத் திருமணத்தில் அவர்கள் பெற்ற பரிசில்கள், ஏழை இந்தியாவை அவ்வப்போது அவர்களுக்கு நினைவூட்டுவனவாக. சுபம்! சுபம்! சுபம்! (3—9—26)

***

உபாத்தியாயர்: தன் கருத்தைப் பிறருக்கு விளங்கச் சொல்ல முடியாதவன் மடையன்; விளங்குகிறதா?



மாணாக்கன்: விளங்கவில்லை ஐயா! (30—5—28)

***

பொட்டுக் கட்டும் பழக்கத்தை ஒழிக்கக் கூடாதென்று சென்னையில் தேவதாசிகள் சிலர், சுயநலத்தையோ பரநலத்தையோ முன்னிட்டுக் கிளர்ச்சி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். டாக்டர் முத்துலக்ஷ்மி அம்மாள் மசோதா கொண்டுவந்து அநியாயமாய்த் தங்கள் குலதர்மத்தைக் கெடுத்துவிடக்கூடாதென்று அவர்கள் முறையிடுகிறார்கள். ஸ்ரீமான்.... வீட்டில் நடந்த தேவதாசிகள் கூட்டத்தில் ஒரு தேவதாசி, ''எங்கள் தொழிலை ஒழித்துவிட்டால் வயிற்றுப் பிழைப்புக்கு வழி என்ன?'' என்று கேட்டாராம்.

இந்தச் சகோதரிக்கு நாம் ஒரு எச்சரிக்கை கூற விரும்புகிறோம். அதாவது: ''வயிற்றுப் பிழைப்புக்கு உங்களுக்கு வழி தேடிக் கொடுக்கத் தேச மக்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால், உங்கள் கையில் ஏதேனும் கொஞ்சம் பணம் இருந்தால் அதைச் சட்டசபை அங்கத்தினருக்குக் கொடுத்துக் கரைத்து விட



சேமிக்கும் பழக்கம் மகிழ்வூட்டும்
வழக்கம் ஆகட்டுமே!

நீங்கள் கொஞ்சம் கொஞ்சமாக சேமிக்கும் பணம் நாளடைவில் ஒரு பெருந்தொகையாக வளர எளிதான வழி ஸ்டேட் பாங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டம். உதாரணமாக, நீங்கள் மாதம் ரூ.15 வீதம் 60 மாதங்கள் சேமித்தால், ரூ. 900 மட்டுமே சேர்க்க முடியும். ஆனால் ஸ்டேட் பாங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தில் இந்தத் தொகை ரூ. 1100க்கும் அதிகமாக வளர்ந்திருக்குமே.

ங்கள் ஒழுங்காகச் சேமிக்க உதவுகிறது இத்திட்டம். அத்துடன் இது உங்கள் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்ற ஒரு சேமிப்பு கணக்கைத் தொடங்க வாய்ப்பளிக்கிறது.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் சிறிய அளவேனும் சேமிப்பதே. அதாவது மாதம் ரூ. 5, ரூ. 10, ரூ. 20 இவ்விதமாக ரூ. 1000 வரை 12, 24, 36, 48-அல்லது 60 மாதங்களுக்கான திட்டத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி பணம் சேர்க்கலாம். இந்தச் சேமிப்பு படிப்படியாகப் பெருகி ஒரு கணிசமான தொகையாக வளர்ந்து நிற்கிறது.

இன்றே சேமிக்கத் தொடங்குங்கள். நாடெங்குமுள்ள 3000க்கும் மேற்பட்ட எங்கள் அலுவலகம் ஒன்றில் ஒரு ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தில் சேருங்கள். வருவாய் பெருகிட, சேமியுங்கள் ஸ்டேட் பாங்கிலே!

ஸ்டேட் பாங்க் ரெக்கரிங் டெபாசிட் திட்டத்தின் மூலம் உங்கள் சேமிப்பு வளர்வதை நீங்களே பார்க்கலாம்.





ஸ்டேட் பாங்க்

AIYARS.S.526 TM

வேண்டாம்! அதைப் பத்திரப்படுத்தி வையுங்கள்...''!

பொட்டுக் கட்டுதல் மத சம்பந்தமானது என்று மேற்படி கூட்டத்தில் சொல்லப்பட்டதாம். ''இன்றைய தினம் பொட்டுக் கட்டு



தல் கூடாதென்கிறார்கள். நாளைக்குக் குருக்கள்மாரை நீக்கிவிட வேண்டுமென்று சொல்லலாம்'' என்று ஸ்ரீமான்.... பேசினாராம்.

தீண்டாமையும் பால்ய வைதவ்யமுமே, ஹிந்து மதம் என்று கும்பகோணம் வைதிகர்கள் சொன்னார்கள். இப்போது பொட்டுக் கட்டுதல்தான் ஹிந்து மதம் என்று சென்னையில் சிலர் சொல்கிறார்கள்.

மதுபானம் மத சம்பந்தமானதென்றும், அதில் யாரும் தலையிடக் கூடாதென்றும் குடிகாரர்கள் கிளர்ச்சி செய்யக் காலம் வந்து விட்டதென்று கருதுகிறோம். சென்னையிலுள்ள ஐரோப்பிய மது வியாபாரிகள் கூடிய விரைவில் குடிகாரர்கள் கூட்டமொன்றைக் கூட்டுவிப்பார்கள் என்று நம்புகிறோம். அவர்களுக்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. வேதங்களில் சொல்லப்படும் சோம பானத்தை அவர்கள் எடுத்துக் காட்டலாம். அத்துடன் தற்காலத்தில் காளியம்மன், காட்டேரி தெய்வங்களுக்குக் கள் நைவேதனம் செய்யப்படுவதால், மதுவிலக்குச் செய்தல், மதத்தில் தலையிடுவதாகும் என்று வற்புறுத்திச் சொல்லலாம்.

அந்தோ! மதமே! உன் பெயரால் எத்தனை எத்தனை பாதகங்கள் செய்யப்படுகின்றன!

(2–11–27)

***

''நீ நேற்றுப் போய் வந்த நாடகம் சந்தோஷமான முடிவு பெறுகிறதா?''

''ஆம், ஆம். நாடகம் முடிந்ததும் சந்தோஷப்படாதவர் இல்லை.'' (8-2-1928)

***

இங்கிலாந்தில் எஃகுத் தொழிற்சாலை அமைப்பைப் பற்றிச் சமீபத்தில் நடந்த விவாதத்தின் போது, மிஸ்டர் நெவில்லி சேம்பர்லேன் பின்வருமாறு கூறினார்:

''எஃகு உற்பத்தி விஷயத்தில் இந்நாட்டுக்குள்ள சக்தி தற்போதையத் தேவைகளுக்கு மிகவும் அதிகமாகவே இருக்கிறது.

எஃகு உற்பத்தி செய்யும் சக்தி மட்டுமன்று 'எஃகுச் சட்ட வர்க்கத்தினரை (ஐ. ஸி. எஸ். அதிகாரிகளை) உற்பத்தி செய்யும் சக்தியும் இங்கிலாந்தில் தேவைக்கு அதிகமாகவே இருக்கிறது. ஆனால் எஃகுச் சட்டச் சரக்கு விஷயத்தில் ஒரு விசேஷமுண்டு. மற்றச் சரக்குகளுக்குத் தேவை குறைந்தால் அவைகளின் விலையும் குறையும். 'எஃகுச் சட்ட' வர்க்கத்தினர் விஷயத்தில் மட்டும் இந்தப் பொருளாதார சாஸ்திர விதி பொய்ப்படுகிறது. இச் சரக்கு தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்படுகிறதாயினும் அதன் விலை மட்டும் ஏறிக் கொண்டே போகிறது! (9-12-24)

***

தாயார் தன் குழந்தையின் சமர்த்தைப் பற்றிப் புகழ்ந்து கொண்டிருந்தாள். ''கூட்டல் கணக்கு என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்; மணியன் உடனே சொல்லுவான்'' என்றாள்.

தோழிகளில் ஒருத்தி, ''எட்டும் ஏழும் என்ன குழந்தாய்?'' என்று கேட்டாள்.



''பதினாறு'' என்று சட்டென்று பதில் சொன்னான் பையன்.

''என் கண்ணே, போ! இரண்டுதான் குறைவாகச் சொன்னான் பார்த்தீர்களா?'' என்று தாயார் கூறிக் குழந்தைக்குத் திருஷ்டி கழித்தாள். (14-12-27)

பிற்காலத்தில் கல்கி, தேவீ என்ற பெயரைப் புறக்கணித்த போதிலும், தேவீயின் ரீங்காரத்தைப் புறக்கணிக்கவில்லை. அவருடைய எழுத்திலும், பேச்சிலும் விதம் விதமாய் அது கேட்டுக் கொண்டே இருந்தது.

உதாரணமாய், தமது தாலுகாவின் தலைநகரைப் பற்றி அவர் சொன்ன இரண்டு நகைத் துளிகள்:

''ஆயிரம் ஆனாலும் மாயவரம் ஆகாது'' என்பது மாயவரத்தில் வழங்கும் பழமொழி. இதன் உண்மையை உணர்ந்து மாயவரவாசிகள் பலர், ''நமக்கு இந்த ஊர் ஆகாது'' என்று புறப்பட்டுவிடுவது உண்டு.

மாயவரம் வீதிகளில் சற்று நடந்தால் யாரும் துறவியாகிவிடலாம். துணிகளுக்குக் காவி போட வேண்டிய அவசியமே இல்லை. இதனாலேதான், சுவாமிகள், சந்நியாசிகள், சந்நிதானங்கள் முதலியோர் மாயவரத்தைத் தேடிப் போவது வழக்கம். (தொடரும்)



வாலிப - வயோதிக அன்பர்களே,

வாலிப வயதில் செய்கிற தவறுதல்களே இப்போது உடல் கெட்டு பலவீனமடைந்து ரத்தக் குறைவு, சோர்வு, தலைவலி, உஷ்ணம், சோம்பல், கைகால் அசதி, பலவீனம், உடல்வலி, தூக்கக் குறைவு, ஆயாசம், களைப்பு, பீதி, வெட்கம், பயம், வெறுப்பு உண்டாகி மன வேதனையும் கஷ்டமும் அடைந்து வாழ்கிறார்கள். 77 வருட அனுபவம் பெற்ற நமது மருந்துகள் சாப்பிட்டுவர புத்துணர்ச்சி பெற்று நிம்மதியான வாழ்க்கை வாழலாம். வி. பி. பி.யில் பெற உடன் எழுதுக.

ஒரு மாத மருந்துகள்

மிக உயர்தரம் செட் ரூ. 90. தங்க பஸ்பம், சிட்டுக்குருவி லேகியம் 60 வேளை – ரூ. 120
30 வேளை ரூ. 60. போஸ்டேஜ் இலவசம். நேரில் ஆலோசனை பெற.

1ந் தேதி நெல்லை : ரெல்லே வாட்ஜ், காலை 8 மணி முதல் 12 வரை
1ந் தேதி நாகர்கோவில் : ஸ்ரீ உடுப்பி கிருஷ்ணா பவன், பிற்பகல் 2 மணி முதல் 4 மணி வரை
2ந் தேதி மதுரை : மணீஸ் கபே, காலை 8 மணி முதல் 2 மணி வரை
2ந் தேதி புதுக்கோட்டை : வசந்தா லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
3ந் தேதி காரைக்குடி : A. V. M. P. L. ரெஸ்ட் ஹவுஸ், காலை 9 மணி முதல் 11 மணி வரை
3ந் தேதி அறந்தாங்கி : பத்மா லாட்ஜ், பகல் 12முதல் 1 மணி வரை
3ந் தேதி பட்டுக்கோட்டை : அசோகா லாட்ஜ், பிற்பகல் 2 மணி முதல் 3-30 மணி வரை
3ந் தேதி மன்னார்குடி : மன்னை லாட்ஜ், மாலை 4-30முதல் 6மணி வரை
4ந் தேதி திருச்சி : ஹோட்டல் அஜந்தா, காலை 8 முதல் 2 மணி வரை
4ந் தேதி கரூர் : பெரியார் லாட்ஜ், மாலை 4 மணி முதல் 5-30 வரை
5ந் தேதி தஞ்சாவூர் : ராஜா ரெஸ்ட் ஹவுஸ், காலை 10 மணி முதல் 12 மணி வரை
5ந் தேதி திருவாரூர் : அபூபக்கர் பில்டிங், மாலை 2 முதல் 4 மணி வரை
5ந் தேதி நாகப்பட்டினம் : தினகர் விலாஸ், மாலை 5முதல் 6மணிவரை
6ந் தேதி காரைக்கால் : அசோக் லாட்ஜ், காலை 8முதல் 10மணி வரை
6ந் தேதி கும்பகோணம் : தாஜ்மஹால் லாட்ஜ், பகல் 12 மணி முதல் 2 மணி வரை
6ந் தேதி மாயவரம் : காளியாகுடி லாட்ஜ், மாலை 3 மணி முதல் 4-30 மணி வரை
6ந் தேதி சிதம்பரம் : ஜெயராம் லாட்ஜ், மாலை 5-30 மணி முதல் 7 மணி வரை
7ந் தேதி பாண்டிச்சேரி : அருணா லாட்ஜ், காலை 8 மணி முதல் 9-30 மணி வரை
7ந் தேதி கடலூர் N. T. : ஹோட்டல் பிருந்தாவனம், காலை 10-30 மணி முதல் 12 மணி வரை
7ந் தேதி விருத்தாசலம் : ஸ்ரீ கிருஷ்ணா விலாஸ் போர்டிங் லாட்ஜ், பிற்பகல் 1 மணி முதல் 3 மணி வரை
7ந் தேதி உளுந்தூர்ப்பேட்டை : சேலம் கிருஷ்ணா விலாஸ், மாலை 4 மணி முதல் 5-30 மணி வரை
8ந் தேதி கள்ளக்குறிச்சி : A. K. T. லாட்ஜ், காலை 8 முதல் 9-30 வரை

கிளை : **41, நைனியப்பன், தெரு, மண்ணடி, சென்னை-1** போன் : **21448**

வைத்திய திலகம், வைத்தியராஜ் : **டாக்டர் எஸ். காளிமுத்து** R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி-624601

போன் : 316, 316A, வீடு : 420. தியேட்டர் ஸ்ரீரங்கராஜா சமீபம் தந்தி : "சித்தர்"

திருடர்கள்

ர.சு.நல்லபெருமாள்



26. ஏமாற்றம்

பெட்டியில் துணிமணிகளை அவசரமாக அடுக்கிக் கொண்டிருந்தான் சம்பத். அளவு மீறிய பீதியினால் அவனுடைய முகம் வெளுத்திருந்தது. இனி அவனால் அந்த ஊரில் வாழ முடியாது. ஆவுடையப்பபிள்ளையின் முகத்தில் இனி விழிக்க முடியுமா? அவனைப் பற்றி அவர் எவ்வளவு உயர்வாக எண்ணியிருந்தார்! எவ்வளவோ அன்பும் ஆதரவும் காட்டினாரே. சேச்சே, எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டான். அவனுடைய திட்டமே மிக்க கேவலமானதுதான். ஆனால் அது நிறைவேறியிருந்திருக்குமானால், அவனுடைய நிலைமை வேறுவிதமாக இருந்திருக்கும். தன்னுடைய திட்டம் தோல்வியுற்றபோதுதான் அதனுடைய பயங்கரமும், ஆபத்தும் அவனுக்குப் புரியத் தொடங்கின.

அப்படி ஒரு திட்டம் தீட்டுவதற்குக் காரணம், அவனால் நளினியைப் புரிந்து கொள்ள முடியாமல் போனதுதான். அவனை அவள் விரும்புகிறாள் என்று தெரிந்திருந்தால், அந்தத் திட்டத்தைப் பற்றி அவன் சிந்திக்கக்கூட வேண்டியிருந்திருக்காது. ஆனால் அவள் அவனோடு மிக நெருங்கிப் பழகியும் அவனைக் காதலனாக ஏற்றதற்கான அறிகுறி எதையும் அவள் காட்டாததுதான் அவனை அந்தத் திட்டத்துக்குத் துணிய வைத்தது. எவ்விதத்திலாவது நளினியை அடைந்தே தீர வேண்டும் என்ற ஆசை வெறித்தனமாக அவனுள்ளே மாறியது.

எவ்விதம் அவளுக்குக் கணவனாவது ?— ஒன்று, அவளாக விரும்பி அவனைக் கணவனாக ஏற்க வேண்டும். அல்லது, அவள் அவனைக் கணவனாக ஏற்றுக் கொண்டு தீர வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையை உண்டாக்க வேண்டும்.

அவனை அவள் வலிய ஏற்பதற்கான அறிகுறியை அவன் காணவில்லை. அதனால்தான் சம்பத் திட்டமிட்டான். பலவந்தமாகவாவது கணவன் — மனைவி என்னும் உறவை ஏற்படுத்திவிட்டால், பிறகு அவனை வேறுவழியின்றி ஏற்றுத்தானே ஆகவேண்டும்?

தன்னுடைய திட்டம் நிறைவேறியபிறகு ஒரு சிறு நாடகமே நடித்துவிடவும் அவன் முடிவு செய்திருந்தான்.

அவள் காலைப் பிடித்துக் கொண்டு கெஞ்சுவான். அவள் கண்ணீர் சிந்தியபடி இருப்பாள். அல்லது கோபத்தால் அவனைச் சபித்துக் கொண்டிருப்பாள். ''நளினி, ஏதோ உணர்ச்சிவசப்பட்டுத் தவறு நடந்துவிட்டது. சந்தர்ப்பம் சதி செய்து நம் இருவரையுமே ஏய்த்து விட்டது. இருவருமே உணர்ச்சிவசப்பட்டுவிட்டோம். உன் மீது கொண்டுள்ள தீராத காதலை நெஞ்சில் சுமந்து கொண்டு இத்தனை நாட்கள் தவித்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு நளினி. இதற்காக நீ என்ன தண்டனை அளித்தாலும் நான் ஏற்கிறேன், நளினி'' என்பான். தேவையானால், இரண்டு சொட்டுக் கண்ணீரையும் வரவழைத்துக் கொள்ளலாம். அவளும் வேறு வழியில்லாமல் மன்னிக்கத்தான் வேண்டும். அதற்குப் பிறகு, அவனைத் தவிர வேறு எவனையும் கணவனாக ஏற்றுக் கொள்ள அவளால் முடியாது... ஆகவே, அவளே தன் பெற்றோரிடம் அவனைத் தான் மணக்க விரும்புவதாகக் கூறுவாள்....

இப்படித்தான் நடைபெறும் என்று நினைத்த சம்பத், திட்டம் படுதோல்வி அடைந்ததைக்கண்டதும் அதிர்ந்துவிட்டான். எவ்வளவு பெரிய ஏமாற்றம்......

மெயின் சுவிட்சை அணைத்துவிட்டு அறைக்குள் வந்ததும் இருட்டில் நளினியின் உருவம் தெரியவில்லை. வெளியே நிலவு காய்ந்து கொண்டிருந்தது என்றாலும், வராந்தா சன்னல் கதவுகளையும் வாசல் கதவுகளையும் சாத்தியிருந்ததால் வெளிச்சம் அறைக்குள் வர இல்லை. மேல்பக்கத்துச் சன்னல் திரையை ஊடுருவியபடி வந்த வெளிச்சம் மிகவும் கொஞ்சம்தான். ஆனால் அந்த வெளிச்சமே அவனுக்குப் போதுமானதாயிருந்தது. மெழுகுவத்தியை எடுக்கும் சாக்கில் அவளை நெருங்கி நின்றான்.

''இருட்டில் இவ்வளவு மங்கிய வெளிச்சத்தில் இருந்து பேசுவது ரசனையாகத்தான் இருக்கிறது இல்லையா?'' என்று கேட்டான் சம்பத்.

''மெழுகுவத்தி இல்லையா?'' என்று நளினி கேட்டாள்.

''மேஜையைத் திறந்து தேடுவதாகப் பாவனை செய்தான் சம்பத். பிறகு, ''வாயேன், வராந்தாவில் போய்ப் பேசிக்கொண்டிருக்கலாம். நிலவு இருக்கிறது'' என்று கூறியபடி மெல்ல அவளுடைய கரத்தைப் பற்றினான். நளினி திடுக்கிட்டுக் கையை உதறியதை உணர்ந்தான். மறுகணம் அவளுடைய தோளைப் பற்றினான். அவள் திகைப்புடன் ஏதோ சொன்னாள். அவளுக்கு ஏற்பட்டிருந்த திகைப்பு நீங்குவதற்குள் அவளை இறுக அணைத்தான். அதற்குப் பிறகுதான் அவன் எதிர்பாராத எதிர்ப்பு அவளிடமிருந்து வந்தது. அவள் திமிறினாள். ஆனால் சம்பத் விடவில்லை.

திட்டத்தின் கடைசிக் கட்டத்தை நெருங்கியாகி விட்டது. இனி பின்வாங்கினாலும் ஆபத்து. அவளைத் தப்ப விட்டு விட்டால் இனி அவனால் அந்த ஊரிலேயே வாழ முடியாது. துணிந்தாகி விட்டது. வெற்றி பெற்றே தீரவேண்டும் என்னும் வெறி அவனை ஆட்கொண்டது.

''என்ன இப்படி....சீ...'' என்று நளினி மறுத்தாள்.

''நளினி... ப்ளீஸ்... யாரும் வரமாட்டார்கள்.''

''விடுங்கள் என்னை.''

''உன்மீது எவ்வளவு காதலாயிருக்கிறேன் தெரியுமா?...''

''காதலாவது, மண்ணாவது...'' நளினி எதிர்த்தாள். ''விலகிப் போங்கள். இல்லையென்றால் கூச்சல் போடுவேன்'' என்றாள். சம்பத் இலட்சியம் செய்யவில்லை.

''என்ன கூச்சல் போட்டாலும் இந்தக் காலனியில் யாரும் வரமாட்டார்கள்'' என்றான். தப்ப வழியில்லாமல் அகப்பட்டுக் கொண்ட மிருகம், தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நடத்தும் கடைசி எதிர்ப்பைப் போல் எதிர்த்தாள்; சீறினாள்; திமிறினாள். எதுவும் பயன்படவில்லை. அவனுடைய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டிருந்தது அவளுடைய தலை ஒன்றுதான். தலையைச் சட்டென்று தூக்கி நெற்றியினால் தன்னுடைய முகத்தை நெருங்கி வந்த அவனுடைய முகத்தில் வேகமாக மோதினாள். அவனுடைய மூக்கின் மீது பலமாய் அவள் தாக்கவே மிகுந்த வலியினால் அவனுடைய கண்கள் கலங்கின. தலைக்குள் விண்ணென்று இரைவது போல் இருந்தது. ஒரு கணம் அவனுடைய பலம் குறைந்து பிடி தளர்ந்தது. ஒரே உதறலில் அவனை உதறிவிட்டு விடுபட்டாள் நளினி. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து படிக்கட்டில் இறங்கத் தொடங்கி விட்டாள். அந்த இருட்டில் தட்டுத்தடுமாறியபடி இறங்கினாள். சம்பத் மூக்கிலிருந்து கொட்டிய ரத்தத்தைக் கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டு படிக்கட்டை நோக்கிப் பாய்ந்தபோது, அவள் படிக்கட்டின் கீழே இருந்த கதவைத் திறந்து கொண்டு காரை நோக்கி விரைந்ததைக் கண்டான். அவன் கீழே இறங்கி வருவதற்குள் நளினியின் கார் சீறிக்கொண்டு பாய்ந்து விட்டது. அப்போதுதான் சம்பத்துக்குத் தன்னுடைய நிலைமை புரியத் தொடங்கியது.



இன்னும் கொஞ்ச நேரத்தில் போலீஸ் வரும். அவனுடைய கையில் விலங்கை மாட்டுவார்கள். நாளைக் காலையில் எல்லாச் செய்தித் தாள்களிலும் அவனுடைய பெயர் அடிபடும். சே.... எவ்வளவு கேவலம். இனி இந்த ஊரில் அவன் தங்கினால் எந்த நிமிஷமும் ஆபத்துத்தான். என்ன செய்யலாம்...?

சம்பத் பரிதவித்தான். ஒன்றும் தோன்றாமல் வாசல் வராந்தாவிலேயே நின்றான். அங்கு தனியே நிற்கக்கூட அவனுக்குப் பயமாக இருந்தது. நேரே மொட்டை மாடிக்குப் போய் அங்கிருந்து தலைகீழாக விழுந்து செத்துப் போய்விட்டால் என்ன என்று நினைத்தான். போலீஸிடம் கைதாகி அவமானப்படுவதை விடச் செத்துப் போய்விடுவது நல்லது....

ஊரை விட்டே போய் விட்டால்...? கல்கத்தாவில் அவனுடைய மாமா ஒருவர் இருந்தார். கொஞ்ச காலம் அங்கு தலைமறைவாயிருந்து பிறகு பார்க்கலாமே. அப்படியே ஆபத்து நெருங்கினால், நக்ஸல்பாரி கம்யூனிஸ்டாக மாறிவிட்டால் போகிறது...

கைக்கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டரையாகிக் கொண்டிருந்தது. அது நளினி கொடுத்த கடிகாரம். அதன் அழகை ரசிக்கும் நிலையில் அப்போது அவன் இல்லை. பத்து மணிக்கு ஒரு ரயில் வண்டி புறப்படுகிறது. அதில் போய்ப் பிறகு, கல்கத்தாவுக்குச் சென்றுவிடலாம் என்று முடிவு செய்தான். பரபரப்புடன் மாடிப் படிக் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு மாடிக்குப் போய் மெயின் சுவிட்சைப் போட்டான். துணிமணிகளைப் பெட்டிக்குள் திணித்தான். நெஞ்சு படபடத்துக் கொண்டிருந்தது. எண்ணங்கள் சுழன்று கொண்டிருந்தன.

இதற்குள் வீட்டுக்குப் போயிருப்பாள். அப்பாவிடம் சொல்வாள். அவர் போலீஸுக்குப் போன் செய்வார். போலீஸ் இங்கு வந்து சேர எப்படியும் அரை மணி நேரமாவது ஆகும்....

கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டேமுக்கால். அந்தக்கடிகாரத்தை மேஜையின் மீது ஓங்கி அடித்து நொறுக்க வேண்டும் என்ற ஆத்திரம் வந்தது. எதிரே இருந்த கண்ணாடியைப் பார்த்தான். திடுக்கிட்டான். கிழிந்த சட்டை, அதில் மூக்கிலிருந்து கொட்டிய ரத்தக் கறை. தலை கலைந்து பைத்தியக்

காரனைப் போல் தோற்றமளித்த தன்னுடைய உருவத்தைப் பார்த்தே பயந்து போனான். அவசரமாகச் சட்டையைக் கழற்றிவிட்டு வேறு உடை மாற்றிக் கொண்டான். மேஜை மீது நளினி விட்டுச் சென்ற அவளுடைய கைப் பை இருந்தது. அதை எடுத்துத் தன்னுடைய பெட்டிக்குள் போட்டான்.

மணியைப் பார்த்தான். எட்டு ஐம்பது. மாடிப் படிக் கதவை யாரோ படபடவென்று தட்டுவது கேட்டுத் திடுக்கிட்டான்.

ஐயோ, அதற்குள் போலீஸ் வந்துவிட்டதே என்று பதறினான். உடல் வியர்த்தது. தட்டும் ஓசை தொடர்ந்து கேட்டது. பயத்தினால் இருதயம் மேலே கிளம்பித் தொண்டையில் அடைத்துக் கொள்வது போலிருந்தது. ஒருவாறு சமாளித்துக் கொண்டு படி இறங்கினான். கால்கள் தள்ளாடின. சுவரைப் பிடித்தவாறு இறங்கினான். கண்கள் இருளுவது போலிருந்தது.

''யாரது....?'' பயத்தினால் சத்தம் வாயிலிருந்து வெளிவரவில்லை. உதட்டோடு நின்று விட்டது. மீண்டும் முயற்சி செய்து இரைந்து கேட்டான். ''யாரது?''

''ஐயா.... சம்பத் ஐயா....'' — ஆவுடையப்ப பிள்ளையின் குமாஸ்தாவின் குரல் அது. சம்பத்தின் பயம் கொஞ்சம் குறைந்தது. ஆனால் அதற்குள் ஆவுடையப்ப பிள்ளைக்கு விஷயம் எப்படித் தெரிந்தது? நளினியின் அப்பா போன் செய்திருப்பார். எப்படியோ போலீஸ் வரவில்லை....

மாடிப் படிக் கதவைத் திறந்தான். வெளியே வக்கீல் குமாஸ்தா நின்று கொண்டிருந்தார்.

''என்ன குமாஸ்தா பிள்ளை?'' — சம்பத் கேட்டான். குரலில் நடுக்கம் இருந்தது.

''நம்ம ஐயா கீழே விழுந்து எலும்பு முறிந்து விட்டது. உங்களை உடனே வரச் சொன்னார்கள்'' என்றார் குமாஸ்தா.

சம்பத் நிம்மதியாக ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். வேட்டியின் நுனியால் முகத்து வியர்வையைத் துடைத்தான்.

''எங்கே விழுந்தார்?''

''குளியலறையில். கட்டுப் போட்டாயிற்று. வீட்டில்தான் படுத்திருக்கிறார். உங்களை உடனே வரச் சொன்னார்கள்'' என்றார் குமாஸ்தா.

சம்பத் சற்று யோசித்தான். ரயில் வண்டி பத்து மணிக்குத்தானே? ஆவுடையப்ப பிள்ளையைப் பார்த்துவிட்டு அங்கிருந்தே அவரிடம் சொல்லிக் கொள்ளாமல் ரயிலடிக்குப் போய்விடலாம்.

''நீங்கள் எப்படி வந்தீர்கள்?''

''சைக்கிளில்'' என்றார் குமாஸ்தா.

''சரி, நீங்கள் போங்கள். நான் வருகிறேன். போகும்போது இந்தத் தெருக் திருப்பத்திலிருந்து ஒரு டாக்ஸியை இங்கே அனுப்பி விட்டுப் போங்கள்'' என்றான்.

சற்று நேரத்தில் வாசலில் டாக்ஸியின் ஓசை கேட்டது. சம்பத் பெட்டியுடன் கீழே இறங்கினான். மாடிக் கதவைப் பூட்டிவிட்டு டாக்ஸியில் ஏறினான். ஆவுடையப்ப பிள்ளையின் வீடு வந்ததும், ''கொஞ்சம் காத்திரு. ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும்'' என்று டிரைவரிடம் கூறிவிட்டு ஆவுடையப்ப பிள்ளையின் வீட்டுக்குள் சென்றான்.

வீட்டுக்குள் ஒரு கட்டிலில் பிள்ளை படுத்திருந்தார். இடுப்பிலிருந்து கால் முழுதும் ஒரு பெரிய கட்டு போட்டிருந்தது. சம்பத் அவர் பக்கத்தில் அமர்ந்தான்.

''குளியலறையில் வழுக்கி விழுந்து விட்டேன். தொடை எலும்பு முறிந்து விட்டது'' என்றார்.

சம்பத், அப்போதிருந்த நிலையில் அவருக்காக வருத்தப்படக்கூட முடியவில்லை. ஆனால் வலிய முகத்தில் சோகத்தை வரவழைக்க வேண்டிய சங்கடமும் இல்லை. ஏற்கனவே பீதியினாலும், பதற்றத்தினாலும் அவன் முகம் வெளிறியிருந்தது.

''நாளை அந்தக் கேஸை நீதான் நடத்த வேண்டும்'' என்றார் ஆவுடையப்ப பிள்ளை.

''ஐயோ நானா...!''

''வேறு வழியில்லை. நான் கோர்ட்டுக்குப் போக முடியாது. நீதான் நடத்த வேண்டும்.''



இந்தச் சமயத்தில் போன் மணி அடித்தது. அருகில் இருந்த குமாஸ்தா போனை எடுத்துக் கேட்டார். பிறகு போனைப் பிள்ளையிடம் நீட்டியபடி, ''நளினி!'' என்றார்.

அந்தப் பெயரைக் கேட்டதும் சம்பத் திடுக்கிட்டான். அந்த இடத்தை விட்டு ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடிவிட வேண்டும் என்னும் உணர்வு தோன்றியது. ஆனால் செயலிழந்து வெளிறிய முகத்துடன் ஆவுடையப்ப பிள்ளையை வெறிக்கப் பார்த்தான். கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. பிள்ளை போனில் பேசினார்.

''யார் நளினியா? குளியலறையில் விழுந்து விட்டேன். போன் செய்யும்போது நீ வீட்டில் இல்லை.... எங்கே? டின்னருக்கா? சம்பத்தின் பிறந்த நாள் டின்னரா?'' என்று வியப்புடன் கேட்டவர், போனின் வாயைப் பொத்திக் கொண்டு சம்பத்தைப் பார்த்தார். ''என்னிடம் நீ சொல்லவில்லையே? நீ டின்னருக்குக் கூப்பிட்டிருந்தால் நான் விழுந்திருக்கக் கூட மாட்டேன்'' என்று கூறிச் சிரித்தார். பிறகு, போனில் மீண்டும் பேசினார்.

''ஓஹோ... இப்போதுதான் வந்தாயா? டின்னரில் கூட்டம் அதிகமோ?... மொத்தமே நான்கு பேர்தானா?... சம்பத் சிக்கனக்காரன்தான்....''

சம்பத்தைப் பார்த்துச் சிரித்தார். சம்பத், வியப்புடன் அவர் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்தான். நளினி, நடந்ததை மறைத்து விட்டாள்; அவனைக் காட்டிக் கொடுக்கவில்லை என்று உணர்ந்ததும் அவன் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. பீதி மறைந்தது. நீண்ட பெருமூச்சு விட்டான்.

''நாளைக்கு அவன்தான் கேஸை நடத்த வேண்டும். நான் கோர்ட்டுக்குப் போக முடியாது. நீயும் அவனோடு சேர்ந்து உதவி செய்... சரிசரி... என்னைப் பார்க்க இப்போதே வர வேண்டுமென்பதில்லை. நான் நன்றாகத்தான் இருக்கிறேன். காலையில் வா போதும். என்ன தலை வலியா? ஜுரமும் இருக்கிறதா? ஏன்? சம்பத் டின்னர் கொடுத்த பலனா?... ஓ.... ஹோ...ஹோ... சரி, நன்றாக ஓய்வு எடுத்துக்கொள்'' என்று சிரித்தபடியே போனைக் குமாஸ்தாவிடம் கொடுத்தார் ஆவுடையப்ப பிள்ளை. சம்பத்தைப் பார்த்து, ''என்னப்பா, நீ கொடுத்த டின்னரில் அவளுக்குத் தலை வலியும் ஜுரமும் வந்து விட்டதா என்ன?'' என்று கேட்டார். சம்பத் அசட்டுச் சிரிப்பை உதிர்த்தான்.

''காலையில் சீக்கிரமாக வந்துவிடு. கேஸுக்கு வேண்டிய குறிப்புக்களைத் தருகிறேன். குறுக்கு விசாரணைக்கு வேண்டிய கேள்விகளையும் குறித்துத் தருகிறேன்.''

''சார்! இந்தக் கேஸில்...''

''ஒன்றும் பயப்படாதே. முடிகிற மட்டும் பார்ப்போம். வெற்றி தோல்வியைப் பற்றிக் கவலைப்படாதே. காலையில் வா'' என்றார், ஆவுடையப்ப பிள்ளை.

சம்பத், மன நிம்மதியோடு வாசலில் காத்திருந்த டாக்ஸியில் ஏறினான்.

''வந்த இடத்துக்கே விடப்பா'' என்றான்.

''சார்! ரயில்வே ஸ்டேஷனுக்குப் போக வேண்டும் என்றீர்களே?'' என்று கேட்டார் டாக்ஸி டிரைவர்.

''பயணம் ரத்தாகி விட்டது'' என்று கூறி விட்டு இருக்கையில் சாய்ந்து கொண்டான். அவனுள் ஏற்பட்டிருந்த தவிப்பு இன்னும் மாறவில்லை. அவனால் எதையும் நம்பக்கூட முடியவில்லை. நளினி அவனைக்காட்டிக்கொடுக்காமல் ஆவுடையப்ப பிள்ளையிடம் பேசியதை நினைத்துப் பார்த்தான்.

இதை வெளியில் சொன்னால் அவளுக்குத் தானே கேவலம்? அதனால்தான் ஒன்றும் நடவாதது போல் மறைத்து விட்டாள். நல்ல வேளை பிழைத்தேன். என் மானமும் கப்பலேறவில்லை.

சம்பத்தின் கவலையும் பயமும் ஒரு நீண்ட பெருமூச்சாக அவனை விட்டு வெளியேறின. மறு கணமே மற்றொரு கவலை அவனைச் சூழ்ந்து கொண்டது.

இனி நளினி அவனுக்குக் கிடைக்க மாட்டாள். அவனுடைய முகத்தில் கூட விழிக்க மாட்டாள். 'கெடிலாக்' காரையும், பங்களாவையும், சுக போக வாழ்வையும் கனவில் கண்டுகொள்ள வேண்டியதுதான். அவனுக்குக் கொடுத்து வைத்திருப்பதெல்லாம் நானூறு ரூபாய் வருமானம்தான்.... அது போதும். சிறைக்குப் போகாமல் தப்பித்தது போதாதா?

27. மயக்கம்

நவரசம் பத்திரிகைக் காரியாலயத்தில் ஆசிரியர் சந்தானம் உற்சாகத்தோடு தமது வேலையில் ஈடுபட்டிருந்தார். யாரோ ஒரு கதாசிரியனிடமிருந்து வந்திருந்த ஒரு நாவலைத் திருடுவது எப்படி என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். அதில் அவர் திறமைசாலி. புகழ் பெறாத கதாசிரியர்கள் அனுப்பும் கதைகளை ஆழ்ந்து படிப்பார். பிறகு, கதைகளின் கருத்துக்களைக் குறித்துக்கொண்டு கதைகளை அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பி விடுவார். கதாநாயக நாயகிகளின் பெயர்களையும் ஓரிரு சம்பவங்களையும் மட்டும் மாற்றியமைத்து அதே கதைகளைத் தம்முடைய பெயரில் நவரசம் பத்திரிகையில் பிரசுரித்து விடுவார். ஒருவேளை கதையின் மூலகர்த்தா அதைத் தெரிந்துகொண்டாலும் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. ஏமாற்றத்தில் பொருமிக் கொள்ளலாம். பாவம், அந்த அப்பாவி எழுத்தாளர்கள் தங்களுடைய கையெழுத்துப் பிரதிகளை உரிமைப் பதிவு செய்ய முடியும் என்பதையோ அதற்கென்று தில்லியில் ஓர் அலுவலகம் உண்டு என்பதையோ உரிமைப் பதிவுக்கான கட்டணம் இரண்டே இரண்டு ரூபாய்தான் என்பதையோ அப்படிப் பதிவு செய்துகொண்டால், யாரும் அதைத் திருடமுடியாது என்பதையோ அப்படியே திருடிவிட்டாலும்கூடப் பதிவைச் சாட்சியமாகக் கொண்டு திருடியவர் மீது நஷ்டஈடு வழக்குத் தொடரலாம் என்பதையோ அறிய மாட்டார்கள். அந்தத் தைரியத்தில்தான் நவரசம் ஆசிரியர் சந்தானம் பல தொடர்கதைகளையும் தம்முடைய பெயரில் நவரசம் பத்திரிகையில் பிரசுரித்துப் புகழ் அடைந்தார். இப்போதும் அந்தத் தொழிலில்தான் ஈடுபட்டிருந்தார். ஆனால் அன்றிருந்த உற்சாகத்தில் அவரால் அந்த நாவலைத் தொடர்ந்து படிக்க இயலவில்லை. கையெழுத்துப் பிரதியை எடுத்து மேஜைக்குள் போட்டார். மனம் பல சிந்தனைகளில் போதை யடைந்து கொண்டிருந்தது.

அன்று மத்தியானம் கனகாவின் வீட்டில் அவருக்கு விருந்து. அவள் வருந்தி அழைத்ததன் பேரில் விருந்துக்குப் போக ஒப்புக்கொண்டார். அப்படி அடிக்கடி அவருக்குப் பெரிய பணக்காரர்களின் வீடுகளில் விருந்து நடைபெறுவது உண்டு. அந்த வீட்டுப் பெண்களின் கதைகளை நவரசம் பத்திரிகையில் பிரசுரித்ததற்காக அவரைக் கௌரவப் படுத்த நடத்தப்படும் விருந்துகள் அவை. அந்த மாதிரி பெரிய தொழிலதிபர்கள், செல்வாக்கு மிகுந்த வியாபாரிகள் ஆகியோரின்



நெல்லை மாவட்ட சுதந்திரக் கட்சி செயலாளர் T. R. சங்கர நாராயணன் அவர்களுடைய குமாரன் சிரஞ்சீவி டி. எஸ். ராமசாமி B. Sc., (Ag.) (டிபுடி அக்ரிகல்சரல் ஆபீசரு)க்கும், செங்கோட்டை ஸ்ரீ V. ராமசாமி அவர்கள் குமாரி சௌ. கோமதி B. A.க்கும் 1-12-74 ஞாயிறு அன்று செங்கோட்டையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.
வாழ்க மணமக்கள்



ரா. பாலகிருஷ்ணன் (பாணன்) அவர்கள் புதல்வி சௌ. பானுமதி B.Sc., (இந்தியன் பாங்க்)க்கும் யுனைடெட் கமர்ஷியல் பாங்க் உதவி ஜெனரல் மானேஜர் எம். கிருஷ்ணன் அவர்களின் சகோதரர் புதல்வர் சி. ஆர். ராமநாதன் B. Com., C. A. I. I. B. (ஆபீசர், யுகோ பாங்க், தி. நகர்)க்கும் 4-12-74 அன்று சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TM

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வாறு மெருகேறும், மிருதுவாகவும் இருக்க கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனும் உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்சென்—ட்ரேட் ஷாம்பூ:
மாசற்ற நுரையாற்றின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு-இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

பழக்கமும் அவருக்குத் தேவைப்பட்டது. நவரசம் பத்திரிகையில் ஓரிரண்டு கதைகளைப் பிரசுரித்துவிட்டு அவருடைய தம்பிகளுக்கும், மைத்துனர்களுக்கும் பல பெரிய கம்பெனிகளிலும் தொழிற்சாலைகளிலும் உயர்ந்த பதவிகளை வாங்கிக் கொடுக்க முடிந்தது. அவர் ஒரு பெண்ணைக் கதாசிரியராக அறிமுகப்படுத்தினார் என்றால், ஏதாவது ஒரு விதத்தில் அவருக்கு லாபம் இருக்கிறது என்று தெரிந்து கொள்ளலாம்.

விருந்து முடிந்து அவர் திரும்பியபோது குதூகலத்தால் அவர் மனம் விம்மியது. அவர் எந்த எண்ணத்தோடு கனகாவை அணுகினாரோ, அந்த எண்ணம் கைகூடுவதில் சங்கடமேதும் இல்லை என்பதை அந்த விருந்தின்போது கனகாவின் பேச்சாலும் பார்வையாலும் புரிந்து கொண்டார். தம் தூண்டிலில் அவளை எப்போது வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் அவர் விடைபெற்றுக் கொண்டு வந்தார்.

நினைவுகளிலிருந்து விடுபட்டுக் கைக்கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரண்டரை. இன்னும் அரை மணி நேரத்தில் கோமளம் வந்துவிடுவாள் என்ற எண்ணம் அவருள் பரபரப்பை உண்டுபண்ணியது. காரியாலயத்தில் அப்போது யாரும் இல்லை. அன்று விடுமுறை நாள். காவலாளியான ஒரு கூர்க்காவைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை. சந்தானத்தில் பரபரப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது. அவருடைய நெடுநாளைய ஆசை அன்று எப்படியும் நிறைவேறிவிடும் என்று நம்பினார். எப்படியும் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்னும் வெறி இருந்தது. நிறைவேற்றுவதில் மிகுந்த கஷ்டம் இருக்காது என்றும் நம்பினார். வாசலில் கூர்க்காவின் செருப்பொலி கேட்டது. கூர்க்கா அறைக் கதவைத் தட்டினான். சந்தானம் உள்ளே வரச் சொன்னதும் கூர்க்கா உள்ளே வந்து யாரோ ஓர் எழுத்தாளரின் பெயரைச் சொல்லி, வெளியே அவர் காத்திருப்பதாகக் கூறினான். சந்தானம் கடிகாரத்தைப் பார்த்தார். கோமளம் வருவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தது. அதற்குள் அந்த ஆசிரியரிடம் பேசவிருந்த நேரத்தை முடித்துவிடலாம் என்று நினைத்தார். அவரை உள்ளே அனுப்பி வைக்கும்படி உத்தர விட்டார்.

அறைக்குள் வந்த எழுத்தாளரைக் கை கூப்பி வணங்கி வரவேற்றார்.

''நாவலைப் படித்தீர்களா?'' என்று எழுத்தாளர் கேட்டார்.

''ஓ...படித்தேன். நன்றாக இருக்கிறது'' என்று கூறிவிட்டு ஏதோ யோசிப்பது போல் இருந்தார், சந்தானம்.

எழுத்தாளர் மகிழ்ச்சிப் பெருக்கால் பூரித்துப் போனார். தம் நாவலை ஆசிரியர் ஏற்றுக் கொண்டார் என்பதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி.

''பொதுவாக இந்த அளவுள்ள தொடர் கதைகளுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்போம்'' என்று சந்தானம் சொன்னதும், எழுத்தாளர் திகைத்தார். நவரசம் பத்திரிகையில் மூவாயிரத்துக்குக் குறையாமல் கொடுப்பதாகக் கேள்விப்பட்டிருந்தார்.

''ஆனால் இதில் ஒரு சிக்கல் இருக்கிறது'' என்று தொடர்ந்தார் சந்தானம்.

கௌரவக் குறைச்சல்!

எட்டு ஆண்டு காலம் (64 முதல் 72 வரை) ஜப்பான் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்த திரு ஸாட்டோவுக்குச் சமாதான நோபெல் பரிசு வழங்கப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது. அவர் சமாதான நோபெல் பரிசு பெறுகிறார் என்ற செய்தியை அக்டோபரில் முதல் தடவையாகக் கேள்விப்பட்டபோது பெரு வாரியான ஜப்பானிய மக்களே திடுக்குற்றனர். இதற்குக் காரணம் திரு ஸாட்டோ, உலகச் சமாதானத்துக்காக என்ன செய்தார் என்பது ஜப்பானிய மக்களுக்கே தெரியாதது தான். பின் எப்படி அவருக்கு இந்தப் பரிசு கிடைத்தது? எல்லாம் பணம் செய்யும் கூத்துதான்! திரு ஸாட்டோ இப் பரிசு பெற வேண்டும் என்பதில் ஜப்பானில் ஒரு பெரும் பணக்காரத் தொழில் பிரமுகர் அக்கறை கொண்டாராம். ஐ. நா. சபையின் முன்னாளைய ஜப்பானிய பிரதிநிதி தொஷி கோஜுகாசே என்பவர் ஸ்வீடன் நாட்டுக்குப் பறந்து வந்து, நோபல் பரிசு வழங்கும் குழுவினரிடம் ஸாட்டோவுக்கு இப்பரிசு வழங்க வேண்டும் என்று ரொம்பத் தூரம் பேசினாராம். இதை நோபல் பரிசுக் குழுவின் டைரக்டரே ஒப்புக் கொண்டிருக்கிறார். இத்தகைய பரிசு பெறுபவர் ஏதாகிலும் புத்தகம் எழுதியிருக்க வேண்டுமாம். ஆனால் ஸாட்டோ புத்தகமோ, கட்டுரையோ எழுதியவரல்ல. ஆனால் அந்த விதியைப் பூர்த்தி செய்ய அவசர அவசரமாக அவர் எவ்வெப்போதோ உலக சமாதானத்தைக் குறித்துப் பேசிய பேச்சுகளைத் தொகுத்துப் புத்தகமாக 500 பிரதிகள் வெளியிட்டனராம்! எப்படியிருக்கிறது கதை?



நோபல் பரிசின் கௌரவம் உலக மக்களிடை எப்படியெல்லாம் குறைக்கப்பட்டு வருகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம்.

எழுத்தாளர் பதறிப் போனார். அந்த ஆயிரம் ரூபாய்கூட வராமல் போய்விடுமோ என்று நினைத்தார். பீதியுடன் சந்தானத்தை வெறிக்கப் பார்த்தார்.

''பத்திரிகை அதிபர் செட்டியார் இருக்கிறாரே, வருமான வரி விஷயத்தில் கறார்ப் பேர்வழி. இந்தக் கதையைப் பற்றி அவரிடம் பேசினேன். ஆயிரமாவது கொடுக்க வேண்டும் என்று சிபாரிசு செய்தேன். சம்மதித்து விட்டார். ஆனால் வருமான வரிக் கணக்குக்காக ஒரு சிறு ஏற்பாடு'' என்று கூறிவிட்டு எழுத்தாளரை உற்றுப் பார்த்தார், ஆசிரியர். பிறகு சொன்னார்: ''வேறு ஒன்றுமில்லை.... மூவாயிரம் ரூபாய் நீங்கள் பெற்றுக் கொண்டதாக ரசீது கொடுத்தால் போதும். ஆயிரம் ரூபாயை நீங்கள் உடனே பெற்றுக் கொள்ளலாம். இதெல்லாம் வருமான வரிக்காக உள்ள ஏற்பாடுகள்.''

''ஓ, அதற்கென்ன, அப்படியே ரசீதில் கையெழுத்துப் போட்டுத் தருகிறேன்'' என்றார் எழுத்தாளர்.

''அப்படியானால் சங்கடமே இல்லை. நீங்கள் நாளைக் காலையில் வாருங்கள். எங்கள் பத்திரிகை அதிபரிடம் சொல்லிப் பணம் வாங்கிக் கொடுக்கிறேன்.''

''ரொம்ப நன்றி'' என்று விடைபெற்றுச் சென்றார் எழுத்தாளர்.

ஆசிரியர் சந்தானம் உற்சாக மடைந்தார். சிறு பேரத்தின் மூலம் தமக்கு இரண்டாயிரம்

ஜிகு ஜிகு ஜிகு ஜிகு...

'ஆராதனா'வின் தமிழ் வடிவமான 'சிவகாமியின் செல்வன்' படத்தில் இடம் பெறும் பாடல் - 'உள்ளம் ரெண்டு ஒன்றையொன்று'.

இப்பாட்டை மேடைகளில் எம். எஸ். விசுவநாதன் குழுவினர் பாடும்போது, ரயில் போகும் சத்தத்தைக் காட்டுவது எப்படித் தெரியுமா ?

உப்புத் தாள்கள் இரண்டை வைத்துத் தாளத் துக்கேற்ப, உரசி உரசி எழுப்பும் ஒலியே 'ஜிகு ஜிகு, ஜிகு ஜிகு!'

- ஏ. சுவாமிநாதன்

ரூபாய் கிடைத்து விட்ட குதூகலம். நாளை அந்த அப்பாவி எழுத்தாளனுக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்துவிட்டுப் பாக்கி இரண்டாயிரத்தை எடுத்துக் கொள்ளலாம். செட்டியாருக்கு மூவாயிரத்துக்கு ரசீது போய்விடும். இந்தமாதிரிப் பேரங்களை யெல்லாம் புகழ் பெற்ற எழுத்தாளர்களிடம் செய்ய முடியாதாகையால் நவரசம் பத்திரிகையில் ஆரம்ப கால எழுத்தாளர்களின் நாவல்கள் தாம் அடிக்கடி தொடராக வெளி வந்து கொண்டிருந்தன. "புதிய இளம் எழுத்தாளர்களை ஆதரிக்கும் ஒரே பத்திரிகை நவரசம்தான்; ஒரே ஆசிரியர் சந்தானம் தான்" என்று பெருமையாகச் சொல்லிக் கொண்டிருந்தார்.

மணி மூன்றாகியதும் சந்தானத்தின் பரபரப்பு அதிகமாகியது. அறையை விட்டு மாடி வராந்தாவுக்கு வந்து தெருவைப் பார்த்துக்கொண்டு நின்றார். பத்து நிமிடங்களில் கோமளத்தின் கார், காரியாலயத்தின் போர்டிகோவில் நுழைந்தது. சந்தானம் விரைந்து கீழே சென்று கோமளத்தை வரவேற்றார். அவளை இறக்கிவிட்டுக் கார் சென்றுவிட்டது.

"கொஞ்சம் நேரமாகிவிட்டது" என்று கூறி, படிகளில் ஏறினாள் கோமளம்.

"காரணத்தைப் புரிந்து கொண்டேன்" என்று கூறிப் புன்னகை புரிந்தார் ஆசிரியர்.

"எப்படி?" என்று கூறி ஏறிட்டுப் பார்த்தாள்.

"உங்கள் அலங்காரத்திலிருந்து. அதற்கே இரண்டு மணி நேரமாகியிருக்கும்" என்றார். அவள் சிரித்தாள். அதன் கவர்ச்சியில் ஆசிரியரின் இரத்த அழுத்தம் கூடியது. அவளை அழைத்துக் கொண்டு மாடிக்குச் சென்றார்.

"போட்டோ எடுக்க வேண்டும் என்றீர்களே. அதற்காகத்தான் இந்த அலங்காரம்" என்று கூறியபடியே ஆசிரியரின் அறைக்குள் நுழைந்தாள் கோமளம்.

"தேவையே இல்லை. கடவுள் உங்களைப் படைக்கும்போதே அழகோடு படைத்துவிட்டார்" என்று அவர் கூறியதும் வெட்கத்தால் அவள் முகம் சிவந்தது.

"என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று சந்தானம் கேட்டார்.

அறையின் மூலையில் இருந்த ஒரு பிரிஜிடயரைத் திறந்து ஒரு ஃபாண்டா பாட்டிலையும், ஒரு கண்ணாடித் தம்ளரையும் எடுத்து மேஜை மீது வைத்தார். ஃபாண்டாவின் மூடியைத் திறந்து தம்ளரில் கொஞ்சம் ஊற்றிக் கோமளத்தின் முன் வைத்தார்.

"உங்களுக்கு?" கோமளம் கேட்டாள்.

"ஓ..... நானும் சாப்பிடப் போகிறேன்" என்று தட்டையான பாட்டிலையும் ஒரு தம்ளரையும் எடுத்து மேஜையின் மீது வைத்தார்.

"என் எழுத்தில் பாதிக்கு மேல் நீங்கள் எழுதிச் சேர்ப்பதுதான்" என்றாள் கோமளம்.

ஒரு சோடா பாட்டிலை எடுத்தார் சந்தானம்.

"அதனால் என்ன? உங்களுக்காகத்தான் அப்படிச் செய்கிறேன். கதையில் வரும் சில கட்டங்களைத் தத்ரூபமாக விவரிக்க நீங்கள் கூச்சப்படுகிறீர்கள். நான் அதை விவரித்து எழுதிக் கதையோடு சேர்க்கிறேன். எடிட்டிங் என்பது இதுதான்" என்று கூறியபடியே பாட்டிலைத் திறந்தார். குபீரென்று ஒரு நெடி பரவியது. கோமளம் முகத்தைச் சுளித்தாள்.

"இப்படி எடிட் செய்வதால்தான் கதையில் சுவை ஏறுகிறது. உங்களுக்குப் புகழ் கிடைக்கிறது. உங்கள் புகழ் ஒன்றுதான் என் லட்சியம்" என்று அவர் கூறியதும் கோமளம் நன்றிப் பெருக்கால் மெய்சிலிர்த்தாள்.

"நான் மது அருந்துவதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?" என்று அவளுடைய அனுமதியைக் கோரினார் கனவான் போல.

"நோ, நோ" என்றாள் மரியாதையுடன்.

"எழுதுவதற்கு மது மிகவும் அவசியம். உண்மையான எழுத்தாளன் ஒவ்வொருவனும் இதை ருசிக்கத்தான் வேண்டும். மதுவையும் அதன் இனிமையையும் உணர்ந்துகொள்ளாமல் எந்த ரசனையையும் பற்றி ஓர் எழுத்தாளன் பூரணமாக எழுதவே முடியாது. ஒரு முறை சாப்பிட்டுப் பாருங்கள். எவ்வளவு உற்சாகமாக இருக்கும் தெரியுமா?" என்றார் ஆசிரியர் சந்தானம்.

"வேண்டாம் வேண்டாம்" என்று கலவரமடைந்து கண்ணாடித் தம்ளரை மூடிக் கொண்டாள் கோமளம்.

"பாண்டாவோடு கலந்து சாப்பிடுங்கள். ருசியாயிருக்கும். கொஞ்சமாய் ஊற்றுகிறேன்!" என்று கூறியவாறே தம்ளரை மூடியிருந்த அவள் கையைப் பற்றி மெதுவாக விலக்கியபடி தம்ளரில் சிறிது விஸ்கியை ஊற்றினார்.

"பயப்படாமல் ருசி பாருங்கள். இன்று நீங்கள் வீட்டுக்குப் போனதும் உங்கள் மூட் பிரமாதமாயிருக்கும். ஒரு நாவலே உங்கள் கற்பனையில் தோன்றிவிடும். உங்கள் தொடர் கதைக்காக வாசகர்கள் ஏங்கிக் கிடக்கிறார்கள்" என்றார் ஆசிரியர்.

கோமளம் தம்ளரிலிருந்து கொஞ்சம் உறிஞ்சினாள். தொண்டையில் எரிவதுபோல் இருந்தது. முகத்தைச் சுளித்தாள்.


"முதலில் அப்படித்தான் இருக்கும். ஆரம்பத்தில் உறிஞ்சவே கூடாது. ஒரே மடக்காக விழுங்கிவிட வேண்டும். மடமடவென்று முழுவதையும் குடித்துவிடுங்கள். ஒன்றும் செய்யாது. உற்சாகமாகத்தான் இருக்கும்." ஆசிரியர் தூண்டினார்.

கோமளம், ஒரே மூச்சில் தம்ளரிலிருந்த பானம் முழுவதையும் கஷாயம் குடிப்பது போல் குடித்துவிட்டுத் தம்ளரை மேஜை மீது வைத்தாள். தொண்டை எரிவது போன்ற உணர்ச்சி தோன்றவே காறிக் கொண்டாள். வயிற்றுக்குள்ளும் எரிவது போல் இருந்தது. தலையை நிமிர்த்து ஆசிரியரைப் பார்த்தாள். அவர் திருப்தியுடன் சிரித்தபடியே தம்ளரிலிருந்த பானத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக உறிஞ்சிக் கொண்டிருந்தார். (தொடரும்)

சட்டம் என்ன?











ஜாக் ஸ்ட்ராஸ் எழுதிய 'சட்டம் என்ன ?' என்ற ஆங்கில நூலிலிருந்து மாதிரிக்குச் சில.

விற்பனை உறவு

ஒயிட் என்பவரின் வீட்டை வாங்கிக்கொள்ளச் சம்மதித்த ஹோவார்ட், ஒயிட்டுக்கு ஒரு விலையைச் சொல்லிக் கடிதம் எழுதினார். ஒயிட்டும் சம்மதித்துப் பதில் கடிதம் எழுதிப் போட்டார். இதற்குள் ஹோவார்ட் தாம் அதிக விலை பேசிவிட்டோம் என்று உடனே ஒயிட்டுக்குப் போன் செய்து அதை 'கான்ஸல் செய்கிறேன்' என்றார். அது எப்படி முடியும் ? ''என்னுடைய சம்மதத்தைத் தெரிவித்து உங்களுக்கு லெட்டர் போஸ்ட்செய்துவிட்டேனே'' என்றார் ஒயிட்.

'' போஸ்ட் செய்தால் என்ன ? எனக்கு அது இன்னும் வரவில்லையே?'' என்றார் ஹோவார்ட்.

முடியாது என்றார் ஒயிட்.

வழக்கு நீதி மன்றத்துக்குப் போயிற்று.

தீர்ப்பு என்ன ?

'ஹோவார்ட் சொன்ன விலையை ஒயிட் ஏற்றுக் கொண்டு கடிதம் எழுதி அதை போஸ்ட் செய்த உடனே அந்த ஒப்பந்தம் செல்லுபடியாகும். ஹோவார்ட் கைக்குக் கிடைத்த நேரத்தைப் பற்றிக் கவலையில்லை.'

இறந்தவனைக் கொல்ல முடியுமா?

ஸ்வீட், வில்லி இருவரும் விரோதிகள். எப்படியாவது வில்லியைக் கொன்று விட நினைத்தான் ஸ்வீட். ஒரு நாள் வில்லி தூங்கிக் கொண்டிருந்த போது அவன் வீட்டில் நுழைந்த ஸ்வீட் வில்லியைத் துப்பாக்கியால் ஐந்துமுறை சுட்டான். பிறகு பிரேதப் பரிசோதனையின் போது ஸ்வீட் சுடுவதற்கு இரண்டு மணி நேரம் முன்பாகவே வில்லி இறந்து விட்டதாகத் தெரிந்தது. ஸ்வீட் கைது செய்யப் பட்டான். வழக்கு நடந்தது. 'வில்லி முன்பே இறந்துபோய் இருந்தாலும், அவனைக் கொல்லும் நோக்கம் ஸ்வீட்டுக்கு இருந்திருக்கிறது... ஆகவே கொலை செய்த முயற்சிக்கு அவனுக்குத் தண்டனை கொடுக்க வேண்டும்' என்பது அரசுதரப்பு வக்கீலின் வாதம். 'இறந்து போன மனிதனை எப்படிக் கொல்ல முடியும் ?' என்றார் ஸ்வீட்டின் வக்கீல்.

தீர்ப்பு என்ன ?

'பிணத்தைக் கொலை செய்ய முயன்றது குற்றமாகாது. ஏனெனில் பிணத்தைக் கொலை செய்ய முடியாது.'

டாக்டருக்கு மருந்து ?

ஹாரி என்பவர் வயிற்று வலியால் அவஸ்தைப்பட்டார், டாக்டரிடம் போனார். டாக்டர் அவர் வயிற்றில் ஓர் ஆப்ரேஷன் செய்தார். ஆறு ஆண்டுகள் கழித்துத் திரும்பவும் ஹாரிக்கு வயிற்று வலி வந்து எக்ஸ்ரே எடுத்த போது வயிற்றுக்குள் முன்பு ஆப்பரேஷன் செய்த டாக்டர் ஒரு சிறிய கத்திரிக்கோலை வைத்துத் தைத்துவிட்டது தெரிந்தது. அதை வெளியே எடுத்த பிறகு பழைய டாக்டர் மீது கேஸ் போட்டார் ஹாரி. அந்த மாநிலச் சட்டப்படி சம்பவம் நடந்த ஓர் ஆண்டுக்குள் வழக்குகள் தொடரப்பட வேண்டும். 'ஆறு வருடங்கள் ஆகிவிட்டன. ஆகவே செல்லாது' என்பது டாக்டர் வாதம். 'ஆறு வருடங்கள் ஆனாலும் எனக்கு இப்பொழுதுதானே தெரிந்தது' என்றார் ஹாரி.

தீர்ப்பு என்ன ?

'ஒரு வருடத்துக்குள் வழக்கு தொடரப்பட வேண்டும் என்று உள்ள நியதி இந்த வழக்குக்குப் பொருந்தாது. தவிர எக்ஸ்ரே எடுக்கப்பட்ட ஓர் ஆண்டுக்குள் வழக்குத் தொடரப்பட்டு விட்டது. ஆகவே டாக்டர் நஷ்டஈடு தர வேண்டும்.'

ஹலோ! ஹலோ! சுகமா?

டெலிபோன் டைரக்டரியில் முதல் பெயராக இருக்க எல்லோருக்கும் ஆசை. மற்றவர்களை முறியடிக்க ஹாரிஸி என்பவர் AAAAAAAAAAAA என்று இருபத்தொரு ஏக்கள் போட்டு 'அண்டு கம்பெனி' என்று ஒரு கம்பெனி ஆரம்பித்து டெலிபோன் வைத்துக் கொண்டார். இவ்வளவு பெரிய பெயரை டைரக்டரியில் போட முடியாது என்றது டெலிபோன் கம்பெனி. 'அது எனக்குப் பிடித்தமான பெயர். அந்தப் பெயரின் அழகு எனக்குத் தெரியும். எந்தப் பெயராக இருந்தால் என்ன ? போட வேண்டியது தானே!' என்பது ஹாரிஸின் வாதம்.

வழக்கு நீதிமன்றம் போயிற்று.

தீர்ப்பு என்ன ?

'இந்தப் பெயரைப் போட முடியாது. இதைப் போட்டால் இம்மாதிரி பல கம்பெனிகள் முளைக்கும். பிறகு டெலிபோன் டைரக்டரியை யாரும் படிக்க முடியாது.'

முறிந்த எலும்பு

டோரதி ஒரு கம்பெனியில் செக்ரடரியாக வேலை செய்தாள். அந்தக் கம்பெனி செலவில் எல்லா ஊழியர்களையும் பிக்னிக் அழைத்துப் போனார்கள். அங்கே ஓடிப் பிடித்து விளையாடிய போது கீழே விழுந்ததில் டோரத்தியின் கால் முறிந்துவிட்டது. டோரத்தி கம்பெனியிடம் நஷ்டஈடு கேட்டு வழக்குத் தொடர்ந்தாள். 'கம்பெனி வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது விபத்து ஏற்பட்டால்தானே நஷ்டஈடு தர முடியும்' என்றது கம்பெனி.

''கம்பெனி முதலாளிகள் அழைத்துப் போன பிக்னிக்கின்போதுதானே விபத்து நிகழ்ந்தது. ஆகவே அவர்கள் பணம் தரத்தான் வேண்டும்'' என்றாள் டோரத்தி.

தீர்ப்பு என்ன ?

'கம்பெனி பிக்னிக் போனதே அதில் வேலை செய்பவர்களின் சுமுக உறவுக்காக. ஆகவே, இது தொழிலின் முன்னேற்றத்துக்காக ஏற்பாடு செய்யப்பட்டது என்று கருதுகிறேன். இந்த விபத்து வேலை நேரத்தில் நிகழ்ந்ததாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.'

பறக்க நினைத்த பைத்தியம்

ஸ்டான்லி ஒரு மன நோயாளி. ஆஸ்பத்திரியில் இருந்தார். ஒரு நாள் அவருக்குப் பறவைகளைப் போலப் பறக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுவிட்டது. உடனே நான்காவது மாடி ஜன்னலிலிருந்து கைகளையும் கால்களையும் ஆட்டிக்கொண்டு குதித்தார். அவ்வளவுதான். கீழே விழுந்ததில் உயிர் போகவில்லை. ஆனால் உடம்பில் பல இடங்களில் எலும்பு முறிந்து விட்டது. 'என்னைக் கீழே குதிக்கும்படி விட்டிருக்கக் கூடாது' என்று ஆஸ்பத்திரியின்மீது வழக்குத்தொடுத்தார்.

'அவர் வேறொரு நோயாளியின் அறைக்குள் நுழைந்து குதித்துவிட்டார். நாங்கள் பார்க்கவில்லை' என்றனர் டாக்டர்கள்.

'நான்தான் பைத்தியம் என்பது அவர்களுக்குத் தெரியுமே, ஜாக்கிரதையாக இருந்து என்னைத் தடுத்திருக்க வேண்டாமா?' என்பது ஸ்டான்லியின் வாதம்.


தீர்ப்பு என்ன ?

''இந்த வழக்கில் ஸ்டான்லியை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய பொறுப்பு ஆஸ்பத்திரியினுடையது. ஆகவே ஸ்டான்லிக்கு ஆஸ்பத்திரி நஷ்டஈடு தரவேண்டும்.' .


கிடைக்காத வெகுமதி

கரோல் வீட்டில் ஒரு திருடன் புகுந்து திருடும்போது அந்தத் திருடனை நன்றாகக் கவனித்த அவள் போலீஸில் சரியாக அடையாளங்களைக் கூறி இருந்தாள். இரண்டு நாட்கள் கழித்து அதே ஊரில் சீனு என்பவர் வீட்டில் நிறையப் பணம் திருட்டுப் போய்













விட்டது. திருடனைக் கண்டு பிடித்துக் கொடுப்பவருக்கு ஆயிரம் டாலர் வெகுமதி என்று அறிவித்தார். கரோல் கூறிய அடையாளங்களைக் கொண்டு பிடிபட்ட திருடன் தான் சீனு வீட்டிலும் திருடியவன் என்று பிறகு தெரிய வந்தது. 'நான் கூறிய அடையாளங்களால்தான் திருடன் பிடிபட்டான். ஆகவே எனக்குத்தான் வெகுமதிப் பணம் தரப்பட வேண்டும்' என்றாள் கரோல்.

'நான் வெகுமதி அறிவிப்பதற்கு முன்னதாகவே கரோல் அடையாளங்களைக் கூறிவிட்டாள். ஆகவே இடையாது' என்றார் சீனு. வழக்கு நீதிமன்றம் சென்றது.

தீர்ப்பு என்ன ?

'வெகுமதி அறிவிப்பு ஒரு ஒப்பந்தம் மாதிரி. யாராவது அதை ஏற்றுக் கொண்டு பிறகு செயல்பட வேண்டும். இந்தக் கேஸில் வெகுமதி அறிவிக்கப்பட்டதற்கு முன்பாகவே கரோல் அடையாளங்களைக் கூறிவிட்டபடியால் அவளுக்கு வெகுமதி தொகை இடையாது.'

எலியால் வந்தது

பெட்டியும் ரோட்னியும் காதலர்கள். பெட்டியை விளையாட்டாகப் பயமுறுத்த எண்ணிய ரோட்னி ஒரு ரப்பர் எலியைப் பெட்டி மீது போட்டான். அப்பொழுது இருவரும் காருக்குள் இருந்தார்கள். எலி விழுந்ததும் அது உண்மையான எலி என்று நினைத்த பெட்டி அவசர அவசரமாகக் காரை விட்டு இறங்கும்போது காலிலும் தலையிலும் காயம் ஏற்பட்டது. கோபமடைந்த பெட்டிரோட்னி மீது நஷ்டஈடு வழக்குத் தொடர்ந்தாள்.

''ரப்பர் எலியை நான் விளையாட்டாகத்தான் மேலே போட்டேன். அது இவ்வளவு தூரம் ஆகும் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை'' என்றான் ரோட்னி.

''இதை நான் நம்ப மாட்டேன். பெண்களுக்கு எலியைக் கண்டால் ரொம்பப் பயம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்தான் ஜாக்கிரதையாக இருந்திருக்க வேண்டும்'' என்று வாதாடினாள் பெட்டி.

தீர்ப்பு என்ன ?

'ஜோக் அடிக்கும்போதும், விளையாடும்போதும் விபரீத விளைவுகள் ஏற்படாதா என்பதை யோசித்துப் பார்க்காதது ரோட்னியின் தவறு. ஆகவே நஷ்டஈடு தர வேண்டும்.

உரிமைப் பிரச்னை

பெர்னி விளம்பரத் தொழிலில் இருந்தான். சாலை ஓரங்களில் நிலம் வாங்கி அதில் விளம்பரப் பலகைகள் போட்டு அதிலிருந்து பணம் சம்பாதிப்பதுஅவன்தொழில். திடீரென்று ஒரு நாள் சாலையின் ஓரத்திலிருந்து 67 அடி வரை எந்த விளம்பரப் பலகையும் வைக்கக் கூடாது என்று ஒரு புதுச் சட்டம் வந்தது. அந்தச் சட்டத்தை எதிர்த்து பெர்னி ஒரு வழக்குப் போட்டான். 'நிலம் என்னுடையது. சொந்த நிலத்தில் வீடு கட்ட எவ்வளவு உரிமை இருக்கிறதோ அவ்வளவு உரிமை விளம்பரப் பலகைகள் நடுவதற்கும் உண்டு' என்பது பெர்னியின் வாதம்.

' விளம்பரப் பலகைகள் சாலையில் கார்களில் போகும் போது இயற்கைக் காட்சிகளை ரசிக்கத் தடையாக உள்ளன' என்றனர் அதிகாரிகள்.

தீர்ப்பு என்ன ?

'அமெரிக்காவின் அழகு குலைகிறது என்ற வாதமே போதும் — விளம்பரப் பலகைகளைப் போடாமல் தடை செய்ய. ஆகவே விளம்பரப் பலகைகள் அகற்றப் பட வேண்டும்.'

தூக்கத்தில் நடப்பவர்

நார்ட்டனுக்குத் தூக்கத்தில் நடக்கும் வியாதி உண்டு. அப்படி இரவில் ஒரு நாள் நடக்கும்போது கையில் துப்பாக்கியோடு தெருவில் போய் அங்கு வந்த ஓர் ஆசாமியைச் சுட்டுக் கொன்று விட்டான். அவனைப் போலீஸார் கையும் களவுமாகப் பிடித்து வழக்குப் போட்டனர்.

'என் கையில் துப்பாக்கி இருந்தது என்னவோ உண்மைதான். ஆனாலும் நான் கடவில்லை. நான் தூங்கும் போது செய்த தவற்றுக்கு என்னைத் தண்டிக்க முடியாது' என்றான் நார்ட்டன்.

தீர்ப்பு என்ன ?

'கிரிமினல் சட்டத்தின்படி நினைவு இல்லாத நிலையில் இருக்கும்போது ஒருவன் செய்த தவறுகளுக்கு அவனைத் தண்டிக்கக்கூடாது.. ஆகவே நார்ட்டன் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லை.'

தகப்பன் நான் இருக்க . . .

ஸ்மித்தின் மனைவி ஸ்மித்துக்குத் தெரியாமல் ஒரு டாக்டரிடம் போய் அபார்ஷன் செய்து கொண்டு விட்டாள். இந்த விஷயம் ஸ்மித்துக்குத் தெரிந்ததும் அவன் கோபமடைந்து அந்த டாக்டர்மீது வழக்குத் தொடர்ந்தான்.

''ஸ்மித்தின் மனைவி என்னிடம் வந்து கேட்டபோது ஒப்புதல் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிய பிறகே நான் ஆபரேஷன் செய்தேன். ஸ்மித் தன் மனைவியைக் கண்டிக்கலாமே தவிர என்னை ஏன் கண்டிக்க வேண்டும்?'' என்று கேட்டார் டாக்டர்.

''பிறப்பதாக இருந்த குழந்தைக்கு நான்தானே தந்தை. இந்த ஆபரேஷனால் என் வம்சத்தை நசித்துப் போகச் செய்து விட்டாரே!'' என்று வாதாடினார் ஸ்மித்.

தீர்ப்பு என்ன ?

'டாக்டர் செய்தது தவறு. குழந்தை மீது அது பிறப்பதற்கு முன்பே அதன் தந்தைக்கு உரிமை உண்டு. ஆகவே அவரைக் கேட்காமல் . டாக்டர் அபார்ஷன் செய்திருக்கக் கூடாது.'

தொகுப்பு: பாலி

ரேஸர் வெட்டும் ரோமக் கட்டையும் ஏற்படும்போது வெட்கப்படுங்கள்...
அல்லது




ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவர் தரும் பட்டு மேனியால் பெருமைப்படுங்கள்

ஷேவிங் வேண்டாம், அது ஆண்களுக்கு மட்டுமே! தவிர, உங்கள் சருமத்தை வெட்டி வதைக்கும்...,ரோமம் கட்டையாக வளரும். இதோ ஒரு விடிவு-பெண்மைக்கே உரிய நளினமான வழியில் வேண்டாத ரோமத்தை விரட்டியடிக்கலாம். மென்மையான ஆன் பிரஞ்ச் ஹேர் ரிமூவர்-இந்த க்ரீமை வேண்டாத ரோமத்தின் மீது தடவுங்கள், சிறிது நேரம் கழித்துத் துடைத்து எடுங்கள். ஆஹா! உங்கள் மென்பட்டு மேனி கண்டால் கண்பட்டு விடாதோ! இந்த க்ரீம் சருமத்தின் உட்சென்று வேலை செய்து வேண்டாத ரோமத்தை வழியனுப்புகிறது...வாரக்கணக்கில் பட்டுப் போல் மென்மை—தொட்டுப் பார்த்தால் மழமழப்பு...பெண்மையின் நளினத்தைப் பேசுகிறது உங்கள் மேனி-இல்லையா? எனவே இக்கணமே ரேஸருக்கு வழியனுப்பு; ஆன் பிரஞ்ச் ஹேர் ரிமூவருக்கு வரவேற்பு!



ஆன் பிரெஞ்ச்
ஹேர் ரிமூவர்

அருவருப்பூட்டும் ரோமத்தை அகற்றும் அருமையான க்ரீம்



2 சைஸ்களில் கிடைக்கிறது : 40 கிம் மற்றும் 75 கிம்.

Licensed User of TM : Geoffery Manners &Co. Ltd.

Tam



தகுதியில்லை!

— வில்லனூர் பக்ஷ —

பள்ளிக்கூட ஆண்டு விழா நிகழ்ச்சியில் பரிசளிக்கும் கட்டம் ஆரம்பமாயிற்று.

''ஆறாம் வகுப்பு ஆங்கிலப் பாடத்தில் முதல் பரிசு, எம். பிரகாஷ்'' என்றார்கள்.

வெள்ளை அரை நிஜாரும், வெளிர் நீல ஷர்ட்டும் அணிந்த துறுதுறுத்த ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவன் குதித்துக் கொண்டு மேடை ஏறினான். கும்பிட்டுவிட்டு வெள்ளிக் கோப்பையைப் பெற்றுக் கொண்டு, கீழே இறங்கினான். அடுத்தடுத்துப் பல பரிசுகள் அவனுக்கே வந்தன.

''ஆறாம் வகுப்பு. ஒழுங்கான நடத்தை. ஒழுங்கினைமற்ற ஆஜர் எம். பிரகாஷ்!'' என்றார்.

மேடை ஏறிப் போன அவனைப் பரிசளித்துக் கொண்டிருந்த பெரியவர் கட்டிப் பிடித்து நிறுத்தினார்.

''தம்பி! கொஞ்ச நேரத்துக்கு நீ இந்த இடத்தைவிட்டு நகராதேப்பா. ஒட்டு மொத்தமாக எல்லாப் பரிசுகளையும் வாங்கிக் கொண்டு, பிறகு கீழே இறங்கு. என்ன?'' என்று கேட்டு அவன் கொழுவிய கன்னத்தை திமிண்டினார். பிறகு பரிசைக் கொடுத்தார்.

இப்போது பார்வையாளர்களின் கைதட்டல் கட்டடத்தையே அதிர வைத்தது.

மேற்படி காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த கோமளவல்லியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளித்தது. ஆறாம் வகுப்பின் ஆசிரியை அவள். அந்தப் பள்ளியில் அவள் உத்தியோகம் ஏற்று இன்னும் இரண்டு மாதங்கள்கூட முழுமையாக ஆகவில்லை. வகுப்புக்குள் அவள் வந்த முதல் நாளே பிரகாஷ் அவளைக் கவர்ந்து விட்டான். அவனை வெகுவாகப் பாராட்ட வேண்டும், பிரகாஷின் அம்மாவைப் பார்க்க வேண்டும், பார்த்து அவனைப் பற்றிப் பாராட்டிவிட்டு வர வேண்டும் என்கிற ஆவல் இருந்து வந்தது. அதை இன்று நிறைவேற்றிவிடுவது என்று தீர்மானித்துக் கொண்டாள்.

விழாவெல்லாம் முடிந்தபிறகு பிரகாஷும் இன்னும் மூன்று பிள்ளைகளுமாகப் பேசிக் கொண்டே சென்றார்கள். அவர்களையறியாமல் அவர்களைப் பின்தொடர்ந்தாள் கோமளவல்லி.

பிள்ளைகள் நால்வரும் ஏதேதோ பேசிக் கொண்டே போகையில், இடையே ஒருவன் குறுக்கிட்டுக் கையை நீட்டினான். இரண்டு கண்களுமற்ற குருட்டுப் பிச்சைக்காரன் அவன்.

பிரகாஷுடன் இருந்த ஒருவன், தன் சட்டைப் பையில் கையை விட்டு, ஐந்து பைசா நாணயம் ஒன்றை எடுத்து, பிச்சைக்காரனுக்குக் கொடுக்கப் போன சமயம், 'வெடுக்'கென்று அவன் கையை இழுத்துப் போடவிடாமல் செய்தான் பிரகாஷ்.

''பாவம்டா. இரண்டு கண்களும் தெரியாதவன்!'' என்றான் அந்தப் பையன்.

''சரிதாண்டா, கண் தெரியாவிட்டால் அது ஒரு பெரிய பரிதாபமா என்ன? காசு ஒன்றும் போட வேண்டாம். வாடா!'' என்று சொல்லி, மேலே நடந்தான்.

நடந்தவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த கோமளவல்லிக்கு ஆத்திரம் மண்டிக் கொண்டு வந்தது. அப்படியே திரும்பிவிட நினைத்தவள், தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டாள். பிரகாஷின் வீட்டுக்குப் போய், அவனுடைய தாயாரிடம், 'அம்மா! உங்கள் பிள்ளை இத்தனை பரிசுகள் பெற்றிருக்கிறானே என்று பூரித்துப் போய்விடாதீர்கள். இதற்கெல்லாம் அவன் தகுதியில்லை. ஏனெனில், மனிதத் தன்மைக்கு அஸ்திவாரமாக அமைய வேண்டிய அன்பு அவனிடம் இல்லை. அதை முதலில் அவனுக்குக் கற்றுக் கொடுங்கள்' என்று சொல்லக் கருதினாள்.

பிரகாஷின் வீடு வந்தது. பிள்ளைகள் நால்வரும் குதித்துக் கொண்டு படியேறினர்.

முன் பக்கத்துச் சிறிய வராந்தாவில், சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த அவன் தந்தை நிமிர்ந்து, ''பிரகாஷ் கண்ணு, வந்துட்டியாடா?'' என்று கேட்டார்.

''இதோ, எனக்குக் கிடைத்த பரிசுகள்!''

அவற்றை வாங்கி மேலும் கீழுமாகத் தடவிக் கொடுத்த அவர், ''அடடே! வெள்ளிக் கோப்பை. தேவலையே!'' என்றார்.

வாசற்படிக்கு வெளிப் பக்கம் மறைவாக நின்றபடி நடந்தவைகளைக் கவனித்துக் கொண்டிருந்த கோமளவல்லி, நெக்குருகிப் போனாள். உள்ளங்கை நெல்லிக் கனியாக, அவளுக்கு எல்லா உண்மையும் விளங்கிற்று.

கண்கள் இல்லாத அனைவரிடமும் பார்வையற்ற தன் தந்தையையே காண்கிறான் பிரகாஷ். ஆகவேதான் நண்பர்களின் பரிதாபம் அவனுக்குப் பேரவமானமாகப் பட்டது.... ''நீங்களெல்லாம் பச்சாத்தாபப்படும் அளவுக்கு அவர் ஒன்றும் பலவீனமானவர் இல்லை'' என்று நண்பர்களுக்கு நிரூபிப்பதற்காகவே, பரிசுகளையெல்லாம் தன் தந்தையிடம் அவன் காண்பிக்க, அவரும் ஒளியற்ற குறையின்றி, அவைகளைப் பிரமாதமாக இனம் பிரித்து அறிந்து கொண்டுவிட்டார்.

கோமளவல்லி வீட்டினுள் போகாமல் அப்படியே திரும்பிவிட்டாள். ''சற்று முன்னும் இதே போல் திரும்பிவிட நான் நினைத்தேன். அப்போது, நான் பாராட்டும் அளவுக்குப் பிரகாஷுக்குத் தகுதியில்லை என்று எண்ணினேன். ஆனால் இப்போது திரும்புவதற்குக் காரணம், உங்கள் மகனைப் பாராட்டும் தகுதி எனக்கில்லை என்பது தான்'' என்று பிரகாஷின் அன்னையிடம், மானசிகமாகச் சொல்லிக் கொண்டாள்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran

நாட்டிலுள்ள செயல்திறனை மேலும் சீராக்கி நாட்டின் வளத்தை மேம்படுத்துவதையே தனது குறிக்கோளாகக் கொள்வதன்றோ ஒருவரது மேதாவிலாசத்திற்குச் சான்று!



பல ஆண்டுகளுக்கு முன்பே—அதாவது 1890லேயே இந்தியாவின் ஏழ்மை நிலைக்குக் காரணம் வாய்ப்பின்மை என்பதை ஜெம்ஷெட்ஜீ டாடா உணர்ந்தார்.

அவ்வாய்ப்புகளை அளிப்பதற்கென்றே 1921ல் ஜெம்ஷெட்பூர் டெக்னிகல் இன்ஸ்டிட்யூட் துவங்கப் பட்டது. கடந்த ஐம்பத்து மூன்று ஆண்டுகளாக நாட்டின் நற்பணிக்காக மிகச் சிறந்த எஃகுத்துறை நிபுணர்கள், தலைசிறந்த இந்தியத் தொழில்நுட்ப அதிகாரிகள், எஞ்ஜினீயர்கள் மற்றும் டெக்னீஷியன்கள் இங்கு பயிற்சி பெற்றுள்ளனர். இவர்கள் இந்தியாவின் பொதுத் துறையிலுள்ள நிறுவனங்களாகிய ஹிந்துஸ்தான் ஸ்டீல், பொகாரோ ஸ்டீல் மற்றும் ஹெவி என்ஜினீயரிங் கார்ப்பொரேஷன் இவற்றிலும் டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனியிலும் பணி புரிகின்றனர்.

டாடா ஸ்டீல்

HT-TIS-7354 A

REGISTERED No. M. 4332
Registered as a Newspaper in Ceylon

